உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
பன்னிரண்டாந்திருமுறை.

விநாயகர்

திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா,
விநாயகராநுபூதி,
விநாயகரலங்காரம்,
சிவானந்தலகரி,
தேவிமானதபூஜை, சிற்சத்தியஷ்டகம்,
முருகர் மும்மணிக்கோவை,
முருகேசர்பதிகங்கள்,
சடையீசர்தேவாரப்பதிகம்,
குருஸ்தோத்திரபஞ்சகம் இவைமுதலியன
திருவருட்பிரசாதத்தால்

சிவானந்தமூர்த்தி

அன்புகூர்ந்துபாடிய
தோத்திரப்பிரபந்தங்கள்.

சென்னை வண்ணாரப்பேட்டை
பு. சு. கிருஷ்ணசுவாமிபிள்ளையவர்கள்
இலக்ஷ்மீவிலாஸஅச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதி-சகளஎ—யுவஞூ வைகாசிமீ
(Registered Copy Right.)

1875

சிவானந்தமூர்த்தி
பாடியருளிய
சாத்திரப்பிரபந்தங்கள்.

—*—

ஸ்ரீராமமூர்த்தி சிவன்முத்தியடைந்த ஞானவாசிட்டசருக்கமிரண்டு
ஆத்மபோதம்
திர்க்திரிசியவிவேகம்
தக்ஷிணாமூர்த்தியஷ்டகம்
சுசாஷ்டகம்
சிவோகபஞ்சகம்
மநீஷாபஞ்சகம்
மோக்ஷசாதனபஞ்சகம்

இவைமுதலியன.

சமஸ்கிர்தமொழியிற் பண்டிதரான மகாநுபாவர்களால் கூறப்பட்ட இவ்வருமையான பிரபந்தங்களை மொழிபெயர்த்துத் தமிழ்க்கவிதையாகப்பாடி சுவாநுபவம்பெற்று உலோகோபகாரமாக அச்சிற்பதிப்பித்து பிரசுரஞ்செய்து கிர்தகிர்த்தியராய் பரமபுருஷார்த்தமடைந்தனர்.

உ

சிவமயம்.

—*—

விநாயகர்
திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

உபாசனா காண்டம்.

பூமேவு நான்முகனும் புண்டரிகக் கண்ணனண்ணல்
தாமேவு முத்தொழிலுஞ் சாதிக்க—மாமேவும் க

ஆதிவி நாயகனை யர்ச்சித்துப் போற்றிசெயத்
தீதில்வரந் தந்த திறம்போற்றி—பூதலத்தை உ

ஆக்க லளித்த லகற்றலெனு முத்தொழிலும்
ஊக்கநெறி தேரு துயங்குங்கால்—மாக்கருணை ந

விஸ்வரூ பங்காட்டி மேவுவித்துத் தன்னுள்ளே
விஸ்வசிர்ட்டி தேற்றும் விறல்போற்றி—விஸ்வத்தை ச

விச்ன கணேசனருள் வேண்டாது தாந்தொடங்கப்
புக்கவினை கோடியதாய் புன்கணுறிஇ—அக்கடவுள் ரு

தாளிணையைப் போற்றவந்து தன்கிரியா ஞானசத்தி
நீளருளா லாற்றுகென்ற நேர்போற்றி—மீளவவர் சா

தன்மகளாய்த் தோன்றத் தவஞ்செய் தவாருளால்
மன்னுசித்தி புத்தியெனு மாநாமங்—துன்னிவர எ

ஆண்டகண நாதற் கருமணஞ்செய் வித்துவந்து
நீண்டதொழில் பெற்ற நிலைபோற்றி—நீண்மால் அ

மதுகை யிடவனொனு மாவசுரர் தம்மால்
சதுரிழந்தங் கீசனடி சார்ந்து—துதிசெயவும். கூ

தேற்றிக் கணேசன் திருவருளால் வெல்கவெனப்
போற்றிவலி பெற்ற புகழ்போற்றி—ஆற்றலுள க0

வீமரா ஜன்வனத்தை மேவிவிஸ்வா மித்திரனை
ஆவன்மகப் பேறதனை யாசிக்க—தாவுமுன்முன் கக

வல்லாள மாராஜன் வாய்த்தமகன் றக்கனெனும்
நல்லான்று யோடுபிற நாட்டிணைந்து—பொல்லாநோய் கஉ

தீர விநாயகனைச் சிந்தித்து முக்கலனால்
சீர்பலவும் பெற்றதுணை சீர்போற்றி—நேர்வல்லான் கங

முக்கட் கணேச முதல்வனடி சிந்தித்து
தக்கமுத்தி பெற்ற சதுர்போற்றி—மிக்கவவன் கச

சந்ததியிற் றோன்றச் சதுர்விமன் கோசிகனால்
முந்தருளைப் போற்றநெடு மொய்ம்புடைய—மைந்தனுக்கு கரு

மாங்கதனைப் பெற்று வளர்சார்வ பௌமனென
ஆங்குமுடி சூட்டு மருள்போற்றி—தீங்குசெயும் கசு

இந்திரற்குக் கோதமனு விட்டபெருஞ் சாபமறச்
சிந்தித்துச் சிந்தா மணியருளால்—முந்துகுறி கஎ

ஆயிரங்கண் ணாக வமரற்குத் தோன்றவைத்த
நேயவினை யில்லா நெறிபோற்றி—வாய்ந்தருக்கு கஅ

மாங்கதமா ராஜன் வலியப் புணரவந்த
தேங்குகவி மாமுனிவன் றேவியெனுந்—தீங்கார் ககூ

முகுந்தையிடு சாபத்தால் மூண்டதொழு நோயைத்
தகைந்தாள் கணேசனருள் போற்றி—முகுந்தைவரும் உ0

இந்திரனைக் கூடி யெழிலார் கிரிச்சமத
மைந்தனைத்தந் தாங்கவனு மாமுனியாய்—முந்துமுனிக் உக

கூட்டத்தில் வாதாடிக் கூறுமிழி வோர்ந்துபிதா
வாட்டமற வோது மனுவுணர்ந்து—சேட்டுறச் ௨௨
சிந்தித்து நீடிருந்த தியானத்திற் றோன்றுபலி
மைந்தன்க ணுனுந்துவா மந்திரத்தை—வந்தித்து ௨௩
மூவுலகுந் தான்பணிய முப்புரமும் பெற்றரசு
மேவத்தந் தாண்ட விறல்போற்றி—தேவரெலாம் ௨௪
நாரதனைக் கண்டு நவின்றருளே காட்சரத்தை
ஆர்வமொடு தாஞ்செபிக்க வைங்கரனார்—நேராக ௨௫
வந்து குறைதீரும் வகையருள்வோம் நீர்சிவன்பால்
முந்தடைமி னென்ற முறைபோற்றி—நந்துபலி ௨௬
வாழ்புரத்திற் சென்று மறையோன் வடிவாகத்
தாழ்வில்கை லாயச்சிந் தாமணியை—வாழவருள் ௨௭
என்றலுமே நந்தேனென் றீசனெடும் போர்தொடங்க
நின்றவிம லற்கருளு நேர்போற்றி—வென்றிபலி ௨௮
முப்புரத்தோ டுஞ்சென்று மூண்டபோ ரிற்படைகள்
குப்புறவீழ்ந் தோடக் குலைகொலைந்து—செப்பரிய ௨௯
ஆற்றலுடை முப்புரமு மாங்கவனு நீறுபடச்
சீற்றநகை செய்த திறம்போற்றி—போற்றிமவான் ௩0
மாமகளாய்த் தோன்றி மதியா வணிசதுர்த்தி
காம்ருநாண் மாவிரதங் கண்டவுமை—தாமகிழும் ௩௧
அத்தனருள் பெற்றுமண மாங்கடையப் பேறளிக்குஞ்
சித்திகணே சன்மகிமைச் சீர்போற்றி—உத்தமனாங் ௩௨
கர்த்தமமா ராஜனிந்தக் காசினிமுற் றாளுங்கால்
அர்த்தமுணர் பிருகு வரங்கடையப்—பத்திசெயூஉ ௩௩

தாமரசு பெற்ற தவஞ்சதுர்த்தி மாவிரதம்
ஆமெனக்கேட் டாற்று மருள்போற்றி—பூவுலகை ௩௪

ஆண்டநள மாராஜ னுங்கடைந்த கோதமனால்
மாண்டஜென்மங் கௌசிகன்சொல் மாவிரதம்—பூண்டதினால்

இவ்வரசு பெற்ற தினிப்பகைதீ ரச்சதுர்த்தி
அவ்விரதஞ் செய்வித் தருள்போற்றி—செவ்வியகோற் ௩௬

சந்திராங்க தன்போரிற் சாய்ந்தடைந்த பாதலத்தில்
விந்தைமங்கை மார்தழுவ வேண்டவெறுத்—திந்துமதி ௩௭

நாரதன்கூ றுஞ்சதுர்த்தி நல்விரதம் பூண்டியற்ற
ஊர்பரிமேற் றந்த வரம்போற்றி—பேர்பெரிய ௩௮

தாருகனாற் றேவர் தளர்ந்தான்பாற் சென்றுரைக்க
வீரமொப்பில் சண்முகவே ஊத்தரலும்—சீர்முருகர் ௩௯

அண்ணா வெனக்கிருஷ்ணை யாற்றருகிற் சிந்திக்க
வண்ணமயி லீந்த வளம்போற்றி—நண்ணிரதி ௪௦

ஈசனைத்தாழ்ந் தேற்ப விவட்குருவாய்த் தந்தமதன்
ஆசில்சிவ னோதியவே காக்ஷரத்தால்—மாசில்கணை ௪௧

நாதனருள் பெற்று நவையகன்று கண்ணன்பால்
நீதின்மக னான திறம்போற்றி—போதமிகும் ௪௨

ஆதிசே டன்செருக்கா லாயிரஞ்சுக் காய்ச்சிரசு
நீதிகணே சன்மனுவை நீள்சதுர்த்தி—மாதினத்தில் ௪௩

அன்பால் விரத மனுஷ்டித் தவன்செபிக்க
மன்னுதர பந்தமா மன்போற்றி—முன்மகவான் ௪௪

தேவவிமா னம்புவிமேற் சேரச்சூ ரோசனெனும்
மாவரசன் கண்டுதொழ மாதவத்தால்—தேவர்தொழும் ௪௫

பூர்சண்டி யைங்கரனைப் போற்றியடை நாற்பதவிச்
சீர்காண வந்ததென்ற சீர்போற்றி—பேர்கிருத ௪௬

வீரியமா ராஜன் விழைமகப்பே றுங்குதவச்
சேர்பிதுர்க்கள் வேதாவைத் தேருங்கால்—பூருவத்தில் ௪௭

நம்மகன்செய் பிரம்மஹத்தி நூற்சங் கடசதுர்த்தி
அம்மனுவாற் செய்கென் றருள்போற்றி—செம்மைப் ௪௮

பரத்துவாஜன் வீரியத்தாற் பாரளித்த செவ்வாய்
வரச்சதுர்த்தி நாளிலே வாய்ந்த—திரத்தினால் ௪௯

யார்க்குந்தாம் வேண்டியபே றைங்கரனார் நின்றளிக்க்
மாகக்கோ னான வரம்போற்றி—சோகமறும் ௫௦

நாரதனார் கொண்டுதவு நற்கனியீ சன்முருகற்
காதரவாய்த் தந்த தறிந்தசசி—சீரில்நகைப் ௫௧

பாற்சாபம் பெற்றழுங்கிப் பண்பிற் றவம்புரிய
மேற்பரிசு தந்த விறல்போற்றி—கீர்த்தி ௫௨

பெறுஞ்சுலப மாராஜன் பீடில்மது சூதன்
வறுமைகண்டு தானகைக்க வட்கி—மறிகியிடு ௫௩

சாபத்தை யோர்சுபதை தான்மறுசா பங்கொடுக்க
கோபத் தவன்சபித்த கொள்கையினால்—தாபித் ௫௪

தெருதாய்க் கழுதையா யீனப் புலையாய்
வருதுயரி லைங்கரனார் வாழும்—ஒருகோயில் ௫௫

உட்புகுந்தொன் றேடொன் றுடன்றுசுற்ற மூன்றறுகு
இட்டதிரு மேனியிலே யென்றதனால்—பட்ட ௫௬

அவையபுத்தி பூருவமா யர்ச்சித்த தாகத்
தவர்பூசைக் கொப்பாய்ச் சமைந்தே—இவர்மேவத் ௫௭

தந்துகண னாதரிவர் தம்மைவிம்மா னத்தேற்றி
முந்துவரச் செய்த முறைபோற்றி—வந்தகண ௫௮
நாதர்மே லோர்வினவ நன்றறுகின் மான்மியத்தை
ஓதுவர்முன் ஞளியம ஞற்றளித்த—தீதனலன் ௫௯
தன்னைக் கணேசன் றகைந்து விழுங்குவெப்பம்
முன்னீக் கியதென் முறைபோற்றி—அன்னதனைக் ௬௦
கண்டு கவுண் டின்யர்முதற் கற்றுணர்ந்த மாமுனிவர்
மண்டலத்தி லுள்ளபல மாதவருங்—கொண்டரிய ௬௧
மாமலரின் மேலாய் மதித்தர்ச் சனைபுரியக்
காமருபே றீந்தகடைக் கண்போற்றி—மாமிதிலை ௬௨
ஆள்சனக மாராஜ னண்ணலிலே தான்பரமென்
றேளிதமாய்க் கொண்ட விறுமாப்பு—மாள ௬௩
அருள்சேர் விநாயகரோ ரந்தணனைச் சென்று
பொருள்விளங்கத் தேற்றுபுகழ் போற்றி—மருடீர்ந்த ௬௪
அன்பாற் றனைப்போற் றரியதிரி சிரன்பால்
முன்போ யறுகிரந்து மூள்பசியை—இன்பாக ௬௫
மாற்றி யவன்குடிலை மாளிகையாச் செல்வமுறத்
தேற்றிமுத்தி தந்த திறம்போற்றி—சீர்த்திக் ௬௬
கவுண்டின்ய மாமுனிவன் காதலியாள் கேட்பத்
தவத்தூர்வை மான்மியத்தைச் சாற்ற—அவளறிய ௬௭
ஓரறுகைத் தந்திநிறை யும்பர்கோன்பாற் பொன்கேள்
சீர்பெறநா மென்னத்தான் சென்றுணாக்கத்—தேர்மகவான் ௬௮
நற்குபே ரற்குணர்த்த நாடியவன் றட்டினிடை
பொற்குவையோ டாங்கவனும் புங்கவரும்—உற்றும் ௬௯

அறுசுவைத்த தட்டங் கசையா தமையால்
மறுவின்முனி யன்பு மதித்து—வருமமரர் எ0

மூவரொடு முன்வந்து முத்தனுக்குக் காட்சிதந்து
மேவவர மேன்மேனும் வேண்டியவா—நீவதனுல் எக

முருந்தோடு மூவிதழாய் மூவேழர்ச் சிப்போர்
மருந்தான வாரிதியே போற்றி—பெரும்பாவி எஉ

சாம்பனெனு மன்னவன்றன் ருழொழுக்கத் தாற்குடிகள்
சாம்பப்பல் தீவினைக டாஞ்செய்து—தேம்பி எ௩

இடர்நரகிற் சார்ந்தங் கிருந்துநெடுங் காலம்
புடவியினில் வேடனெனப் போந்தே—அடவியினில் எச

பற்பலரைக் கொன்ற பழியோ ரரக்கனெனத்
தற்றெருட வோடிவன்னித் தாருவின்மேல்—உற்றிட்லும் எரு

அப்பத் திரங்க ளதிர்ந்ததன்கீ ழைங்கரன்மேல்
தப்பிவிழ முத்தியரு டாள்போற்றி—செப்பரிய எசு

நீள்வரங்கள் பெற்று நெடுங்கா லுலகமெலாம்
ஆளு மிரண்யகசி பன்றன்னை—நீளரியாய் எஎ

வன்னி விநாயகனை வந்தித்து மாதவனுர்
தன்னுகிராற் கொண்ட தகைபோற்றி—பின்னர் எஅ

வருமிரணி யாக்கதனை வன்கேழ லாய்க்கொன்
றுரிய விரோசனன்பா லுற்றுத்—திருவார்ந்த எகூ

மோகினியாய்த் தோன்றி முதிர்சிரத்தைத் தொட்டழித்த
வாகைவிண்டுக் கீந்த வளம்போற்றி—ஈகையுள அ0

மாவலிபாற் சென்றவனை மண்மூ வடியிரந்து
பூவுலக முற்றுமிரு பொன்னடியாய்—மேவவொரு அக

தாளவன்றன் பூமுடிமேற் றங்கவைத்துப் பாதலத்தை
ஆளவைத்த வாம னருள்போற்றி—நீள்புவியாள் அ௨
பேர்பிரிய மன்விரதன் பெற்றகீர்த் திப்பிரபை
பாரியராய்க் கொண்டிளையாள் பாலன்பு—சேர்தலினால் அ௩
வஞ்சிக்கப் பட்டயினை மாய்க்கனினை மூத்தாணன்
நெஞ்சமறை யோனுரைத்த நீள்விரதந்—தஞ்சமெனக் அ௪
கண்டறுகு வன்னி கணேசன்று ளர்ச்சிக்கக்
கொண்டவரு ளாலணித்த கோமகனை—மண்டுவிடம் அ௫
கேள்கிரிச்ச மாமுனியாற் கேதமற மாற்றியே
ஆளருண்மா தங்க னடிபோற்றி—நீள்சீர் அ௬
அவரவ மாமுனிக்கு மன்னைசுமே தைக்கும்
தவவலியாற் றோன்றுஞ் சமிக்கு—நவமாத் அ௭
தவும்ய முனிமைந்தன் சவுனகர்தஞ் சீடன்
உவமையில்மந் தாரனுக்கு மொத்து—தவமணஞ்செய் அ௮
தங்கவர்கள் கானமுற வன்பர்புரு சுண்டிமுனி
தொங்குமுகந் தொங்கிலையுஞ்சூழ்ந்திவர்கள்—நங்குசெயக் அ௯
கண்டுருத்து நீர்தருவாய்க் கானகத்தில் வாழ்திரொன
விண்டசா பந்திர்க்க வேண்டியே—தொண்டாஞ் ௯0
சவுனகர்தாம் போற்றத் தயைகூர் கணேசர்
உவர்தருவாய் நின்றவிடத் துற்றுப்—பவமகல ௯௧
மந்தாரை வன்னி மலர்தளிராற் பூஜைசெய
நந்தா வரமளித்து நன்மைதர—முந்துமனை ௯௨
தன்னுலகஞ் சேரத் தவத்தந்தை யோகத்தால்
அன்னதருக் குள்ளனல மாகியே—மன்னுமகத் ௯௩

இந்திரனை யாதியர்க்கு மீவரவிர்ப் பாகமதால்
நந்தசமி யென்ற நலம்போற்றி—கந்தமலர்ச் கூச
சாவித் திரியைவிட்டுச் சாருங்கா யத்திரியை
மேவுமயன் யாகம் விளக்குங்கால்—போதாத கூரு
சாவித் திரிவெகுண்டு சாபித்த தேவரெலாம்
பாவிப் புனலாய்ப் பரந்தோட்—தேவியர்கள் கூசு
வேதாவைக் கண்டு வினவ விநாயகரோ
தாதாவென் றேத்துகெனத் தாமடைந்து—மேதகைய கூஎ
வன்னிமலர் மந்தாரை மாநிழலி லேங்கரர்சீர்
பன்னவவர்க் கிந்த பதம்போற்றி—தன்னருள்சேர் கூஅ
கீர்த்தியொடு சேய்கிப் பிரசாதன் காசியெய்திச்
சீர்த்திமணி கர்ணிகையாந் தீர்த்தத்தைப்—போற்றியதில் கூகூ
ஆடிவிஸ்வ நாத ரடியிணைகள் சேவித்து
நாடியருள் துண்டி விநாயகனைப்—பாடி கOO
ஆசிரிய ரோதுமனு வைங்கரர்நா லக்ஷரத்தை
வாசியொடு முச்சரித்து வந்திக்கத்—தேசார் கOக
கணேசர்திருக் காட்சிபெறக் காத்திருந்தார் நீணு
பணுமுடியைந் தோடுவந்து பன்னுங்—குணுளர்க . கOஉ
இம்மகனே ராயிரமாண் டிவ்வுலகை யாண்டிற்றில்
நம்முலகைச் சார்கவென நற்பரசும்—அம்மகன்கைத் கOங
தந்தருளப் பெற்றவர்கள் தந்தையிடஞ் சேர்ந்தவரால்
மூந்தாசு பெற்ற முறைபோற்றி—இந்தவகை கOச
முந்துபிர மன்கூற முற்றும் பிதுர்தேவன்
நந்துமக னுற்ற நணிவணர்ந்து—வந்தவன்பால் கOரு

அப்புத் தகமளித்தே யன்பாற் சதுர்த்தியினில்
முப்புவிபோற் றும்விரத முற்றுகெனச்—செப்பத் ௧0௬
தலைமேற்கொண் டன்பாசச் சாதித்துப் பெற்ற
குலமகன்கை காலில் குறையால்—புலமுனிவன் ௧0௭
தெத்தாத் திரயன்வரச் சேவித்தே காக்ஷரத்தை
பத்தியொடு பெற்றதனைப் பல்காலஞ்—சித்தமுற ௧0௮
ஐங்கரர்தாட் போற்றவரு ளாயிரங்கை காலிரண்டு
துங்கசர ணைஞ்ஞூறுந் துன்னியே—அங்குகற்ப ௧0௯
காலமுற்றும் வாழ்ந்து களித்துலகம் போற்றிசெயச்
சீலமுத்தி யீந்த திறம்போற்றி—தாலமிசைத் ௧௧0
தங்குமிந்திர மானஞ் சரித்தோங்க வோர்விரதி
அங்குவரச் சூர்சேன னுயுங்கால்—புங்கவிமா ௧௧௧
னம்மொன்று மேவவலை தவ்வூர்ப் புலைச்சியைக்கொண்
டிம்மெனச்செல் காலத்தவ் விந்திரன்றேர்—திம்மென் ௧௧௨
றெழுந்தேக மன்னன்கண் டேதென்னத் தூதர்
தொழுஞ்சதுர்த்தி நைவேத்யந் துய்த்தே—அழுந்தத் ௧௧௩
திருநாம மூன்றுதாஞ் செப்பியபே றென்னப்
பெருமான் விரதத்தைப் பேணி—வருமாசி ௧௧௪
கிஷ்ண சதுர்த்தியினிற் கேடில்விர தம்பூண்டு
இஷ்டசித்தி பெற்றுநெடு நாளிருந்து—கஷ்ட ௧௧௫
இருவினையு மாய வினையில்விமா னத்தில்
துணைவரொடுஞ் சேர்த்ததுதி போற்றி—பணைபுயத்துக் ௧௧௬
கார்த்தியவீ ரன்வேட்டை கானகத்தி லாடிவரச்
சீர்த்திசம தக்கினியின் சேவையுறீஇ—ஆர்த்தவன்பரல் ௧௧௭

நல்விருந்தூட் டெஞ்சிறப்பை நாடிவரு தேனுவினை
பன்முறைகேட் டியாப் பகைமையினுல்—கொல்வதற்கு ககஅ

போர்தொடங்கி வெற்றியின்றிப் புக்கவனை வஞ்சனையால்
கோறல்செய்து ரேணுகையைக் கூரம்பால்—ஊறுசெயச் கககூ

சோர்ந்திருந்தாள் ராமனெனுந் தோன்றல்வரக் கண்டழுதாள்
சார்ந்தவினை யோர்ந்துருத்துத் தங்குரவர்—சேர்ந்த கஉ0

வழிக்குத் துணையா வருசருமஞ் செய்தான்
விழிக்கிடனுய்ச் சொற்றமனு விண்டு—செழித்தமத கஉக

மாமுகவற் போற்றவருண் மாப்ரசும் நீள்வயதும்
ஏமுறப்பெற் றோங்குமிசை போற்றி—சோம கஉஉ

சேகரனுர் வாழ்கயிலை சேர்ந்தன்பால் ராவணன்றன்
சோகமறச் செய்தவத்தைச் சூழ்ந்தரனுர்—போகமுறத் கஉங

தந்தசிவ லிங்கத்தைத் தன்கைக்கொண் டேகுமுழி
வந்தசிறு மைந்தன்கை வைத்தகல—நந்தன் கஉச

நிலத்திலிடப் பேர்த்தெடுத்தும் நேராது நொந்து
சலத்தோடுங் குட்டத்தா னேங்கிப்—பலத்தால் கஉரு

வானி லெடுத்தெறிய வன்மைகுன்றித் தாள்வணங்கித்
தேனனைய தோத்திரங்கள் செப்புதலும்—கூனியகைக் கஉசா

கொண்டுன் றலையினிடைக் குட்டிக்கொள் ளென்றுசொலி
கண்டுவந்த சீர்த்திக் கதைபோற்றி—பண்டொருகால் கஉஎ

சூரபத்மன் றன்னுற் றுயருற் றகன்மகவான்
சீர்காழி யென்னுந் திருப்பதியில்—பேரன்பால் கஉஅ

நந்தனமொன் றாக்கி நறுமலராற் சங்கரனை
வந்தனைசெய் தேற்றும் வகைதடுக்க—முந்தசுரர் கஉகூ

வான்வறக்கச் செய்திட்லும் வந்தடைந்த நாரதனைத்
தான்பணிந்து கேட்பத் தவனுரையால்—மேன்மைக் ௧௩௦
கணபதியைப் போற்றவவர் காகமதாய்ச் சையக்
குணவகத்தி யன்சரகங் கொட்ட—அணைகங்கை ௧௩௧
சென்றகன்ற காவிரியாய்ச் சேர்ந்து வளம்பெருக்க
நின்ற முனிமுனிய நீள்வடிவை—நன்றவனுங் ௧௩௨
கண்டுகுட்டிக் கொள்ளக் கமண்டலத்தைத் தானிறைத்துக்
கொண்டருளும் பெற்ற குணம்போற்றி—தொண்டுசெயும் ௧௩௩
வேதா மனத்தால் விளங்கேழ் புதல்வருக்குள்
மேதாவாங் காசிபனர் மேன்மையுற—ஓதியருள் ௧௩௪
ஏகா க்ஷரத்தை யினிதுசெபித் தாயிரமாண்
டோகார வைங்கரனு ரோங்குதவம்—வாசாகச் ௧௩௫
செய்யதிவ்ய மேனிகொடு சேர்ந்தருளி மூஷிகமேல்
ஐய்யதிருக் காட்சிதரத் தொண்டரொழுந்—தைய ௧௩௬
அடியே னுயிர்க்குலங்க ளாக்கவென்பா லன்பாய்
நெடியகஸ்ய பந்தரென நீரும்—முடிமதலை ௧௩௭
ஆகவெனப் போற்ற வருள்செய் தவன்மக்கள்
ஏகமொடேழ் மந்திரத்தை யோதிவர—ஓகையொடும் ௧௩௮
வள்ளலா ராங்கவர்க்கு வாய்ந்தவரந் தந்தருளிப்
பிள்ளையா ரானபெருஞ் சீர்போற்றி—வள்ளலருள் ௧௩௯
நாடியுபா சித்தேத்து நல்லோ ரடைந்தவரம்
தேடியுளாத்தோ மினியத் தேவர்பிரான்—ஆட்ல்செயும் ௧௪௦
லீலையவ தாரங்க ளேனோ யுளாக்கவென்னுள்
ஆலயனைப் போற்றி யருள்போற்றி—தாலமிசை ௧௪௧

லீலாகாண்டம்.

வக்ரதுண்ட மூர்த்தியா வந்தவவ தாரத்துத்
துக்கமற மாற்றியதொல் சீர்போற்றி—தக்கதமிழ் கசஉ
நாடா ளபிசித்து நல்வரத்தாற் பெற்றமகன்
வாடாக் கணனென்பான் மாதவஞ்செய்—தேடார் கசங
நறுங்கொன்றை வேணியனார் நல்லருளாற் குன்றாப்
பெருஞ்செல்வம் நீள்வலியும் பெற்று—வருந்தாமல் கசச
மூவுலகும் வென்று முடிசூடி யாளுங்கால்
மாவனத்துவேட்டைக்கு வந்திளைத்துத் —தேவர்தொழுஞ் கசரு
சீர்கபில மாமுனிவர் சேர்ந்துறை யாசிரமத்தில்
நீர்மையொடும் போய்விருந்து நீடுதவும்—பேர்மருவு கசசு
சிந்தா மணிமகிமை தேர்ந்தினிது கேட்பவவர்
மைந்தா நமக்குயிராய் மன்னுமென—நொந்ததனை கசஎ
வன்பாற் கொடுபோக மாமுனிவன் முன்முனிந்து
முன்னிற்கே லென்றுதவ முற்றிருந்தங்—கன்புசெய கசஅ
ஐங்கரனே மாக்கினியி லாங்குவரக் கண்டொத்து
துங்ககணன் வீரமெலாந் தூள்படுத்துத்—தங்குபிதா கசகூ
வந்துதரச் சிந்தா மணிமுனிக்கீந் தாங்கவனும்
தங்களத்தி விட்டவிநே தம்போற்றி—செங்கமல கரு0
வேதியனார் கொட்டாவி விட்டதனு லுற்பவித்துப்
போதருசிந் தூரனெனும் பொற்புடைய—தீதார் கருக
நெடியவுடல் பத்துமுடி நீடுமணம் வீச
அடிதொழுவாற் கண்டுவிதி யஞ்சி—முடிவறியான் கருஉ
நல்வரங்கள் தந்து நனிநீ பகைத்தோரை
புல்லிநீ றாக்குகெனப் போதித்துச்—செல்ல கருங

விடுத்தவனை யேதழுவ மேவப் பயங்கொண்
டடுத்தவிண்டு சொற்கேட் டகன்று—கடுத்தேகி கருச

ஈசனிடஞ் சென்றங் கெதிர்ப்பக் கணபதிவந்
தாசகல நீக்கு மருள்போற்றி—பேசவனை கருரு

மாய்ப்பதற்கா வம்பிகைபால் வந்துதிப்ப வஞ்சனையாத்
தாய்வயிற்றிற் சிந்தூரன் சேய்தலையைப்—போயறுக்க கருசு

அன்னசெய லீசனறிந்துமுனந் தான்போற்றும்
மன்னுமகே சன்யானை மாத்தலையைத்—துன்னி கருஎ

வருமைங் கரமூர்த்தி வானவர்கள் போற்றப்
பொருதடர்ந்த சிந்தூரனைப் போக்க—வருஞ்சீர் கருஅ

விராட்டுருவங் கொண்டவன்றன் வீரமெலா மாய்த்துத்
தராதலங்க ளுய்யவவன் றன்னை—நிராகரிக்கப் கருகூ

பற்றிக் குழைத்துப் பருமத் தகத்திலிட்டுச்
குற்றமற முத்திகொடுத் தாய்போற்றி—மற்றுமொரு கசுய

கோனபிநந் தன்செய்யுங் குற்றமுள யாகத்தைத்
தானிந்தித் திந்திரனுற் சார்ந்தனுப்பும்—மாகால கசுக

ரூபி விலக்கி நெடிதுசெயும் விக்கினத்தால்
கோபித்துத் தேவரொடுங் கூர்முனிவர்—தாபித்துத் கசுஉ

தஞ்சமென வைங்கரர்தாட் சார்ந்துதொழத் தாமிரங்கி
அஞ்சலெனக் கூறி யரியதவ—மஞ்சன் கசுங

சவுபரியா மாமுனிவன் சாருமனோன் மனையை
அவமதியாற் காந்தருவ னன்னைத்—தவமுனிவன், கசுச

மூஷிகமாய்ப் போதியென முன்னின் றவன்பணியத்
தோஷமற வைங்கரனார் தொல்பரியாய்—பாச கசுரு

வினையகல்க வென்ன விளங்குபரா சன்பால்
தனையனென வைங்கரர்தாஞ் சார்ந்து—மனமகிழும் கசுசு
அன்பால் வளர்ந்துவர வாச்சிரமச் சாரலந்த
வன்பாகு வந்து வருத்துதலும்—முன்பார் கசுஎ
விநாயகர்தம் பாசத்தை விட்டதனாற் பற்றித்
தனாதெதிரே கொண்டுவரத் தாழ்ந்து—சனாதரனே கசுஅ
வாகனமாக் கொள்கவென மற்றவ் வரமளித்து
மோகவிக்னன் றீவினையு மோசிக்க—வூகமொடு கசுகூ
அங்குசத்தை யேவ வவற்கொண்டு முன்விடலும்
மங்கி யவன்பணிந்து வாழ்த்திடலும்—அங்கருணை கஎ0
யாலே யடியர்க் கநுகுணனா கென்றவன்போர்
மேலர்க்கிக் கொண்ட விறல்போற்றி—தோலாத கஎக
சங்காசு ரன்கமலா சுரனெனச் சாரவுணர்
அங்கமலன் போற்றிசெயு மாரணங்கள்—தங்களவாற் கஎஉ
கொண்டு கடலொளிப்பக் கூர்ந்தரன்பாற் சென்றுரைக்கக்
கண்டவர்சொற் கேட்டுக் கணேசரடித்—தொண்டுசெய கஎங
ஆங்கவர்மல் லாலனென வாரணங்க டாங்கிவரும்
ஓங்குமடி யாருடனே யொண்புவியில்—பாங்குடைய கஎச
சுந்தரராச் சீர்மதிற் றோன்றிமுனி வோர்பணிய
விந்தையுற வீற்றிருக்கும் வேலையினில்—திங்கமுறுஞ் கஎரு
சங்காசு ரன்கேட்டுத் தம்பிகம லாசுரனை
அங்கனுப்ப வைங்கரனா ராய்ந்துடன்று—சங்கையிலா கஎசு
போரிற் கலக்கப் புறங்காட்டிப் பின்வரலும்
சீர்புத்தி தேவி செலுத்துபடை—வீரமெலாம் கஎஎ

போக்க வெகுண்டு புணர்த்துப்பல மாயையினால்
ஊக்க முனிந்தம்ம னுடன்றருமோர்—சேய்க்குத் களஅ
திருப்பெயரி லாபனெனச் செப்பவரம் பெற்றே
உருத்தெழுந்தம் மாயபடை யோட்டித்—தருக்கி களசு
விநாயகர்தாள் போற்றிசெய வேதமயின் மேலாய்த்
தனுதுதிறல் காட்டச் சமர்செய்—துனுதுமுனம் கஅ0
பாசத்தாற் கட்டிவரப் பாதம் பணியாது
வீசுபடைப் பற்பலவின் வீறுகெட—வாசிக் கஅக
கமலாசு ரன்மூன்று கண்டமதாய் வீழத்
தமகுலம் விட்டதகை போற்றி—அமைதலத்தில் கஅஉ
பேர்கண் டகநகரிற் பேரரசு செய்திருந்த
சீர்சக்ர பாணியெனச் செப்பரசன்—ஓர்மகப்பே கஅங
றின்றிவனஞ் செல்ல வெழுங்காற் சவுனகர்வந்
தோன்றியுரை ஞாயிறுமா வொள்விரதம்—இன்றுமுதல் கஅச
செய்துவரு கென்றுமனுச் செப்பவவன் செய்துவர
உய்யவுயர் மார்த்தாண்ட னொருருவாய்—வையந் கஅரு
தலைவனைப்போ லுக்கிரையைச் சார்ந்துகரு வீந்தான்
குலவுமனத் தேவியுரை கொண்டு—அலைவின்மனத் கஅசு
தாங்கவனுந் தேவ வனுக்கிரக மென்றுகண்டு
பாங்குடன்சேய் காண்பருவம் பார்த்திருக்க—வீங்குமுலை கஅஎ
தன்கருவால் வெப்பஞ் சகியாது சிந்துநதி
மன்கனாயைச் சேர்ந்து மகவளிக்க—அன்னமகன் கஅஅ
செஞ்சடையு முக்கண்ணுஞ் சேர்கரத்திற் சூலமொடு
வெஞ்சக் கரத்திநெடு மேவுதலும்—அஞ்சியவள் கஅகூ

தோழியொடுஞ் சோபமுறச் சூழ்வருணன் றன்கொணர்ந்து
ஆழியர சன்முன்விட வாங்கவனும்—வாழியெனச் கசுO

சிந்துவெனும் பேர்தரலும் செல்வமொடு தான்வளர்ந்து
வந்தசுக்ர னேதுமனு வாற்பரனை—வந்தனைசெய் கசுக

தாற்றுங் கடுந்தவமீ ராயிரமாண் டாதித்தன்
போற்றுபிம்பத் துட்சிவனைப் பூசிக்க—ஊற்றுமருள் கசுஉ

வாரியவன் முன்றோன்றி யாதரித்த நீள்வரந்தந்
தோரிமைப்பிற் செல்ல வுடனெழுந்து—பார்முழுதும் கசுங

வானும் பிலனு மலைந்துபோர் விண்டுமுதல்
ஏனையனா வன்சிறையி லிட்டதனால்—தீனனாயாள் கசுச

ஐங்கரனார் முக்கணொடு மம்மையிட்த் தாறுபுயத்
தங்கைமக னாக வவதரித்துப்—பொங்குசிந்து கசுரு

மாவவுணன் விட்ட வகைத்திறல்சேர் பல்படையும்
ஓவரச்சிந் திப்பினவ னுற்றிடலும்—சோபித்தே கசுசு

ஐயன் மயூரமிசை யாரோகணித்தெழுந்து
வெய்யபடை பற்பலவும் வீசிவிடக்—கையனுடன் கசுஎ

தன்படையான் மாற்றிச் சதுரோ டனந்தமுறை
வன்படைகள் மாறிவிட மாயையினாற்—புன்னடைசெய் கசுஅ

வீறுமுற்று மாற்றி விடுத்தவவன் சூலத்தைக்
கூறுசெயத் தன்பரசு கொண்டுவிட—மீறியது கசுகூ

வீரமெல்லாம் போக்கி விரைந்தவனைக் கூறுசெயச்
சீரடியிற் றாழுந் திறம்போற்றி—பேர்பெரிய உOO

விந்தியதே யத்தில் விளங்குமகி பாதிநகர்
வந்தாள்து மாசுரனு மன்னவர்கோன்—நந்துமதி உOக

மந்திரிய ரெண்மரொடும் வாய்ந்தமனை யையவர்தரும்
மைந்தரொரு நால்வர்தொழ வான்பணிய—விந்தையொடும் ()

அஷ்ட வயிஸ்வரிய மார்ந்தரசு செய்திடுநாள்
இஷ்ட பிருகுமுனி யீங்கடையத்—திட்டமுறத் ௨௦௩

தாள்பணிந்து போற்றித் தகைசான்ற செல்வமொடு
மேன்மைசிவ பத்தி மிகுந்திடவும்—தானவருள் ௨௦௪

தோன்றியதற் கென்னைமுனந் தொல்வினையென் றேவினவ
ஊன்றுமுனி யுன்னியுரைசெய்வான்—ஆன்றோனே ௨௦௫

சென்மாந் தரம்விகுதிச் செல்வமன்ன னாய்ப்பிறந்து
அன்னதிற்செய் நூறுமக வந்தத்தில்—உன்னியமால் ௨௦௬

நாரதனை யேவ நயந்தவன்வேண் டில்லானைச்
சீரலவென் றேமறுக்கச் சீற்றமுறீஇ—நீரிங் ௨௦௭

கவுணனு கச்சபித்தா னாதலினு லென்னத்
தவனமொடு முள்ளந் தளர்ந்தான்—தவமுடைய ௨௦௮

மாதவனு மன்னன் மனைவி சுமேதையொடும்
ஏதமுறு மாதவஞ்செய் தேன்றகருப்—போதருங்கால் ௨௦௯

தூமாகு ரன்மடியத் தொல்வாக்கு தோன்றநொந்து
ஏமாறித் தன்படையை யேவுதலும்—தாமேவி ௨௧௦

நள்ளிரவின் மாதவனை நன்மனையைப் பள்ளியொடுங்
கள்ளமதாய்க் காட்டிற் கரந்துசெல—தெள்ளருள்சேர் ௨௧௧

ஹங்கரனு ரேவுபடை யாங்கவனாக் காத்தளிக்க
பங்கமுறுந் தூமாகு ரன்பயந்து—தங்கியபின் ௨௧௨

தன்னினத்தாற் சீற்றஞ் சமைந்துபடையெடுக்க
அன்னதுணர் பாலசந்திர ஹவங்கரனூர்—நன்மகனாய்ப் ௨௧௩

பாலுண்ட வாயிற் படர்வித்த வான்புகையால்
மாலுற்றுத் தூமாசு ரன்மடிய—வேல்பெற்று உகச

மாதவமா ராஜன் மனைவியொடு நாடணைந்து
ஏதமிலா விண்டுமக வீன்றளித்துப்—பூதலத்தை உகரு

ஆண்டு நெடுங் கால மரசுமகற் கீந்தன்பால்
வேண்டுமுத்தி தந்த விறல்போற்றி—ஈண்டுங்
கணேச ரவதார முப்பாசனு காண்டங் உகசு

குணுதி சயமோடுங் கூறும்—பணுமுடியார்
வாழ்க்கைலை மால்வரையின் வண்மையனந் தங்கூறில் உகஎ

சார்வசந்த காலத்திற் ருமகிழ்ந்தங்—கேழ்புவியும் உகஅ

ஈன்றெடுத்த வம்மையொடு மேந்தையுத்தி யாவனத்தில்
வான்போற்றச் சென்றுலவி வந்திடுகால்—மேன்மைசித்ர உகசு

மண்டபத்தைக் கண்டிரண்டு மால்யானை தாம்புணர்ந்து
கண்டசுகந் தாமிருவர் கண்டிருக்க—அண்டர்பிரான் உஉ0

ஐங்கரனுர் தாமகவா யாங்குவரக் கண்டெடுத்துப்
பொங்குபுள காங்கிதமாப் போந்துமனை—தங்கவைத்துப் உஉக

போற்றி யுலகமெலாம் பூசைசெயத் தாமகிழ்ந்து
மாற்றரிய வின்பால்வட் டாடுங்கால்—சீர்த்திருமால் உஉஉ

சான்ருகச் சூள்பேசித் தாய்வெல்லச் சங்கரற்கா
வன்றுரைக்கச் சீறி யிடுசாபங்—கான்றிரியும் உஉங

பாம்பாய்க் கணபதியாற் பாவமறக் காத்திருக்கத்
தேம்பிவருந் தேவர் சிறைநீக்க—ஆம்பன்முகா உஉச

சூரனட்ல் போக்கத் தொட்ரசலன் ருேண்மேலாய்
வீரப்பூ தப்படைகள் மேவிவரப்—பேரிசங்க உஉரு

மாதி யலைகடல்போ லார்த்தெழும்ப் நாற்றிசையும்
பூதியெழச் சென்றுமதங் காபுரத்தில்—தீதகல உஉசா

வஞ்சக் கஜாசுரன் வன்படையைத் தன்படையால்
துஞ்சுவிக்க முன்னவனுற் றூவுபடை—பஞ்சுபடத் உஉஎ

தன்கைக் கதைமழுவாற் சாய்த்திட்டும்பின்னுமவன்
முன்சேர் பெருவரத்தின் மொய்ம்புணர்ந்து—துன்னித்தன் ()

கொம்பொன் றொடித்துவிட்க் கொன்றவனைத் தன்கைவர
வம்பனெடு மூஷிகமாய் மாறிவர—எம்பெருமான் உஉகூ

ஆரோ கணித்தவன்மே லஞ்ஞான நீக்கிவரம்
பேரா தளித்தபெருஞ் சீர்போற்றி—சேர்விண்டு உநு0

சாபமொழித் தண்ணலுறை தண்கைலா யஞ்சென்று
கோபுரத்திற் றேவர்குட்டிக் கொண்டுதொழத்—தீபமென உநுக

வீற்றிருந்தார் விக்னகணபதி தன்மேன்மை தனைப்
போற்றியுல குய்யும் புகழ்போற்றி—ஆற்றன்மிகும் உநுஉ

அங்கதே யத்தி லதிகாத் திரநகரில்
துங்க ரவுத்திரனுந் தொன்மறையோன்—தங்குமனை உநுரு

சாரதையைக் கூடித் தவம்வேள்வி நீடியற்ற
சேர்பலத்தாற் றுமிரண்டு செய்தாலும்—நீர்மையொடு உநுச

நாமந்தே வாந்த னராந்தகனென் றேகொடுத்து
தாமன்பார் பாராட்டித் தண்பிறைபோல்—ஏமஞ்செய் உநுரு

தாங்குவளர்ந் தோங்க வருங்கலைகள் கற்பித்தே
ஓங்குமுனி நாரதரா லோதுவித்த—பாங்குடைய உநுசா

பஞ்சாக் கரமனுவைப் பத்தியுட னேசெபித்தே
அஞ்சா தரனருளை யாதரித்து—விஞ்சுவனம் உநுஎ

சென்றோர் சிவாலயத்தைச் சேவித்துப் பூஜித்து
வன்றழலின் மத்தியிலே வானோக்கி—என்றாழிற் உ௩அ

றோன்றுசிவ பிம்பத்தைத் தோத்திரஞ்செய் தேநோக்கி
ஊன்றுபதி னாயிரமாண் டுற்றதவஞ்—சான்றான உ௩௯

எம்பெருமான் முன்றோன்றி யீறில்வரந் தந்தளிக்க
தம்பெருமை யாலே தருக்கெய்தி—உம்பனாயும் உ௪0

இம்பனையு மற்றிருவ ரீட்டழித்துத் தம்வலியால்
தம்மரசு மூன்றுலகிற் றாஞோங்க—வெம்பினராய் உ௪க

இந்திரன்வே தாமுதலோ ரீட்டழிந்து தாமொதுங்க
நொந்ததிதி காசிபனை நோக்குதலும்—சிந்தித்தே உ௪உ

ஐங்கரனார் தம்மருளா லன்றியவு ணேசர்வலி
பங்கமுறச் செய்பவரிப் பாரிலென்று—எங்கள்பிரான் உ௪௩

தன்மனுவை யோதித் தவம்புரியத் தோன்றியவர்
நன்மகவாய் வந்து நனிவளர—மன்னுந் உ௪௪

தருமந் தழைத்துத் தவம்வேள்வி யோங்க
அருமந்த மாமுனிவ ரன்மித்—திருமைந்தன் உ௪௫

மேன்மைதனைப் போற்ற விறல்சேர் நராந்தகனார்
கான்மழையால் ரத்தவெள்ளங் காட்டியே—வான்மீது உ௪௬

தூமகே துத்தோன்றச் சூழ்ந்திடக்கண் டோடிக்கத்
தாமருண்டு சோதிடர்சொல் சம்பவமோர்ந்—தேம உ௪௭

விரைசைதனை யேவ விழுங்கியவள் செல்லப்
புரைசெய் துடல்கிழித்துப் போந்து—மறையுதத்தன் உ௪அ

துந்துபியாஞ் சூரர் சுகவடிவாய் வந்திடலும்
பந்தெனப்பாய்ந் தாங்கவற்றைப் பற்றியே—முந்துவினை உ௪௯

யாடுதல்போற் கொன்று ரவர்பதத்தைச் சேருதலும்
நீடுமொரு வாவியன்னை நீர்குடையத்—தேடுதல்போல் உ௫௦
ஆங்கிறங்கித் தானே ரட்ல்சேர் கராமுதுகில்
ஓங்கிவினை யாடிதுறை யுற்றிட்லும்—சோங்கியதோர் உ௫க
சித்ரனெனுங் காந்தருவச் செல்வன்றன் முன்வந்து
அத்தனைத்தாழ்ந் தாங்கவன்சா பந்திர—மூத்திகொடுத்
தக்கா சிபரிட்த்தி லாகாஹ தும்புருவென் உ௫உ
மிக்கதவர் வந்தேற்றும் விக்கிரகம்—ஒக்கமறைத் உ௫௩
தாரிவற்றைக் கேட்ட்தந்தைக் காவென்றுவாய்திறக்க
சீரியவத் தேவர்கட்ஞ் சேருல்கை—நேர்கண்டு உ௫௪
எந்தையடி தாழ்ந்தேற்ற வீறிலவற் றைக்கொடுத்து
முந்துமைந்தாண் டாக விதிமுறையே—தந்தை உ௫௫
உபநயனஞ் செய்விப்பா னேர்ந்துளைக்கத் தேவர்
தவமுனிவர் யாவர்களுஞ் சார்ந்த—சபைநடுவில் உ௫௬
பிங்கலனை யாதியைந்து பேரவுண ரந்தணராய்
அங்ஙனடைந் தக்ஷதையா மம்புவிட்—எங்கள் உ௫௭
பெருந்தவத்தால் வந்தபிள்ளை பெற்றியறிந் தைந்து
திருந்த க்ஷதைகொடட்வர்ச் செற்றார்—வருந்தேவர் உ௫௮
காணிக்கை யாகக் கவின்சேர் பிணுகமுதல்
பூணுமணி பற்பலவும் போரேறும்—காணும் உ௫௯
அவரவருக் குள்ள வரும்பொருள்பேர் தந்தார்
இவர்மகிழ்ந்து கொண்டா ரினிதாய்—அவரவர்கள் உ௬௦
சென்றதற்பின் றேவேந் திரனொருவன் சேர்செருக்கால்
நன்றியின்றி வாயுவொடு நற்கனலை—அன்றேவ உ௬க

நின்றபிரான் புன்னகையால் நீக்கிவிஸ்வ ரூப்மெடுத்
தன்னமக வானையுமோ ரண்டத்தில்—துன்னவிட் உசுஉ
மீண்டுவரச் சக்தியின்றி வீறடங்கிப் போற்றிசெய
ஆண்டருளு மொப்பி லருள்போற்றி—வேண்டியவா உசுங
பொற்பட்டும் பல்பணியும் பூண்டுபட்டை தாங்கிமிகு
மற்பொருவி லாச்சிங்க வாகனமேல்—பற்பல்பதஞ் உசுச
சென்று விளையாடி வந்துசேருங் காற்காசிநகர்
வென்றிமன்னன்செய்யும் விவாகத்துக்—கொன்றன்பால் உசுரு
காசிப்னா வேண்டத்தன் காதலனைக் கூட்டுதலும்
நேசமொடு தேரின்மிசை நேர்ந்தேறி—ஆசகலச் உசுசு
செல்போதிற் றூமாக்ஷன் செய்தவத்தாற் சோதிதரும்
வல்லமைசேரொற்படையை வண்கையால்—ஒல்லெனக்கொண்
டாங்கவன்மேல் வீசி யருஞ்சிரத்தைக் கொய்திட்டும்
ஏங்கியவன் மக்க ளெதிர்த்துவர—ஓங்கவனைக் உசுஅ
கண்டுபெரு மூச்சுவிடக் கட்டோ டவர்மாண்டு
மண்டுநராந் தன்கொலுச்செய் மண்டபத்தில்—விண்டிருளக் ()
கண்டுவெருண் டோடிக் கனல்போற் கொதித்தைஞ்ஞூ
றெண்டொகைய சூரர்தமை யேவுதலும்—மண்டியவர் எஎ0
ஆதவனை மேகம்போ லாங்கிரதஞ் சூழ்ந்திடலும்
நாதன்கோ பத்தெழுந்த நாதத்தால்—சேதமுறீஇ உஎக
மாண்டவகை கேட்டு மதித்தரிய மாயைவல்ல
ஆண்டகைய சூரர்தமை யாங்கனுப்ப—ஈண்டிநகர் உஎஉ
எல்லைதனிற் றேர்செல்ல வெண்ணிலலங் காரமொடு
பல்லோர்முன் வந்து பணிந்துவரச்—செல்காலை உஎங

வஞ்சமறை யோர்வடிவாய் வாய்ந்தபெருங் காற்ருகி
விஞ்சு மிடாவுணர் வீறடக்கி—மஞ்சுதவழ் உஎச

மாளிகையுட் செல்கால் மறித்தகூ டாசுரனை
நாளிகே ராஸ்த்திரத்தா னன்றகற்றி—கேளிரொடும் உஎரு

மாமனையுட் புச்கு மலரணைமேல் வீற்றிருந்தார்
காமருல கேத்தக் கருணைசெயூஉ—மாமலரோன் உஎசு

மன்னன் புரோகிதனு மாதரும தத்தனென்பான்
இன்மொழிகள் பேசி யெமதிறைக்குத்—தன்மகளாஞ் உஎஎ

சித்திபுத்தி தன்னைத் திருக்கல்யா ணஞ்செய்ய
பத்திமனைக் கேகப் பகையசுரன்—புத்தியின்றி உஎஅ

விட்டவிருகழுதை வேழமொன்றன் வீறடக்கி
பட்டழிக்கத் தூமாக்ஷன் பன்னிவந்தங்—கிட்டவிடம் உஎகூ

மாற்றியபின் றங்கிவதுவைச் சடங்கியற்றி
போற்றி மன்னன் கோயிலிடைப் புக்கிருந்தார்—சீற்றமொடு()

வந்தவொரு மூன்றவுணர் மாருதமாய் வெங்கனலாய்
அந்தகர் தன்னை யதஞ்செய்ய—நொந்தகலும் உஅக

வாயிலிடைட் வேங்கையாய் வந்துதடுக் கின்றதனைப்
போயரசற் குற்றுப் புகன்றிட்டும்—நாயகனார் உஅஉ

தன்கைக் கமண்டலநீர் தன்னூற் றணித்தொழித்தே
அன்நகளைக் காத்த வருள்போற்றி—பன்னியொடு உஅரு

மன்செய் பணிகொண்டு வாய்ந்தபுரு சுண்டிமுனி
தன்னன் புளித்த நிவேதனத்தை—முன்னன்பாற் உஅச

கூட்டியுணக் கண்டரசன் கூட்டிவந்து தன்மனையில்
ஊட்டவங்ங னுண்ட வொருலீலை—காட்டியபின் உஅரு

சோதிட்நூற் கூறுஞ் சுரனுக்குச் சூட்டுமுத்துச்
சிதவட்டம் போட்டொழித்த சீர்போற்றி—போதொருநாள் ()

கூபனொடு கந்தனெனக் கூறு மிரண்டவுணர்
மாதவனை யாய்க்கிணறாய் வந்திருக்க—ஆதவன்போல் ௨௮௭

உள்ளிறங்கிக் கூப முழக்கித் தவனைதனை
துள்ளிவிழக் கொன்று தொடர்ந்துவரும்—தள்ளரிய ௨௮௮

துங்காசு ரன்னம்பா சூரனந்த காசூரன்
மங்கா தவனை மறைத்திருளாய்க்—கங்கைநகர் ௨௮௯

சூழ்ந்தமலை யாகித் தொடர்மேக மாய்ப்பொழிய
வீழ்ந்தவெள்ள மேன்மேல் விரிந்திடலுஞ்—சூழ்ந்தங் ௨௯௦

கருளு மகோற்கடமா வண்ண லாற்புள்ளாய்
வருசிறகான் மேகத்தை வாட்டி—இருண்மலையைத் ௨௯௧

தூளாக்கி நெற்றிவிழித் தோன்றுகனல் காரிருளை
மீளா தடக்கிவெள்ள வீறடக்க—மாளா ௨௯௨

தவர்வேட னாய்வலையா யாலமர மாகி
இவனா வலைப்படுத்த வெண்ணிக்—கவல்போதில் ௨௯௩

புள்ளான வெம்பெருமான் போர்தவனாக் கைக்கொண்டு
தள்ளாத் தவலோகந் தான்பரந்தே—எள்ளி ௨௯௪

விடுத்திடலும் பெற்ற பிரமனாதன் வீட்டில்
பொடித்துவிழக் கண்டு புலம்பி—விடுத்தவொற்றர் ௨௯௫

வந்துபதங் காசூரன் மாய்ந்தசெயல் தாமுனாக்க
வெந்துமிகச் சீறி வெகுண்டெழுந்து—தந்திரமாக் ௨௯௬

கொல்வே னெனவதிந்திக் கோலமொடு சென்றண்ணல்
செல்காசி யிற்கண்டு சிற்றுண்டி—நல்கி ௨௯௭

விடத்தாற் கொலைகுறிக்க மீண்டதனுல் மாண்டாள்
தொடுத்தடுத்தோர் தீமை தலைய—அடுத்தாகர் உகூஅ
உள்ளாரு மன்னவனு மொப்பி லதிசயங்கொண்
டுள்ளா தரத்துதிக ளோதியபின்—பிள்ளைதனைத் உகூகூ
தத்தமனை வந்தன்னந் தாமருந்த வேண்டுதலும்
அத்த னதற்கிசைந்தாங் காங்கிருந்து—பத்திமிகும் ௩00
சுக்கிலற்குந் தேவிக்குஞ் சூழ்ந்தசன காதியர்க்கும்
ஒக்கவுண்டி யார்க்கு மருளுதவும்—அக்கால் ௩0க
நராந்தகனு லேவுமிரு நச்சகலன் சூலன்
வராநகரில் வந்து மகோற்கடனை—விராவியவர் ௩0உ
தான்பணியக்கூறுஞ்சமாதானச்சேதிகொண்டு
வாளரசற்குற்றுவகுத்துணாக்கத்—தோள்வலியால் ௩0௩
சீற்றமொடுசேனு சமுத்திரங்கள் சூழ்ந்துவர
ஆற்றலொடுங் காசிநக ரண்மிவந்து—மாற்றரிய ௩0௪
தீமைகளைச் செய்து செருக்களத்தில் வந்தடைய
சேமமுறு காசிநகர்ச் சேர்கிருபன்—தாமுந்தன் ௩0ரு
நீள்படைகள் சாகரம்போ னேர்ந்துதனைச்சூழ்ந்துவர
தாள்வலியாற்சென் றிரண்டுதானைகளும்—வாண்முதலாம் ௩0சு
பல்படைகள்வீசிப் பரவியுத்தஞ் செய்போது
வெல்படையாற் காசியர்மன்வெற்றிபெற—நில்லென்ன ௩0எ
சீறி நராந்தகனே தேர்நூழி லாடலொடும்
வீறியரசன் புதல்வர் மேலமச்சர்—போராடக்கிக் ௩0அ
காவல்செய் தான்செய்தி கடிதொற்றர் சென்றுரைக்க
தேவியன்னனல்தாள்போற்றத் தேர்ந்தெழுந்து—பாவியின்மேற்

சென்ற முகத்துதித்த சீற்றத்தாற் பூதகணம்
ஒன்றுபத்து நூரு யிரந்தலையும்—வென்றிகரம் ௩௧௦

அவ்விரட்டி தாங்கு மரும்படையு நீள்வடிவம்
செவ்வியவான் முட்டித் திகழ்ந்தடியை—அவ்வியமில் ௩௧௧

அன்பாற் பணிந்தங் கதிபன் குரூரனென்பான்
வன்பிசியை நீக்க வருந்துதலும்—முன்பார் ௩௧௨

நராந்தன்பெரும்படையை நன்றருந்திக்காசி
வராமன்னன்மக்களொடு மற்ரோர்—இராமுன்பு ௩௧௩

கூட்டிவரு கென்றலுமே கொள்ளைகொண்டுண் டார்ப்பரித்து
வாட்டி னராந்தகன்கை வன்படைகள்—ஈட்டமெலாம் ௩௧௪

உண்டதற்பின்பாசுபதமோச்சுமுன்னமன்மகனைக்
கொண்டுகுழுவோடுவந்து கோமானைத்—தெண்டனிட் ௩௧௫

புன்னகைசெய்தன்பாற் புகழ்ந்திருப்பவீழ்ந்தெழுந்த
அன்னநராந் தன்மாயை யாலனந்தம்—வன்மை ௩௧௬

உகாந்தமழையா யுருத்தவடவாக்கினியாய்
அகாதவளியா யெழுந்தங்காற்றுந்—தகாதபல ௩௧௭

மாயையெலாம் போக்க மறிந்தெழுந்த வங்சத்தைப்
போயொழிய வொன்றொன்றுப் போக்கியபின்—காயமொடும்()

சீறியெழக்கண்டு சினந்துபினு கம்வளைத்துத்
தேறிவிடும்பாணஞ்சிரமறுக்க—மாறுதலை ௩௧௯

பெற்றுவரநோக்கிப்பெரிதுவிஸ்வரூபமொடும்
அற்றவனைத்தாளுங்கிராலாங்கழிக்க—சுற்றத்தார் ௩௨௦

வாழ்மனையில்வீழ்ந்திருண்டவன்றலைகள்கண்டெடுத்து
மாழ்கியதேவாந்தனொடும் வந்தடைந்தங்—காழியென ௩௨௧

வீழ்ந்துபுரண் டேகதறி மேற்பகையை வெல்வலெனச்
சூழ்படைட் வெள்ளத்தொகுதி துன்றிவர—பாழிநெடுங் ௩௨௨
தோட்டினவால் வெம்போர் தொடங்க மகோற்கடர்தாம்
வாட்படைக ளுறு வகைவிடுத்துக்—காட்டெரிபோல் ௩௨௩
மாய்த்திடவு மாயா வலியா னெடும்படைகள்
பேய்த்தேர்கள் போலப் பெருகிவரச்—சாய்த்தொழிக்க ௩௨௪
எம்பெருமான் றேவியரோ டேன்று சித்திதேவிதரும்
கம்புமஷ்ட மாசித்தி நற்படைகள்—சம்பவித்துப் ௩௨௫
பொங்கி யெழுந்தேற்றூர் பொருப்படையெல்லா மழிக்க
தங்கியதேவாந் தன்றனு வெடுத்துச்—சிங்கமெனச் ௩௨௬
சீறிநெடும் போர்செய்யத் தேர்புத்தி தேவிதரும்
வீறுபெரும் பவுத்த விஸ்வனெழுந்—திறுசெயத் ௩௨௭
தேவாந்தகனை யெடுத்தே தின்றுமென் றிடவும்
ஓவாத சூக்க வுருவுகொடு—தாவிப்போய் ௩௨௮
தந்தையைச் சேர்ந்தாங்கோர் தனிமகஞ்செய் தாங்குதித்த
அந்தமிலாக் கார்பரிமே லாங்கூர்ந்து—முந்துவா ௩௨௯
எந்தைமகோற் கடர்கண் டேற்றவன்செய் வெம்போரைச்
சிந்தியவன் பெற்றவரந் தீர்ந்தொழியத்—தந்திமுகம் ௩௩௦
பெற்றெழுந்தோர் கொம்பாற் பெரிதவனைக் குத்தியகால்
பற்றறவீழ்ந் தாரொளியாய்ப் பாதமுற—மற்றதற்பின் ௩௩௧
காசிநகர் சென்றிருந்து காசினிமுன் றும்போற்ற
ஆசிலருள் செய்தங் கரசன்மகன்—தேசுபெற ௩௩௨
மாமணத்தைச் செய்வித்து வண்மைதிகழ் மன்னனெடும்
தாமர்பரி வாரமொடெங் காசிபன்பால்—தாமணுகி ௩௩௩

வேண்டினர்க்கு வேண்டுவரம் மேன்மேலுமீந்தளித்தே
ஆண்டோர் பொற்கோயிலமர்ந்தருளி—சேண்டயங்கும் ௩௩௪

ஆனந்த மாப்வனத் தார்ந்தடிய ருண்ணிறைந்து
மோனந்ததும்பு முதல்போற்றி—மேனந்து ௩௩௫

கைவர்த்ததேயத்திற் காண்பன்மகமென்னுஞ்
சைவத்திருநகரிற் சாரவுணன்—உய்பிரம ௩௩௬

சூரனென்பான் சுத்தவிர்த்தி தோன்றச் சிவனருளால்
பாரதவீணுள் பயின்றிடலும்—வீரவரன் ௩௩௭

வேண்டுவரமியாது வினவென் றருள்செய்ய
ஆண்டவனைநோக்கி யடியேன்கைத்—தீண்டினர்தஞ் ௩௩௮

சென்னியொடு நீறாகச் செய்யும்வரந் தாவென்ன
அன்னதளித் தேனென் றவர்தலையை—முன்தொட்டுக் ௩௩௯

காண்பலெனச் செல்லக் கரந்தருளினுர் தொடர்ந்தே
ஆண்மையொடுந் தேடி யலையுங்கால்—மாண்டிருமால் ௩௪௦

தியவனைமாய்க்கத் தெளிந்தெழில்சேர் மோகினியாய்
ஆயவன்பாற்செல்ல வவன்மருண்டு—நாயகியே ௩௪௧

அன்புசெய வேண்டுமென வாதரித்துப் பின்றொடர
வன்புடனென் போனடன மாடிலுனை—அன்புசெய்வேன் ()

என்றலுமே முன்னின் றெதிர்நிழல்போற் கைநொடித்து
நின்முடிநீள்கைதலை வைத்திடலும்—ஒன்றுடலம் ௩௪௩

நீறாகக்கண்டு நெடுமால் முகுந்தைசெல
ஆராமகன்கேட் டருந்தவஞ்செய்—தோரார் ௩௪௪

யிரவருட்ஞ்செல்ல விறைவர்முன்பு தோன்றி
திரவரங்களீந்து சிவசத்தி—வரமகனை ௩௪௫

யன்றியெவரா லு மழிவிலையென் றேயருள
நன்றிதெனத் தன்னரசு நாட்டியே—வென்றியொடும் ௩௪௫

மூவுலகுமாண்டு முடிக்கவிண்டு வாதியர்கள்
தாவிவந்துகாசிநகர் தாமடையப்—பாவிவந்து ௩௪௬

போர்தொடங்கப் புங்கவர்கள் போந்தடைந்தார் கேதாரம்
சேர்ந்தது ராசன்காசி நின்றிருந்து—பார்முழுதும் ௩௪௭

ஆண்டனர்த்தஞ் செய்ய வமரருமை தாள்பணிந்து
வேண்டவரு டுண்டி விநாயகர்தாம்—காண்டசைய ௩௪௮

வைந்துமுகம் பத்துகர மார்ந்துசிங்க வாகனமேல்
விந்தையொடும் விளங்கி வீறுபகை—அந்தமுற ௩௪௯

வில்வாண் முதற்படையால் வெம்போர் தொடர்ந்தட்ர
வெல்படையற் றேயவுணன் வீறுகெட—நல்வர்த்தை ௩௫௦

உன்னியண்ண லன்று னுயர்முடிமேற் றூளூன்றி
மன்னியகா சிப்பதிமேல் வாய்தலிலே—இன்னலறப் ௩௫௧

பாதகங்க ணீக்கிப் பரனருளைச் சிந்தித்து
நிதகல வைத்த திறம்போற்றி—ஆதியிலே ௩௫௨

பாற்பகற்பந் தன்னிற் பகர்சுவா யம்புமனு
மேற்பதத்தைச்சேர விரிந்தசகம்—கார்ப்பிரிந்து ௩௫௩

காடாக வேதாக வன்றுதிரி புஞ்சயனைத்
தேடியரசிந்து திவோ தாசனென—நாடிவைக்க ௩௫௪

செங்கோல் செலுத்திச் செழித்தோங்கத் தேவர்களை
அங்காசிநீங்க வகற்றுதலும்—புங்கவர்கள் ௩௫௫

துண்டி விநாயகருஞ் சூழ்ந்ததிரு மாலும்வந்து
விண்டவிகற்பாகமத்தைமெய்க்கொண்டு—தொண்டுசெய ௩௫௬

ஆங்கவனை முத்தியுல சாளவைத்த நீள்கருணை
தேங்குடுண்டி நாயகர்தஞ் சீர்போற்றி—ஆங்கொருகால் ௩௫௭
சத்தியலோ கத்தமரர் சார்ந்த பெருஞ்சபையில்
வித்தகவே தாவணைமேல் வீற்றிருக்கப்—பத்திசெயும் ௩௫௮
மைந்தருக்குண் மேலா·மரீசிமுனி தாள்பணிந்தே
எந்தைபுரி முத்தொழிற்கு மீசரெவர்—அந்தமறி ௩௫௯
யெனுணரக் கூறியரு ளென்றுதொழ லும்பிரமன்
ஆனமுத லைச்சிந்தித் தாங்குரைப்பான்—மானமைந்த ௩௬0
தேருது யானுந் திருமாலு முன்னொருகால்
மாருய்ப் பரம்பொருளென் றேமதித்தங்—காருத ச௬௧
போர்தொடங்கிச் செய்யப் புராந்தகர்திப் பூதரமாய்
நேருருக்கொண் டெங்கண்முன நின்றிட்லும்—பாரவொரு ()
கேழலுருவாய் விண்டு கீண்டடியைத் தேடிநிற்கச்
சூழ்முடியை யன்னமதாய்ச் சூழ்ந்துழல்யான்—மாழ்குதலும் ()
ஆரணமுந் தேடற் கரியபிரான் முன்னின்று
பூரணராய்த் தோன்றியருள் புரிந்து—காரணராய் ௩௬௪
எம்மையளித் தித்தொழிலு மீந்துநிறைந் துள்ளிருந்து
மும்மையினுங் காக்கு முதலாகி—அம்மவுயர் ௩௬௫
தேவதே வாகுஞ் சிவமாப் பரஞ்சுடராம்
ஓவாவிநாயகரென் றோதுமறை—ஆவா ௩௬௬
எமக்கு மகேசன்முன் னிசைத்த வநுபூதி
உமக்குரைக்கக் கேளென் றுணர்த்த—சமப்புதல்வன் ௩௬௭
மானதவா விக்களாயின் மன்முவே ழாயிரமாண்
டானதவஞ் செய்ய வருள்சுரந்து—வானமிசை ௩௬௮

 விநாயகர் திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

மாமணிப்பூண் மூஷிகமா வாகனத்தின் மேற்றோன்றி
காமர்மழு வேந்துங் கணபதியார்—தாமணுகி ௩௬௯
வேண்டுவர மியாது விளம்பென்ன வீழ்ந்திறைஞ்சி
ஆண்டவனே நின்னன் பளித்தருளி—காண்டகைய ௩௭0
மூவுலகுங் காவல்செய முப்பத்து முக்கோடி
தேவர்களென்னுனை திறம்பாமல்—பாவனைசெய் ௩௭௧
தென்னைப்பூ சிக்க வினியகுண மக்கள்பெற
நின்னதுவாமத்துமையுநேர்மகளாய்—மன்னியென்பால் ௩௭௨
யானளிக்க நீர்வேட் டளித்திடவும் வேண்டுமென
மேனயந்து கேட்ப வியந்தருளித்—தானகல ௩௭௩
தந்தைதனைத் தாணினைக்கச் சார்ந்தவனைத் தாள்பணிந்து
விந்தைநக ரொன்று விதித்திடெனச்—சந்தமுற ௩௭௪
வாய்ந்தபிர மாநகரில் வைகிச்சுராசுரர்கள்
ஆய்ந்துபுடை சூழ வரசியற்றி—ஏய்ந்திடுகால் ௩௭௫
வேதாதருந்தேவ வல்லியெனு மெல்லியலை
ஆதரவாய்வேட்டா யிரமகவைத்—தீதகல ௩௭௬
மேலானபாக்கியத்தை மேவியவன் வாழ்ந்திடுங்கால்
மாலானுமைகொள் மனத்தருக்கி—னாலே ௩௭௭
உலகத்தை யீச னொக்கவம்மை போற்றப்
புலனுற் றளித்துமைநீ போந்து—நலமாத் ௩௭௮
தவஞ்செய் மரீசிமுனி தன்மகளா கென்னப்
புவியமுனை மாநதியிற் பூத்த—நலமணைமேல் ௩௭௯
சங்கவடிவாகித் தவமுனிவன் சார்ந்தெடுப்ப
நங்கையுரு வல்லபையென் னுமமொடு—தங்கியே ௩௮0

அன்பாற் றவஞ்செய்ய வார்ந்தமயில் வாகனமேல்
முன்பாக் கணேசனென முன்னின்றே—இன்பமுற ௩௮௧

மாமணஞ்செய் தாரங்கு வந்ததிருமாலளித்த
மாமகளா மோதை பிரமோதை—காமர் ௩௮௨

சுமதை சவுந்தரியே சுத்தமனோ ரம்யை
சமமங்கலைகே சினிகாந்தை—அமரும் ௩௮௩

சுமத்திமையே நந்தினியே சூழ்காசை காமதை
அமைத்தபெண்கள் பன்னிருவ ரன்பால்—தமைத்தொழலும்()

அங்கீ கரித்தவரை யாதரித்துச் செந்திருமால்
தங்கித் தசவவதா ரஞ்செய்யப்—புங்கவிஸ்வ ௩௮௫

ரூபம் பெறத்தனதா முண்மைஞா னம்பெறவும்
தாபமறக் காக்குஞ் சதுரளித்தே—யூப்மிகும் ௩௮௬

மாமன் மரீசிமுனி மற்றுமுள தேவர்க்கும்
காமர்வர மீந்து கருணைசெய்து—சேம ௩௮௭

மணித்தீப மென்னுந்தன் வானுலக மெய்தி
அணைத்தவெழில் வல்லபையு மன்பால்—மணத்தபெண்கள் ()

சூழ்ந்து பணிசெய்யச் சுகோததியாய்த் தானிறைந்து
ஏழ்புவியி லாங்காங் கினிதிருந்து—வாழும் ௩௮௯

பிரமாதி தேவர் பெருமுனிவர் சித்தர்
தராதலமாள் மன்னர்மற்றோர் தாமும்—பராவி ௩௯௦

உபாசனைசெய் தின்னு முவந்த வரம்பெற்று
சுபாசுபமாம்வாசனைபோற் றோன்றி—அபாயமற ௩௯௧

முத்தி விரும்பினர்க்கு முத்தி கொடுத்தினிது
சித்தி விரும்பினர்கள் சித்திபெற—வித்தகர்தாம் ௩௯௨

பற்பல்மதத் தோர்கள்செயும் பாவனைபோற் பேறுதவி
அற்புதமா மூத்தொழிற்கு மாதிப்பராய்—நித்தமுத்த ௩௯௩

ஆதியந்த மில்லாத வானந்த மூர்த்தியாய்
ஓதவரு மோங்காரத் துட்பொருளாய்—நீதி ௩௯௪

நிறைபரமாய் நின்ற விநாயகர்நீள் சாதை
மறைபுகன்று முற்று மகிமை—முறையுணர்ந்த ௩௯௫

சங்கரனைப் போற்றிச் சதுமுகனார் தாம்வினவ
அங்கவற்றி லோர்பாக மாராய்ந்து—துங்க ௩௯௬

அவதாரம் பன்னிரண்டு மற்புதமா லீலை
தவர்சனுபா சித்தகதை தாமும்—பவமகல ௩௯௭

ஓதியவாறே வேதா வுற்றுணர்ந்து வியாதனுக்குப்
போதனைசெய் தாங்கவனும் புத்திமிகும்—மாதவனும் ௩௯௮

அன்பன் பிருகுமுனிக் காதரவாற் கூறவவர்
மன்சோம காந்தனெனு மன்னனுக்குப்—பன்னவவன் ௩௯௯

வெவ்வினைக டீர்ந்து விநாயகர்சா லோகத்தில்
எவ்வமறத் தேவிமக னென்றநிலை—ஒவ்வவடைந் ௪௦௦

திறல் சுகமடைந்தா ரென்றபுரா ணங்கேட்டோர்
கூறினர்க்கு முத்திசித்திக் கும். ௪௦௧

திருச்சிற்றம்பலம்.

சம்பூரணம்.

சிவமயம்.

—*—

காசித்தலத்தில் சத்தவாவரணத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஐம்பத்தாறுவிநாயக மூர்த்தங்களின் திருநாமங்கள்.

முதலாவரணத்தில்.

துண்டிவிநாயகர், துர்க்கைவிநாயகர், அர்க்கவிநாயகர், பிரசன்னவிநாயகர், வீமவிநாயகர், சந்திவிநாயகர். ஆ—சு.

இரண்டாமாவரணத்தில்.

சித்ரூபவிநாயகர், லம்போதரவிநாயகர், கூடதந்தவிநாயகர், சலாடவிநாயகர், குலப்பிரிடவிநாயகர், சதுர்த்திவிநாயகர், பஞ்சமிவிநாயகர், முண்டகவிநாயகர், சமுசிகவிநாயகர், விடங்கவிநாயகர், நிஜவிநாயகர், இராஜபுத்திரவிநாயகர், பிரணவவிநாயகர், உபதாபவிநாயகர். ஆ—கச.

மூன்றுமாவரணத்தில்.

வக்ரதுண்டவிநாயகர், ஏகதந்தவிநாயகர், திரிமுகவிநாயகர், பஞ்சமுகவிநாயகர், ஏரம்பவிநாயகர், விக்கினராஜவிநாயகர், வரதவிநாயகர், மோதகப்பிரியவிநாயகர். ஆ—அ.

நான்காமாவரணத்தில்.

ஏகோப்யப்பிரதவிநாயகர், சிங்கமுகவிநாயகர், கூர்சிதாக்ஷவிநாயகர், க்ஷிப்பிரப்பிரசாதவிநாயகர், சிந்தாமணிவிநாயகர், தந்தவக்ரவிநாயகர், அபிசண்டிவிநாயகர், ஊர்த்துவாண்டமுண்டவிநாயகர், ஆ—அ.

ஐந்தாமாவரணத்தில்.

மணிகர்ணவிநாயகர், ஆசாசிருட்டிவிநாயகர், கஜகர்ன்ன விநாயகர், கண்டாவிநாயகர், சுமங்களவிநாயகர், மந்திரவிநாயகர். ஆ—சு.

ஆறுமாவரணத்தில்.

மோதகவிநாயகர், சுமுகவிநாயகர், துன்முகவிநாயகர், கணப்திவிநாயகர், அப்ரவிநாயகர், ஆக்கினைவிநாயகர், துவாரவிநாயகர், அவிமுத்திவிநாயகர். ஆ—அ.

எழாமாவரணத்தில்.

ஆமோதவிநாயகர், பாகீரதவிநாயகர், அரிச்சந்த்ரவிநாயகர், கப்ர்த்திவிநாயகர், பெந்துவிநாயகர், சனகவிநாயகர். ஆ—சு.

இத்திருநாமங்களை எழுதினவர்களும், உச்சரித்தவர்களும், கூறக்கேட்டவர்களும், விநாயகமூர்த்தி மகத்துவங்களைக்கேட்டுணர்ந்த மேலானபலனைப் பெறுவார்கள், தீவினையனைத்துநீங்கி மேலானசுகத்தையடைவார்கள்.

———*———

அவதாரலீலைகளில் இன்னுங்கூறப்பட்ட சிறப்புநாமங்கள்.

சித்திபுத்திவிநாயகர்
மயூரேசவிநாயகர்
தூமகேதுவிநாயகர்
கணபதிவிநாயகர்
இலக்கவிநாயகர்
சர்வசித்திவிநாயகர்
மந்தாரவிநாயகர்
காலானலப்பிரசவிநாயகர்
வல்லபைவிநாயகர்
பாலசந்த்ரவிநாயகர்
கணேசவிநாயகர்
மகோற்கடவிநாயகர்
சித்திவிநாயகர்
வன்னிவிநாயகர்
விண்டுவிநாயகர்

சகஸ்த்ரநாம சமானநாமங்கள்.

கணபதி	அமுதமந்திரன்
ஏரம்பன்	இலக்ககணபதி
மோகன்	வாச்சிகதன்
தரணிதரன்	பீஜவிநாயகன்
கலாதரன்	மங்கலவிநாயகன்
கசியபந்தன்	உடுண்டிவிநாயகன்
மஹாகணபதி	பிரியகணபதி
கிப்பிரப்பிரசாதன்	சித்திவிநாயகன்
ஆசாரபூரகன்	சிந்தாமணிவிநாயகன்
வரதன்	மகோற்கடவிநாயகன்
ஜயன்	ஆ. உக.

துவாதசநாமார்ச்சனை.

ஓம் சுமுகாயநம:	ஓம் விக்னராஜாயநம:
ஓம் ஏகதந்தாயநம:	ஓம் கணாதிபாயநம:
ஓம் கபிலாயநம:	ஓம் தூமகேதவேநம:
ஓம் கஜகர்னகாயநம:	ஓம் கணாத்யக்ஷாயநம:
ஓம் லம்போதராயநம:	ஓம் ப்ாலசந்த்ராயநம:
ஓம் விகடாயநம:	ஓம் கஜானனாயநம:

ஆ. திருநாமம்-கஉ.

விநாயகர்பூஜை.

ஓம் கணேசாயநம:	பாதௌபூஜையாமி
ஓம் விக்கினராஜாயநம:	ஜானுநீபூஜையாமி
ஓம் ஆகுவாஹனாயநம:	ஊறும்பூஜையாமி
ஓம் ஏரம்பாயநம:	கடிம்பூஜையாமி

ஓம் தேவதேவாயநம:	நாபிம்பூஜையாமி
ஓம் லம்போதராயநம:	உதரம்பூஜையாமி
ஓம் கணநாயகாயநம:	ஹ்ர்தயம்பூஜையாமி
ஓம் ஸ்தூலகண்டாயநம:	கண்டம்பூஜையாமி
ஓம் ஸ்கந்தாக்ரஜாயநம:	ஸ்கந்தௌபூஜையாமி
ஓம் சதுர்ப்புஜாயநம:	புஜௌபூஜையாமி
ஓம் பரசுஹஸ்தாயநம:	ஹஸ்தான்பூஜையாமி
ஓம் கஜவக்த்ராயநம:	வக்த்ரம்பூஜையாமி
ஓம் விக்கினஹந்திரேயநம:	நேத்திரோபூஜையாமி
ஓம் சூர்ப்பகர்ணாயநம:	கர்ணௌபூஜையாமி
ஓம் ஏகதந்தாயநம:	தந்தம்பூஜையாமி
ஓம் குமாரகுருவேநம:	சிரம்பூஜையாமி
ஓம் சர்வேஸ்வராயநம:	சர்வாங்கானிபூஜையாமி

என்று பாதம், முழந்தாள், தொடை, நிதம்பம், நாபி, வயிறு இர்தயம், கண்டம், கழுத்தடி, தோள், உள்ளங்கை, நாசி, கண், காது, தந்தம், சிரம், சர்வாங்கம் என்னும் கசு - இடங்களில் அங்கபூஜைசெய்க.

அறுகு-வன்னி-மந்தாரை-முதலிய புஷ்பார்ச்சனை.

ஓம் சுமுகாயநம:	சாதிபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் ஏகதந்தாயநம:	சாவந்திகாபுஷ்பம் சமர்ப்பயாமி
ஓம் கபிலாயநம:	மல்லிகாபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் கஜகர்ணாயநம:	சம்பகிபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் லம்போதராயநம:	கல்லாரபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் விகடாயநம:	கேதகிபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் விக்னநாசினேநம:	வகுளபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் விநாயகாயநம:	சதபத்ரபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் தூமகேதுவேநம:	புன்னகபுஷ்பம்சமர்ப்பயாமி

ஓம் கணாத்யக்ஷாயநம:	துத்தாரபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் பாலசந்த்ராயநம:	மாலதிபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் பத்னிஹீனுயநம:	விஷ்ணுக்கிராந்தபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் உமாபுத்ராயநம:	கிரிகர்னிகாபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் கஜானனுயநம:	நாகபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் ஈசபுத்ராயநம:	மந்தாரபுஷ்பம்சர்ப்பயாமி
ஓம் சர்வசித்திப்பிரதாயகாயநம:	கோவிதாரபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் மூஷிகவாஹனுயநம:	துருமோற்பலபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் குமாரகுரவேநம:	ரக்தபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் தீர்க்கதுண்டாயநம:	அர்க்கபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் இபவக்த்ராயநம:	முனிபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் ஸங்கடநாசினேநம:	ஏகவிம்சதிபுஷ்பம்சமர்ப்பயாமி.

பூஜைக்குரிய பத்திரங்கள்.

சிறுசண்பகம்	நாயுருவி	விஷ்ணுக்கிராந்தி
கரசராங்கணி	சிறுவழுதி	மாதுளை
வில்வம்	வன்னி	மந்தாரை
அறுகு	அலரி	மருவு
இந்தை	மூங்கில்	சாதிமல்லி
ஊமத்தை	வெள்ளெருக்கு	வெண்ணொச்சி
துளசி	மருதம்	ஆ உ0-பத்திரம்.

பூஜைக்குரிய புஷ்பங்கள்.

சிறுசண்பகம்	தாமரை	மந்தாரை
சாமந்தி	புன்னை	குரா
மல்லிகை	ஊமத்தை	கோங்கு
சம்பங்கி	முல்லை	செம்பிரத்தம்
செங்குவளை	விஷ்ணுக்கிராந்தி	வெள்ளெருக்கு
தாழை	வெள்ளைக்காகணம்	அகத்தி
மகிளம்	நாகை	ஆ உ0-புஷ்பம்.

முற்றிற்று.

சிவமயம்.

மயிலாசல முருகேசர்பதிகம்.

காப்பு.

மணிநாணுஞ்செவ்வேன்மயிலமுருகேசற்
கணிநாணுஞ்சொற்றூரணியப்—பணிசூடும்
ஈசன்றரித்தபிறையேற்போமெனமுத்துக்
காசுதவுகோட்டிபமேகாப்பு.

நூல்.

பொன்னினிற்பதித்தநவமணிக்கலன்கள்பூண்டுசெம்பொற் பட்டாமணிந்து, மின்னெனவிளங்குந்தெய்வயானையையும்மேன் மையார்வள்ளியம்மனையும்,தன்னிருமருங்குமமர்ந்திடமயின்மே ற்சண்முகாகாட்சிதந்தருள்வாய், அன்னையம்பிகைநீறணிந்துமு ன்னுதவும்அயிலனேமயிலநாயகனே. க

சேணிடைவலாரியாதியர்க்கபயஞ் செய்தவர்ப்பகைகெட்வழி த்து,மாணுயர்தமிழ்ச்சொற்கீரனுக்கருளிமற்றவன்புனைபடையா றும், பூணதாமென்னப்பொலிவுறப்புனைந்துபுன்மையேன்வினை கடீர்த்தருளும், யாணர்நற்சோதியென்னவேயொளிரும்அயில னேமயிலநாயகனே. உ

உலகெலாமிருகைமுடிமிசைகூப்பியொருமுருகாவெனயோதி பலமலவுட்டலிற்பிறந்துழலாதுபாதுகாத்தருளெனப்போற்றி நிலைவளரரியசடாக்ஷரப்பொருளைநினைவுறச்செபித்தலர்கொண்டு அலர்புனைபதத்திலணிதரவருள்செய் அயிலனேமயிலநாயகனே.

உருகுறேன்மனங்கண்ணீர்சொரியேனின் றிருசிறுநாவி
னாற்போற்றேன், இருவினைக்காடுமும்மலச்சேறுமெரிந்தொழிந்
திட்டதவம்புரியேன், பருவமிலெற்குன்பதப்பொடிதரிலெம்பிரா
பரன்கண்டுளமகிழ, அருளினான்மெய்மையன்பனாகிடுவேன்அயி
லனேமயிலநாயகனே. ௪

உளமலர்கமலத்தவிசிடைநினதுவொப்பிகலற்புதவுருவை
தளர்வறவமைத்துவாய்மைநீராட்டிசாந்தமாதூசணியணிந்து
அள்விலாநினதுபுகழ்மலர்மாலையாசையிற்புனைந்தினிதணிந்து
அளியினாலன்பையருத்துதலென்றே அயிலனேமயிலநாயகனே

எண்ணுதற்கரியபுகழணிமேனி யெழிற்றனையுணர்த்திடற்கெ
ளிதோ, கண்ணினுக்கமுதமூட்டுமேயெனதுகவலைதீர்ந்தற்புதம
டையத், தண்ணளியுருவாத்தங்கியமணியேதருமன்வந்தெனைய
ழைத்திடும்போ, தண்ணனின்பதமேயன்றிவேறுண்டோ அயி
லனேமயிலநாயகனே. ௬

வார்தருசுருட்பூங்கமலமேநிகராம் வதனமும்வளர்தனச்
செப்பும், பார்வையிற்றோன்றுவிடையுமோரரவப் படவரவல்கு
லுங்கண்டு, சார்தருபிறவித்துயர்க்கடற்படாது தாட்டுணையென்
றுநீதருவாய், ஆர்கலியுளோர்தங்கடிபணிந்தேத்தும்அயிலனேமயி
லநாயகனே. ௭

பூதலமதனின்மிடிபிணியுற்றுப்பொய்யினைமெய்யெனக்கூறி
ஓதுதற்கரியதுயருளேந்திருதாளொண்புகழோதிலொன்றே
ஓதரற்கருளியன்பொடும்வினவச் சிறந்தபஞ்சாக்கரப்பொருளின்
ஆதியாம்பயனையரற்குரைத்தருளும்அயிலனேமயிலநாயகனே.

என்றனைப்போலுஞானமில்வேட னெதிர்ப்படுகதலிமாவ
னத்தில், மன்னிவந்தவனைநுந்தையெம்பெருமான்மலரடிக்கன்

பனுக்கிலேயோ, பன்னுதற்கரியவென்மயலகற்றில்பவமகன்று
ன்னடிசேரும், அன்னவர்போற்றற்கெஞ்சியபுகழாம்அயிலனே
மயிலநாயகனே. சு

பிறவிவார்கடலைக்கடந்துனதிருதாட்பெரும்புணைபற்றியா
னந்தத், துறைபெறுமுத்திவாரிதிசார்ந்துதுளைந்தியான்சுகிப்பது
மென்னுள், மறைநெறியுணர்ந்தமாதவர்போற்ற வானவர்தினந்
தொழுதேத்த, அறிவினின்றினிதுள்ளானந்தமுதவும்அயிலனே
மயிலநாயகனே. கo

மயிலாசலமுருகேசர்பதிக முற்றிற்று.

உ

சிவமயம்.

குணமங்கலம்

முருகேசர் திருப்பதிகம்.

காப்பு.

குணமங்கலம்பதியாக்கொள்ளுங்கணேசர்
குணமங்கலவருளைக்கூடி—துணைவர்
முருகர்திருப்புகழைமுன்பதிகம்பாடித்
திருவருளாற்செல்வமடைவாம்.

நூல்.

உலகமெல்லாந்தொழுதேத்தவும்பர்குறைதீர்ந்துய்ந்திட்வும்
திலகநுதலாற்சிவனளித்தசெவ்வியார்ந்தசண்முகனே
இலகுமண்டமாயிரத்தெட்டிறையாயிட்ர்செய்சூரபத்மன்
குலவுமயில்சேவற்கொடியாங்குணமங்கலம்வாழ்பெருமாளே க

தேவர்சிறையைமீட்டருளச்செவ்வேலணிந்துதுணைவருடன்
காவல்சேர்ந்தமகேந்திரத்திற்கடியவரசாள்சூரபத்மன்
மாவல்லப்ஞ்சேர்தாருகனும்வயங்குபானுகோபன்முதல்
ஓவிலவுணர்தமைக்கடிந்திங்குயர்மங்கலம்வாழ்பெருமாளே. ௨

தேவேந்திரன்செய்மாதவத்தாற்றிகழ்ந்ததெய்வயானைதனை
மூவர்முதலாமுப்பத்துமுக்கோடியராந்தேவர்தொழ
ஆவலோடுமெணம்புரிந்தங்கரியதணிகைப்பதியமர்ந்து
சேவற்கொடிசேர்மயின்மீதுதிகழ்மங்கலம்வாழ்பெருமாளே. ௩

முனிபுங்கவர்செய்மாதவத்தால்முன்னமானின்வயிற்றுதித்தங்
கினியவேட்ராஜனிடத்திருந்தவள்ளியம்மையையும்
கனியுமருளாற்காந்தருவக்கலியாணஞ்செய்துளமகிழ்ந்தாய்
பனிமென்மலர்தூயுலகேத்திப்பணிமங்கலம்வாழ்பெருமாளே. ௪

பொதியமலையிலகத்தியனார்புரிந்ததவத்தான்மனமிரங்கி
விதியின்மெஞ்ஞானந்தன்னைவிளங்கவுபதேசித்தருளி
துதிசெய்யருணகிரிநாதர்தொடருமனந்தந்தொண்டருக்கும்
கதிசேர்முத்திக்கனாகாட்டுங்கனமங்கலம்வாழ்பெருமாளே. ௫

சங்கத்தலைவனற்கீரன்றனக்கங்குண்டாமிடர்தீரத்
துங்கமுருகாற்றுப்படையைச்சொல்லித்துதிக்கவருள்சுரந்து
பொங்குமவுணன்சிறைநீக்கிப்பொருவில்கைலாயஞ்சேர்த்தே
அங்ஙன்முத்திகொடுத்தருளுமருமங்கலம்வாழ்பெருமாளே. ௬

உலப்பிலருள்சேருன்னடிகட்குரியபுகழைப்போற்றிசெய்வார்
நிலத்திற்பெரியவரம்பெறுதல்நிகரோநீயேமுன்னின்றால்
பலத்திற்பெரியதவம்புரிந்துபழுதின்முத்திசேர்வார்கள்
நலத்திற்பெரியவளமல்குநன்மங்கலம்வாழ்பெருமாளே. ௭

வினையால்விளைந்தபலபிணியும்மிக்கவிடஞ்சேர்கொடும்பிணியும்
நினையர்வாதிபௌதிகத்தால்நேர்ந்தபிணியுந்தெய்வத்தால், இனை
யவருத்தும்பிணியனைத்துமிகலும்வறுமைப்பிணிதனையும், தனை
யாதரித்தோர்க்கொழித்தருளுந்தவமங்கலம்வாழ்பெருமாளே. அ

குடும்பந்தன்னில்வருப்பகையுங்கொடியவஞ்சர்செயும்பகையும்
இடுமாவரசர்மேன்மேலுமிறையைச்சுமத்தும்பெரும்பகையும்
படுமாவனலால்வெள்ளத்தாற்படரும்பகையுங்கள்ளர்களால்
அடுமாபகையுநீக்கியருளமர்மங்கலம்வாழ்பெருமாளே. கூ

குணமார்காராமணிநகராக்கூறுங்குணமங்கலமென்ன
இணையார்பெயரும்வழங்கிவரவினிதாய்த்தேவாசனத்திருந்து
துணைமாமுகவர்கைலாயர்சூழவிருந்திங்கருள்செய்யும்
பணைமாமயிலூர்பெருமாளேபணிவேனுளம்வாழ்பெருமாளே. க0

முற்றிற்று.

உ

சிவமயம்.

குணமங்கலங் காராமணிநகர்

முருகேசர்தியானதோத்திரபஞ்சகம்.

சீரார்கருணைபொழியாறுதிருமாமுகமுஞ்செழுங்கரங்கள்
ஈராறுடனேமயின்மீதிலிளஞ்செங்கதிர்போல்வீற்றிருந்து
நேராய்விளங்கியடியர்தொழுமிணைத்தவரங்களளித்தருளும்
ஏரார்காராமணிநகரிலிலங்குமுருகப்பெருமாளே. க

சுடர்மாமணிசேர்திருமுடியுந்துலங்குவயிரத்தோளணியும்
படர்மார்பிலங்குகதிர்மணிசெய்பதக்கம்பருமாமணியாரம்

அடர்செஞ்சதங்கைத்திருத்தாளுமரியபீதாம்பரவுடையும்
தடமார்காராமணிநகரிற்றழைழுமுருகப்பெருமாளே. உ

பதுமத்திருமாவதனமொளிர்பவளக்கொடியும்பசுங்கொடியும்
மதுவைப்பொழியுமலர்மாலைமணியாபரணமுழுதணிந்து
மதியைக்குளிரச்செயுங்கலைகள்வயங்கவிரண்டுமெருங்கமர்ந்து
புதுமைக்காராமணிநகரிற்புகழார்முருகப்பெருமாளே. ௩

சேவற்கொடியுங்கதிர்வேலுஞ்சிறந்துவயங்கவிருபுறமும்
காவற்பூதப்படையுடனேகைவேலணிந்தநவவீரர்
தேவர்முனிவரிருடியர்கள்செறிந்துபோற்றமயின்மீது
மாவண்காராமணிநகரில்வயங்குமுருகப்பெருமாளே. ௪

அன்பருள்ளக்கமலத்திலகலாதமர்ந்துசதாகாலம்
இன்பக்கருணைபொழியமுதமிலங்கானந்தப்பெருங்கடலே
முன்பெற்றுளமாதவத்தாலேமுறையேபோற்றவருள்செய்வாய்
மன்பொற்காராமணிநகரில்வயங்குமுருகப்பெருமாளே. ௫

முற்றிற்று.

உ

சிவமயம்.

வல்லத்திருப்பதி

சடையீசர் தேவாரப்பதிகம்.

விநாயகர்துதி.

சீர்மருவுவல்லத்திருப்பதிவாழைங்கரனூர்
ஏர்மருவுபொற்றாளிறைஞ்சியே—நார்மருவும்
நற்றேவாரப்பதிகநாம்போற்றிசெய்தருளைப்
பெற்றுலகில்வாழ்வாம்பெரிது.

கார்மாரிபொழிவளமுங்கால்வாயினெடுவளமும்
ஏருருகிலவளமுமிணையில்பலபயிர்வளமும்
ஊாவளமுங்குடிவளமுமுலவாதபொருள்வளமும்
சார்வல்லத்திருப்பதிவாழ்சடையீசரடிபோற்றி. க

செந்நெலார்வளமல்குசெழும்பழனத்துறைவாய்ந்து
கன்னல்கமுகெழிலோங்கக்கமலமலர்த்தடஞ்சூழ
மன்னியவானெடிதோங்குமணித்திருக்கோபுரத்தமர்ந்த
தன்னிடமார்ஜெயனும்பாள்சடையீசரடிபோற்றி உ

முத்துமணியலைவாரிமோதுகரையேரிகளும்
நத்துபணிலங்கள்செறிதடம்புடைசூழ்சோலைகளும்
நத்திவரும்பலபரவைநாதமுயர்கீதமொடு
சத்திவல்லப்பதியமருஞ்சடையீசரடிபோற்றி ௩

தும்புருநாரதர்யாழிற்றொடுத்தரியநெடும்புகழை
உம்பர்மனங்களிதுளங்கவோயாதின்னிசைபாட
அம்பரத்திலலர்மாரியகலாதுமணம்வீச
இம்பர்வல்லப்பதியமருமெழிற்சடையரடிபோற்றி ௪

பத்திமிகுந்தொண்டர்குழாம்பலபாடற்றுதிசெய்ய
சித்தமலரடிவைத்துச்செகமுழுதும்பணிந்தேத்த
வைத்தபெருங்கருணையினல்வாழ்வித்துச்சுகமளிக்கும்
சத்திஜெயனும்பிகைபாற்சடையீசரடிபோற்றி ௫

கஜாசுரனைத்தடிந்தருளுங்கணபதியாரொருபாலும்
அஜாடலுகந்தமரர்சிறையகற்றியவேளொருபாலும்
ஜினந்தம்பெறுமுனிவர்சிமலசிவகணஞ்சூழத்
தவிஜாலுறைவல்லத்தமருஞ்சூழ்சடையரடிபோற்றி ௬

மலரயனுமன்னமதாய்வான்பறந்துமுடிதேடி
நிலமேவியேனமதாய்நெடுமாலுமடிதேடி
பலகாலுமுழன்றிளைத்துப்பரிந்துதொழப்பேரருளால்
தலமேல்வல்லத்தமர்ந்தசடையீசரடிபோற்றி. ௭

மழவிடைமேலெழுந்தருளிவான்பணியவுலகேத்த
இழைமருங்குற்ஜெயனும்பாளிடத்தமருந்திருக்கோலம்
தொழவரியதவஞ்செய்தோஞ்சுகமடையவினிதருள்வார்
செழியதிருவல்லத்திற்றிருச்சடையரடிபோற்றி. ௮

திங்களணிமணிமுடியிற்செறிகங்கையலைவீச
பொங்குமழுமான்கரத்திற்பொலிந்திருபாலசைந்தாட
தங்குமிருகரமபயவரதமொடுதாண்டவஞ்செய்
எங்கள்வல்லத்திருப்பதிவாழெழிற்சடையரடிபோற்றி. ௯

தென்பாற்றிசைநோக்கித்தில்லைச்சிற்றம்பலத்தில்
அன்பாற்றொழுமடியனாங்தொழிலின்றிறங்காண
இன்பாடல்செய்தங்கிருஞ்சனகாதியர்க்கருளி
முன்பார்வல்லந்தமருமுதிர்சடையரருள்போற்றி. ௰

சடையீசர் தேவாரப்பதிக முற்றிற்று.

கடவுள்துணை.

பலபாடற்றிரட்டு.

விநாயகர்துதி.

பூத்தமலர்வாவிபொழில்சூழ்தரும்புதுவை
காத்தமலர்வாகைக்கரமைந்தான்—ஏத்துமியற்
செய்யுள்புனையுஞ்சிறப்பென்றுமெற்களிக்கும்
துய்யமலர்ப்பாதந்துணை. க

வேதபுரீசர்துதி.

மூப்புரத்தையன்றுமுனிவாலெரித்தபுகழ்
செப்புதிரிபுரையைச்சேர்பாகன்—ஒப்பரிய
வேதபுரியீசன்விளங்குகைலைக்கிறைவன்
பாதமலர்போற்றிப்பணி. உ

திரிபுரசுந்தரிதுதி.

போற்றுமடியவர்செய்பொய்யிருழின்மூன்றுதவி
கூற்றுதைத்தோர்பாகமமர்கோமாதே—ஆற்றலுள
நன்மொழியாற்செய்யுணவில்வரந்தந்தருளி
மன்னுதிரிபுரையுள்வாழ். ங

முருகர்துதி.

விண்ணவர்க்கன்றுற்றவிழுமந்தீர்த்தோங்குகுறப்
பெண்ணவர்க்குமாலைதரும்பெற்றியனே—வண்ணம்
இயைபுதுவைக்கந்தாவிணையினின்சீர்போற்றத்
தயையுடையாய்பாட்டுவரந்தா. ச

வரதராஜர் துதி.

கஞ்சமல ருந்திதிருக் கண்ணு மணிவண்ணு
எஞ்சு மதிசூடிக் கினியானே—மஞ்சுதவழ்
மாடங்கள் சூழ்புதுவை மன்வரத ராஜனே
தாடொழுவேன் பாடவரந் தா. ௫

இலக்குமி துதி.

கொற்றபங்க யத்திலுறை கோமாதே நின்கருணை
பெற்றவர்கள் பெற்ருர் பெருஞ்செல்வம்—மற்றுமெனை
நின்னருட்கா ளாக்கி நிறைந்தநிதி யெற்கருள்வாய்
மன்னறங்கள் செய்வான் மகிழ்ந்து. ௬

சரஸ்வதி துதி.

மதிபோ லொளிரு மலர்வனசந் தன்னில்
பதிநா வெனவுறையும் பாவாய்—நிதியேயென்
உள்ளக் கமலத்தி லோங்கென் னுருநாவில்
கள்ளமில்சொற் பாவாக் கனிந்து. ௭

வித்தியாகுருதுதி.

கற்கத் தகுவனவே கற்பித் தருள்குருவாய்
நிற்கத் தகுநெறியே நிற்பித்தோன்—தெற்கில்
உறையு மொருமுனிவ னுப்புசுப்ப ராயன்
நிறையருளை நெஞ்சே நினை. ௮

விநாயகர் துதி

சமஸ்கிர்தசுலோகமொழிபெயர்ப்பு.

திருமகனேக்க மளிக்குமேன்மேலுந் திவ்வியநான் மறைக் கொழுந்தாகி, மருமலிகமலத் தெழிலெலாங்கவர்ந்து வளரொளி யுகளமா வயங்கி, ஒருபெருமேரு நிகரும்ஏரம்ப வரிணையாயது

ரு வகையான், தருமிருசரணம் விக்கினமலையைச் ஜயித்திடும்வ
ச்சிரா யுதமே. ௯

சரஸ்வதிதுதி.

பிரமவொளியார் நான்முகமும் பிறங்குகரங்க ளீரிரண்டும்
பிணைமான்விழிக ளிருநான்கும் பெற்றமணிசின் முத்திரையும்
தரமதாகப் புவனமெலாந் தந்தாடண்ட கமண்டலமுந்
தவளமேனி முன்னூலுஞ் சடைமாமுடிசேர் மணிச்சூடும்
வரமதாகச் சிவந்ததிரு வடியுங்கலையு மணிப்பூணும்
வாம்பொற்சிறகாரன்னமிசை வயங்காயிரந்தோட்புண்டரிகந்
திரமதாமெய்ச் சுவாநுபவச் செல்வமெமக்குத் தருமொளியாய்த்
திகழுங்கலைமா தினையிதயத் தேத்தித்தியானஞ் செய்குவாம்.

வேறு.

வருட்காலத் துதவுபொருண் மற்றையெட்டுத் திங்களினும்
இருளாமிரவி லுதவுபொரு ளிசைந்தவற்றைப் பகற்பொழுதும்
அருமெய்வருந்தும்வயோதிகத்திலாகும்பொருளையெவ்வனத்தும்
இருமையுணர்ந்து தேடுபொரு ளிம்மையிட்ட மறுமைக்கே. ௧௧

வேறு.

சீவனநிமித்தம் வணங்கியேகவர்ந்து சேணுறநிமிர்ந்திடு சய
வர், காவருமேற்ற மரத்தொடும்பிறந்த கனிஷ்டரோசேட்டரோ
வறியேம், தாவெனவிரந்து குழைந்திடுமெளியர் தம்மினுநாண
மொன் றின்றி, ஓவறப்பெற்ற கிழந்துபின்வணங்கி லுவமைவே
றுணாப்பதென் னிவர்க்கே. ௧௨

வேறு.

நட்க்கற்பாலது நட்க்குமெம் முயர்ச்சியு மின்றி
நட்க்கற்பாலல தெம்முறைமுயலினு நடவா

நட்கற்பாலதா மரன்செயலொன்றுமிஞ் ஞாலம்
நட்கற்பாலது நடந்ததென்றுணர்ந்தவர் நலியார். கரு

வேறு.

வழிவரும் விடநியார்சொல் வண்மைபுத் தகம்யாநிற்க
தொழில்வயித் தியமேன்மாமி துணைவிழி தருகவன்றி
முழுதுணர் சோசியனுகில் முன்னமூர் சென்றதாந்தன்
கழிநெடுந் தூரநீங்கிக் காண்பதென் றுணர்த்துசென்றாள். கச

வெண்பா.

நல்லோர் நமக்கியற்று நன்மைக்கு யாதுமுனம்
மெல்லோர் நலமிலமென் றெண்ணற்க—அல்லோர்
நமக்கியற்று தீமைக்கு நாம்புரிந்த தேது
தமக்குரிய வன்குணமே தான். கரு

வேறு.

வெறுவிதா யிருந்தவென்னுள் மேவிய வருளான்மேன்மை
பெறுங்கவி பாடுவித்துப் பெய்கழற் றொண்டனுக்கி
உறுவினை நீக்கியாண்ட வுத்தம கணேசமூர்த்தி
வறுமைநோய் வாராதெற்கு வழங்குக செல்வமன்றே. கசு

வெண்பா.

அடுத்தவரைக் காக்கு மறமுரைத்தா யெம்மை
விடுத்திடலு மெற்றோ விளம்பாய்—தொடுத்தகவி
பாடியடைந் தேனுக்குப் பாக்கியங்க டந்தருள்வாய்
தேடுகின்றேன் செந்திருத் தேவி. கஎ

வேறு.

ஆக்கவல்லா யாக்கினனை யளிக்கவல்லா யடியரிடர்
போக்கவல்லாய் நின்புகழைப் புகன்றுபோற்றி செய்வேனை

நீக்கவல்லா யெனில்நின்னை நினைந்தார்தொண்டு செய்வார்கள்
மாக்களூர்ந்து மடியரிடர் மாற்றவல்ல பெருமானே. கஅ

வினையின்பயனே யுயிர்க்குறுமென் வேதவிதியோர் புடை
தள்ளி, தனைவந்தடுத்தோர் வேண்டியவா தரவல்லோய்நிற் போ
ற்றுமெனை, இளையுமிடரிற் கைவிட்டா லியாவர்நினக்குத் தொ
ண்டாவார், நினைமார்க்கண்டன் றுயர்நீங்க நிறையாரருள்செய்
பெருமானே. கசு

இடரிலுழைப்போர் தமைக்கண்டா லென்றனுளமும் பதைப
தைக்கும், வடிவிலருள்வா ரிதியாவாய் வழிபட்டுன்சீர் போற்று
மெனை, நெடியதுயரிற் கைவிட்டால் நினக்கார்தொண்டு செய்வா
ர்கள், கொடியவிடத்தைத் தடுத்தமரர் குழுவைக்காக்கும் பெரு
மானே. உ0

என்னைப்போல்வார் தமையடைந்தோ ரிடர்தீர்ந்தினிய சுகம்
பெறுவார், நின்னையடுத்துன் புகழ்பாடி நெடுநாணின்சீர் போற்
றுமெனை, துன்னுமிடரிற் கைவிட்டாற் றொண்டுநினக்கார் செய்
வார்கள்;மன்னுமடியாட்னக்காக மண்ணுஞ்சுமந்தபெருமானே.

அன்பர்மனதைச் சோதிக்க வனேகவடிவ மெடுத்தவர்தம்
முன்புதோன்றி நிலைகண்டு முத்தியளித்தாய் தொண்டானேன்
வன்புகண்டோ நெடுந்துயரில் வருந்தவிட்டா யறியேனே
இன்பமடியர்க் கிருமையினு மெளிதாயருளும் பெருமானே.உஉ

வேறு—வினவிடைஸ்துதி.

கலைமகளை மருமகளாக் காதலித்துக் கொண்டவிந்தக் கனக
மங்கை, சிலைமகளைத் தன்கணவன் றங்கையெனப் பெற்றதிருச்
செழியமங்கை, தலைபுலகிற் கலையுணர்வார்க் கருந்தனங்கள் தா

ராத தன்மையென்னே, நிலையுணராப் புல்லியர்பா லிவர்செல வுந் தனமுதவு நெறிதானென்னே. உங

அருமைமரு மகளிடத்துங் குறைநினையா மாமியிந்த வகில த்யினுதில்லை,பெருமையிவர்சமமாம் வரிசையினுற் பேதமுறும் பெற்றியாலே, திருவனையா ரிவரொருமித் தருள்செய்தா லிக பரங்கள் சித்தியாகும், ஒருமையிவர்க் குண்டாகத் தலைவர்களே சமநோக்க முதவவேண்டும். உச

மகளின்மரு மகளதிக மெனவுலகம் பாராட்டல் வரிசையா னும், மிகவரிய பதங்களிலே யிவர்மருவி யருணிறைந்து விளங் கலானும், தகமையுற வுலகமெலா மேன்மேலும் பலவளங்க ட்ழைதலானும், அகனமர்ந்தெம் முளத்திருந்து தனங்கல்வி யிரண் டுமிவ ணருள்செய்வாரோ. உரு

திருமகளைக் கலைமகளும் பலமறையாற் றுதிசெய்து திகழ்த லானும், மருமகளை யரியபதத் திருத்தியுயர் வளமையுற வைத்த லானும், இருவருமுள் ளன்புடையா ரெனமதித்தோ மியாமினி யிங் கினிமையாக, ஒருமையுற வுளத்திருத்தி யிருபொருளும் பெ றலாகு முறுதியீதே. உசா

கலைமகளைப் போற்றினர்க்கிங் கறம்பொருளின் பம்வீடு கா ட்டுந் தீம்பால், அலைமகளை வாழ்த்தினர்க்கு மிம்மையிலே நாற் பயனு மளித்துக் காக்கும், மலைமகளை யேத்தினர்க்குப் பவமகன் று முத்திபெறு வழியுண்டாகும், நிலைமையிது நான்மறையா கம ங்களெலா நிச்சயித்து நிகழ்த்துமன்றே. உஎ

வன்னெஞ்சக் கொடியவர்பால் மலர்மங்கை யிருந்துதனம் வழங்கக் கண்டோம், நன்னெஞ்ச மில்லவர்பாற் கலைமங்கை யி

ருந்தவொரு நாளுங் காணேம், கன்னெஞ்சக் கொடியோர்நல்
லோர்பொருளை வஞ்சனையாற் கவர்ந்துகொள்வார், இன்னெஞ்ச
நல்லோர்தங் கலைப்பொருளை யினிதாக வெவர்க்குமீவார். ௨௮

உலகுயிர்க்கெல் லாந்தாயா மிவர்தகைமை யானெடுத்திங்
கோதற் பாற்றே, குலமகனல் லாவெவர்கள் குரவர்மற தியை
யெடுத்துக் கூறவல்லார், பலநலனும் புதல்வருக்கல் லாவெவர்க்
குத் தாய்தந்தை பாலிக்கின்றார், புலனுடைய மகன்குரவர்க் கி
யற்றுகைமா றிதில்வேறென் புகலத்தானே. ௨௯

ஆதலினாற்றிருத்தாயே வஞ்சகனாயகன்றுநல்லோ ரகத்திருந்து
மேதகையதனமாதி பதினாறுபேறுதவ வேண்டுகின்றேன்
நீதியிதுகலைமகள்வாழ் மனைகளெலாமேலாக நெடிதிங்கோங்கும்
பாதகஞ்செய்வஞ்சகரும்பவமகன்றுநன்மையுறப்பாலிப்பாயே.

என்னிருகண் மணியான பொன்மாதுங் கலைமாது மினிது
வாழ்க, மன்னியநற் செல்வர்களுங் கலைஞர்களு மேன்மேலு ம
ருவிவாழ்க, பன்னியவஞ் சகரொழிய நல்லோர்க ளுடோறும்
பலிகிவாழ்க, இன்னியவிவ் வினவிடையின் பொருளுணர்ந்து
போற்றுமன்ப ரினிதுவாழ்க. ௩௧

பலபாடற்றிரட்டு முற்றிற்று.

உ

சிவமயம்.

—*—

வசிஷ்டமுனிவர் ஸ்ரீராமருக்கு

உபதேசித்தருளிய

ஞானவாசிட்ட வமலராமாயணம்

மூலமும் - உரையும்,

ஆத்மசுவரூபவிளக்கம்.

இவை

புதுவை. வெ. பொன்னையாமுதலியாரென்னும்

சிவானந்தமூர்த்தி

சமஸ்கிர்தபாஷையினின்று மொழிபெயர்த்து

தமிழ்க்கவிதையாகப்பாடி

அருளியவை.

சென்னை

வண்ணாரப்பேட்டை

பு. சு. கிருஷ்ணசுவாமிபிள்ளையவர்கள்

இல்க்ஷ்மீவிலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

—*—

கலியுகாதி௵௪௯௭௭—யுவ௵

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

மேருமால்வரைத்தென்புறமேவியகருமச்
சீருலாந்தவபூமியிற்றிகழ்நடுநாட்டில்
நீருலாம்வளநிறைதருபுதுவைவெண்முத்துப்
பேருளானுயர்செங்குந்தமன்னருட்பெரியோன். ௧

அருந்தவம்பல்செய்துநீள்தானமுமளித்து
இருந்துநாட்பலசென்றபின்சிவனருளாலே
மருந்ததாமெனப்பொன்னையநாமத்தன்வந்து
வருந்துதாய்தந்தைதவப்பலனிதுவெனமதிக்க. ௨

கலியினாற்பதொன்பான்சதபதினெட்டிற்கவின்ற
பலிததாதுமாவருஷமாவணிமதிப்பத்தொன்
பலகுதேதிநற்பரணிமூன்றானதோர்காலில்
நிலனில்வந்தவதரித்தனனவக்கிரகநிலைகேள். ௩

மகரலக்கினமைந்தனங்காட்சிமாமேடம்
புகலுஞ்சந்திரன்றிடபத்தில்ராகுபொற்சிங்கம்
பகலவன்புதன் சுக்கிரன்செய்கன்னி பண்பாற்
றிகழ்துலாங்குரு விருச்சிகங்கேதுவுந்திகழ. ௪

இந்தநற்சுபவோரையில்ராஜயோகத்தின்
அந்தம்வாய்ந்தரும்புகழ்கொடைவாய்மையுமனுக
சுந்தரந்திகழ்சுக்கிரன்றெசையினிற்றோன்றி
தந்தைபாக்கியம்வளர்ந்திடவளர்ந்தனன்சதுரால். ௫

அரிதிற்பெற்றதம்பொருளெனவருமைப்பாராட்டி
உரியசீரொலாங்குறைவறவுதவித்தண்பிறைபோல்
மருவியைந்திருபருவமும்வளமையாய்வளர்ந்து
வருமைந்தாண்டினிற்கல்விநற்சாலையில்வைக்க ௬

இகபரத்தினுக்கானபல்கலைகளுமினிதே
அகனமர்ந்துணர்ந்தரன்றிருவருள்பெறற்கியானை
முகவிநாயகன்றிருவடிமுன்புறப்பணிந்து
சுகமிகுந்திருப்புகழ்க்கலிவெண்கவிதுதித்தும். ௭

பிரணவப்பொருளாகுமப்பிரானநுபூதி
புரணமாமவர்திருவலங்காரமும்புகன்று
சரணடைந்தவர்தயையினாற்சண்முகப்பெருமாள்
அரணருட்பெறமும்மணிக்கோவையுமணிந்து. ௮

பதிகம்பற்பலதலங்களிற்பண்புறப்பகர்ந்து
மதியணிந்தபெம்மான்றிருவருட்கிட்டனாகி
சுதியமைந்துயர்சிவானந்தலகரியுந்துதித்து
பதியிடத்தமர்தேவிநற்பூஜையும்பகர்ந்தான். ௯

திருவருட்பிரகாசத்தாற்றிகழ்பரம்பொருளை
அரிதுணர்த்துமெய்க்குருவினையாய்ந்துபல்காலம்
உரியதீவிரமுற்றுமுமூட்சுத்வமுண்டாய்
பெரிதடைந்தனன்கனகற்சபையினிற்பெரியோன். ௧௦

சகளரூபமாய்வந்தவர்சாற்றுமெய்ப்பொருளை
நிகளபந்தங்கணீங்குறவப்ரோக்ஷநெறியால்
அகமலர்ந்துணர்ந்தானந்தமூர்த்தியாதலினால்
சுகசிவானந்தமூர்த்தியென்றவர்சொலப்பெற்றான். ௧௧

சுருதியுத்தியோடனுபவத்துணரும்பொருளை
கருதிநாடொறுஞ்சற்சங்கத்தவருடன்கலந்து
மருவுசுத்தவாசனைவழிமனதினைச்செலுத்தி
அருமெஞ்ஞானநூல்பற்பலமொழியினுமாய்ந்து. ௧௨

வேதவியாதனூர்விளம்பியசூத்திரம்விரித்துப்
போதமாம்படிசங்கராசாரியன்புகன்ற
ஏதமின்றியபாஷியத்திலகுமத்வைதஞ்
சாதமாகத்தாஞ்சாற்றியசாத்திரம்பலவால். ௧௩

ஆங்கவற்றினிலாத்துமபோதமென்றமைந்த
சாங்கமானசாத்திரமொன்றுதக்ஷிணமூர்த்தி
ஓங்குதோத்திரவஷ்டக முயர்சிவோகமதாம்
பாங்குறுந்துதிமநீஷமாபஞ்சகப்பநுவல். ௧௪

மோட்சசாதனபஞ்சகமுதிர்சுகப்பிரமம்
காட்சியாலுணரஷ்டகக்கட்டுரைக்கவிதை
மாட்சியானவான்மீகிவாக்குதித்தவாசிட்டம்
சாட்சிசைதன்யசாரஞ்சொல்சருக்கமோரிரண்டு. ௧௫

ஆதியாமனுவாய்ந்தெடுத்துரைக்குமத்துவைத
போதமாஞ்சுருதிப்பொருண்மிருதியிற்புகன்ற
பேதவாத்துமப்பிரிவுமுக்குணப்பிரிவாதி
ஓதிவைத்தனனுலகுயத்திருவருட்குறளால். ௧௬

வித்தியாரண்யர்விளம்பியவாக்கியசுதையாம்
சித்தமோகந்தீர்திருக்கொடுதிரிசியவிவேகம்
நித்தியானந்தமுதவுமிச்சாத்திரநெறியை
பத்தியாற்பயின்றருந்தமிழ்க்காவியம்பகர்ந்தான். ௧௭

வேறு.

மன்னவர்திலகனல் வளமைமிக்கவன்
இன்னியசொல்லின னெவர்க்குமன்பினன்
மன்னுயிர்க்கிரங்கியே வழாதளிப்பவன்
தன்னிலையுணர்ந்தவர் தாசனாகுவன். ௧௮

அறம்பொருளின்பம்வீ டாய்ந்தங்கில்லற
நெறியினிற்றவம்புரி நிலைமைசான்றவன்
அறிவினிற்சிறந்தவர்க் கரியசெம்பொருள்
திறந்திகழ்சாத்திரஞ் சேர்த்தளிப்பவன். ௧௯

மெய்ப்பொருணாயனார் மேயசாத்திர
வைப்பெனவைகியவ் வாய்மைஞானநூல்
எய்ப்பிலாதெங்கணு நாடியீட்டலால்
கைப்படுமெறப்வக் காட்சிபெற்றுளான். ௨௦

சாத்திரவிசாரணை தனதுல்லாசமாய்
நேத்திரம்வாக்கொடு நினைவும்நின்மல
தோத்திரமோதலுஞ் சூழ்பரானந்த
பாத்திரமாச்சதா பழக்கஞ்செய்பவன். ௨௧

தனமுதற்பொருள்களிற் சார்பற்றின்றியே
மனமுறநல்லறவழியிற்போக்கிய
கனமுறுபகீரதன் கருதுமாசர்வ
இனமுறுதியாகமிங் கெய்தப்பெற்றனன். ௨௨

அருட்டருசெல்வமே யனகமாக்கொளும்
பொருட்டருசெல்வத்தைப் பூரியோர்கொள
மருட்டருபோகத்தின் மதிப்பிலாதவன்
இருட்டருமாயைபோ யின்பமெய்தினன். ௨௩

நித்தியவனித்திய நிலையுணர்ந்துள்ம்
சத்தியவற்புத சதோதயானந்த
வித்தகசங்கற்ப மேவியாவையும்
அத்தனதருள்வடி வாகக்காண்பவன். உ௪

அகமெனவின்றியே யாவுமானதோர்
சுகசுவரூபந்தனிற் சுகித்துமேல்வர்
நிகமமாவாக்கிய நிலைவழாநெறி
சகவிவகாரங்கள் சார்ந்தும்பற்றிலான். உரு

நல்லனயாவையு நயந்தசிந்தையன்
செல்வமுமின்மையுஞ் சேரக்கண்டுளம்
தில்லையம்பலத்தினிற் றிகழ்ந்துசாந்தனாய்
அல்லலற்றங்ஙனம் வாழ்வமைந்துளான். உ௬

வேறு.

இல்லறத்தினைம்பானைந்தாண்டியல்புறவிருந்து
நல்லறம்பலவீஸ்வராற்பணமதாய்நயந்து
தில்லைமாவனசிதம்பரக்ஷேத்திரமடைந்து
சொல்லும்வானப்பிரஸ்தாசிரமத்தவநனிதொடர்ந்தான். உ௭

நாளுமம்பலவாணனையுளத்துறநாடி
ஆளுங்குஞ்சிதபாதமுமரச்சனைமிதித்த
தாளுந்தோள்களுமான்மழுதரித்தசெங்கரமும்
நீளுமாமொளிநிலவுமைந்தொழில்புரிநிருத்தம். உ௮

கண்டுகண்குளிர்சிவானந்தபோதமெய்கலந்து
அண்டரும்பெறற்கரியவாழ்விம்மையினனுபவி
விண்டசெந்தமிழாற்பலபநுவலும்விளம்பி
தொண்டருட்சிறந்திருந்தனனுலகெலாந்துதிக்க. உ௯

அரும்பெறற்சனனத்தவரனைவரும்வாழ்க
மருவுசிவனின்முத்தராமிவர்தவம்வாழ்க
ஒருமையாயிவருரைத்தமெய்க்காவியம்வாழ்க
திருவிளங்குசிற்றம்பலச்செல்வர்சீர்வாழ்க. ௩௦

இஃது
இயற்றமிழாசிரியர்
புதுவை. க. சுப்பராயமுதலியா ரியற்றியது.

ஸ்ரீராமஜெயம்.

நூல்வரலாறு.

ஆதிகாலத்தில் ஸ்ரீவசிஷ்டமுனிவர் ஸ்ரீராமமூர்த்திக்கு உப தேசித்தருளிய ஞானவாசிட்டவமலராமாயனம் ஸ்ரீவான்மீக மஹாருஷியால் ஸ்ரீபரத்துவாஜருஷிக்கு தேவதூதவாக்கியமாக வைராக்கியம், முமூட்சு, உற்பத்தி, திதி, உபசாந்தி, நிருவாணம் என்னும் ஆறுபிரகரணங்களாக முப்பத்திராயிரஞ்சுலோகத்தால் எடுத்துக்கூறிய மூலகிரந்தப்பிரகாரம், நிருவாணப்பிரகரணத்து மூற்பாதிமுடிவிலுள்ள மேல் ஆறுபிரகரணசாரமான பரத்துவா ஜ அநுசாஸனம், இராமவியுத்தாபனம் என்னும் இரண்டுசெருக்க மும் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமுத்துசாமியையராலும், சென்ன ப்பநாய்க்கன்பாளையம் ஸ்ரீகந்தப்பையராலும், தஞ்சாவூர் சமஸ் ரதனத்திலிருந்து எடுத்தெழுதிவந்த மேல் மூலக்கிரந்தம் அதன் வியாக்கியானம்போல கொந்தமூர்-வரதாசாரியரென்னும் வியா கர்ணபண்டிதர் பொருளெடுத்துக்கூற புதுவை. வெ. பொ. சிவா னந்தமூர்த்தி மொழிபெயர்த்து தமிழ்க்கவிதையாகப்பாடி மே ல் வியாக்கியானுத்துக் கொத்தபடி உரையுஞ்செய்து உலோகோ பகாரமாக அச்சிற்பதிப்பித்து பயன்படுத்தினர்.

சிவமயம்.

ஆத்மசுவரூப விளக்கம்.

(பிரபஞ்சோற்பத்தி.)

ஆதியாஞ் சித்தி லகிலசகத் தோற்றம்
பூதபௌ திகப் புணர்ப்பு. க

(பூதாத்மசுவரூபம்.)

பஞ்சபூ தத்தின் பகருந்தன் மாத்திரையால்
விஞ்சுசரீ ரப்பூதாத் மா. ௨

(சீவாத்மசுவரூபம்.)

பூதாத்மா தன்னிற் பொருந்தும்பல் சீவாத்மா
தீதசுப சற்கருமத் தால் ௩

(பரமாத்மசுவரூபம்.)

மகதத் துவமெனும்பேர் வாய்ந்தவந்த ராத்மா
அகமாதி விந்திய வாதி ௪

(பரமாத்ம சீவாத்மத்தொழில்.)

பரமாத்ம சீவாத்மா பௌதிகதே கத்தில்
விரவியிச்சை யாய்நடிக்கு மே ௫

(பரமாத்மாவினின்று சீவகரணந்தோற்றல்.)

பரமாத் துமத்தனுவிற் பஃறீப் பொறிபோல்
வருமிலிங்கத் தேகவகை வந்து ௬

(தேவநராதிதேகம்பெற்றுசுபாசுபகருமஞ்செயல்.)

தேவர் நரர்முதலாஞ் சீவகர் ணத்தாலே
ஓவில்கரு மம்முஞற்று வ எ

சத்துவமே ராஜதமே தாமதமென் முக்குணங்கள்
ஒத்துயிர்க் காத்மா வுதவுமே அ

(முக்குணத்தாற்சீவபேதமுண்டாதல்.)

எக்குணத்தின்மேலீட்டாலெவ்வெவுயிர்தோற்றுகின்ற
தக்குணத்தாற் றாதம்ய மாம் கூ

(முக்குணலக்ஷணம் சத்துவம்.)

அவ்வப் பொருளி னெதார்த்த மறிதலே
செவ்வியதாஞ் சத்வகுணச் சீர் க௦

(இராஜசம்)

இராகத்வே ஷாதி ரஜோகுணத்தின் செய்கை
தராவிஸ்வா சம்வியசனந் தான் கக

(தாமதம்.)

ஓர்பொருளை மற்றொன்று யோர்தலே தாமதத்தின்
சீரில் குணமாகுந் தெளி க௨

(முக்குணசுவரூபம்.)

தெளிவாய்ச் சுகித்தலே சேரசத்துவ சுவரூபம்
களிவிடயத் தாழ்விரண்டாங் காண் கங

சத்தசத்தைத்தேருது தாழ்விஷயத் தாழ்ந்திருள்போல்
மத்தமுறல் தாமதமா மே கச

தாமதமே காமந் தனவிச்சை ராஜதமாம்
காமர்தரு மஞ்சாத்வீ கம் கரு

(சத்வகுணச்செய்கை.)

வேதம் விரதம் மிகுசாத்திர ஞானம்
திதிலற மாத்மத் தியானம் கசு

(இரஜோகுணச்செய்கை.)

காமியயா கங்காமங் காரியநீள் செய்கையவா
மீமிசைசேர்ந் தஞ்சுதலு மே கஎ

(தாமதகுணச்செய்கை.)

நாத்திகவா தந்தீச்சொல் நன்மையில்பே ராசைதுயில்
தோற்றிடு கார்ப்பணயஞ் சோம்பல் கஅ

(தமோகுணத்தின் முக்கதி.)

தமோகுணத்தின் முக்கதியாற் முவரசெந் தாதி
சமானசண்டா ளாதி தோற்றம் கசு

(இரஜோகுணத்தின்முக்கதி.)

இரஜோகுணத்தின் முக்கதியா னரவப்ஜ ராதி
தராதரமாந் தோற்றந் தரும் உ0

(சத்துவகுணத்தின் முக்கதி.)

சத்துவத்தின் முக்கதியாற் சாரவர் சுரரசுரர்
வித்தகக்கோள் பிரம்மாதி வேறு உக

(கன்மபலன்.)

உத்தமமு மத்திமமு மோததம கன்மத்தின்
முத்திறஞ்சு பாசுபமு லம் உஉ

தேவர் மனிதர் திரியக்கு தாவரமாம்
பாவசென்ம முண்டாம் பல உ௩

மனோவாக்கு காயத்தால் வாய்ந்திடுகன் மங்கள்
தனுதுசுக துக்கந் தரும் உ௪

சற்கருமத் தாற்சுபமுந் தாழ்கருமத் தாற்றுயரும்
பற்றுவதே வாதிநரர் பண்பு உரு

(திரிகரணச்செயல்,)

மூக்கரணத் தின்மனமே மூலமதாம் பின்வகுத்த
அக்கருமம் பத்தினுக் காதி உசா

(மனத்தால்வருங்கன்மம்.)

பிறன்பொருளை வெளவல் பிரமஹத்தி செய்தல்
உறுதேகந் தானென வுன்னல். உஎ

(வாக்கால்வருங் கன்மம்.)

கடுஞ்சொல்பொய் கோட்கூறல் காரியமில் சொற்கள்
படுவாக்காற் செய்பாவங் கள் உஅ

(காயத்தால்வருங்கன்மம்.)

அறனில் கொலைகாம மன்னியதா ரந்தோய்வ
மறஞ்சேர்கா யப்பாவ மாம் உகூ

(சத்கன்மம்.)

வாக்குமனோ காயத்தால் வந்துறுமிப் பாவகன்மம்
நீக்குவதே சத்கரும நேர் ௩௦

(கன்மானுபவம்.)

வாக்குமனோ காயத்தால் வந்தகன்ம மவ்வவற்றால்
யார்க்குமனு போகமிரு மை ௩க

தேகத்தாற் செய்பாவந் தாவரசென் மஞ்சேர்க்கும்
ஆகியவாக் காற்றிரியக் காம் ௩உ

மனத்தினுற் செய்பாபம் வன்சண்டா ளாதி
இனத்தவிழி சென்மமெடுக் கும் ௩௩

(திரிகரணசுத்தி.)

வாக்குமனே காயம் வயப்படுத்தித் தண்டித்தல்
நீக்குதிரி தண்டியெதி னேர் ௩௪

திரிகரணந் தம்மைச் ஜெயித்துசுபத் துய்த்தல்
அரியமுத்தி சித்தியுண்டா மால் ௩௫

(இருவினைப்பயன்.)

இருவினையாற் சாரு மிடர்நரக சுவர்க்கம்
தருவதெண்ணிச் சத்கருமஞ் செய் ௩௬

சத்கன்ம மேலீட்டாற் சாற்றுந்தன் மாத்திரையில்
உத்தமபோ கத்தனுவுண் டாம் ௩௭

பாபகன்ம மேலீட்டாற் பஞ்சதன் மாத்திரையில்
மேவுமுடல் யாதனைக்கா மே ௩௮

சத்தசத்தாங் கன்மந் தமையே பரமாத்மா
நித்தியமாய்க் கண்டுண்மிக் கும் ௩௯

(பிரவிர்த்தநிவர்த்தகன்மம்)

பிரவிர்த்த நிவர்த்தமெனப் பேதமுள கன்மம்
நிவர்த்த முத்திக் கான நெறியே ௪0

பிரவிர்த்த கன்மமேன்மேற் பிறப்பளைத்தற் கீண்டும்
நிவர்த்தமுத்தி சேரு நிலை. ௪௧

(மோக்ஷசாதனம்.)

வேதமுறை யேயோதல் மெய்யுணர்தல் நல்விரதம்
திதிலறம் யாகஞ்செய் தல் சுஉ

விடயத்தி லிந்திரிய மேவா தடக்கல்
அடைகுருவிற் காம்பணிசெய் தல் சுரு

முத்திக்குச் சாதனமா முற்கூ றிவையாறும்
ஒத்தாத்ம போதமுண் டாம் சுச

சகலபூ தத்தாத்மா தன்னிற் சகமும்
சுகவறிவாற் கண்டுசுகித் தல் சுரு

பூதாதி தேகம் புணர்தத் துவமனைத்தும்
ஆதாரத் தவ்வவைசேர்த் தல் சுசு

(சீவன்முத்திநிலை.)

செய்சற் கருமமெலாந் தேவார்ப் பணஞ்செய்தல்
உய்ஜீவன் முத்தி நிலை சுஎ

வேதாந்த வுண்மை விசாரித்தி யானெனதென்
றேதாமை யுண்மை நிலை சுஅ

பிரமசா க்ஷாத்கா ரம் பெற்றோர்க்கு மற்றும்
திரமில்ரா கத்திவேஷ மில் சுகூ

(ஆத்மத்தியானசமாதி.)

தேஜோ மயமாய்த் திகழ்சுவர்னச் சாயையதாய்
மாஜாக்ர தியான மடைக எ0

சுத்த தியானஞ் சுவரூபந்தா னுய்நின்ற
சித்தமா னந்த சமாதி எக

திருச்சிற்றம்பலம்.

சம்பூரணம்.

உ

சிவமயம்.

வசிஷ்டமுனிவர் ஸ்ரீராமருக்கு

உபதேசித்தருளிய

ஞானவாசிட்ட வமலராமாயணம்.

நிருவாணப்பிரகரணம்.

மேவுபாலகாண்டத்தில் விரித்தமோக்ஷோபாயமெனத்
தேவதூத வாக்கியமாத் திகழ்முப்பானீ ராயிரத்தில்
ஆவதான பிரகரண மாறில்நிருவா ணத்துமுதற்
பாவமுடிவிற் பரத்வாஜவநுசாசனமாப் பகர்வதிது.

—*—

பரத்வாஜ அநுசாஸனம்.

வியாக்கியானகவி—விநாயகர் துதி.

இந்தச்சருக்கத் திராமமகா மூர்த்தியியன்ற விசிராந்தி, அந்தப்பரத்து வாஜமுனி யறைந்தவியன்மா மொழிதொடர்பா, முந்துசாக்ரா தியவவத்தை முறைமைதுரிய பதநிலைமை, எந்தையருண்மா முகக்கடவு ளிருதாள்போற்றி யுளாசெய்வாம்.

அவதாரிகை.

ஸ்ரீவசிட்டமுனிவர் ஸ்ரீராமமூர்த்திக்கு வைராக்கியப் பிரகரணமுதல் நிருவாணப்பிரகரணமீறாக - போதனைசெய்து வந்தமுடிவில், (எனக்கீதென்னு முணர்வுடைமை யிடர்விட்டன

லாவுணர்வின்மை, அனர்த்தமில்லா வீடளிக்கு மாசையே திங் கது செய்வாய், சனிப்பில் சிவமெங்கணுமுளது சாந்தஞ் சுபஞ் சித்துருவென்னும், கனத்தவிந்தவொருநினைவேகருமத்தியாகமி ராகவனே) என்னுங்கவியின்பொருளான நித்தியபூரணசுகபோ தமான சிவஸ்வரூபமேயாவுமாய் விளங்குவதென்னுஞ் சுவாநு பூதியே சருமத்தியாகமென வாக்கியார்த்த உபதேசத்தையரு ளி, சமாதிசாட்சாத்காரம் அடைவாயென்று அநுக்கிரகஞ்செய் தபடி, ஸ்ரீராமமூர்த்தியடைந்த விசிராந்திசுகத்தை நினைத்தமாத் திரத்தில் ஸ்ரீவான்மீகமகாரிஷிக்கு உண்டான ஆனந்தாவிர்பாவ த்தால் விசிராந்தியடைந்து மௌனமாயிருந்தமைகண்டு பரத் வாஜரிஷி இன்னமுந்தமக்கு அவ்வாறே விசிராந்திவாராமை யால் மேலும் சிரவணத்தையே விரும்பி பிரச்னம்பண்ணுகி ன்றார்..

கவிதை.

இவ்வாறு வசிட்டமுனி நெடிதுணைத்த தொன்மை யதா யிலங்குஞானந், தவ்வாத சாரமெலாங் கேட்டுவந் தாகுநாதன் றளர்வுநீங்கி, ஒவ்வாத சமபரிபூரணசுகமா போதநிறைந் துறைந்தா னன்றி, அவ்வாறே வினவின ஞே குரவவெனப் பரத்துவாஜ னங்ஙன்கேளா.

இ-ள். இவ்வாறு வசிட்டமுனி - இந்தப்பிரகாரம் வசி ட்டமுனிவர், நெடிதுணைத்த - விரிவாகக்கூறிய, தொன்மைய தாயிலங்குஞானம்-பழமையாய்விளங்குகின்ற ஞானத்தின், தவ் வாதசாரமெலாம் - குறைவற்றவிரசமுற்றும், கேட்டுவந்தாகுநா தன்-கேட்டு மகிழ்ச்சியடைந்த இராமமூர்த்தி, தளர்வுநீங்கி-வை ராக்கியத்தாற்றோன்றிய தளர்ச்சிநீங்கி, ஒவ்வாத - ஒப்பில்லாத, சமபரிபூரணசுகமாபோதம் - சமபரிபூரணஞானாநந்தம், நிறைந்

துறைந்தான் - நிறையப்பெற்றுவிளங்கினரா, அன்றி - அல்லது, அவ்வாறே - முன்போலவே, வினவினனே-வினவுதல் செய்தாரா, குரவவெனப்பரத்துவாஜன் அங்ஙன்கேளா - குருவே சொல்லவேண்டுமென்று ப்ரத்துவாஜரிஷிவினவி, மேலும்.எ-று.

தாற்பரியம்.

வசிட்டமுனிவர் வெகுவிதமாசப் போதித்துவந்த பிரமாதி சம்பிரதாயமாயுண்டான ஞானசாரத்தைக் கேட்டுணர்ந்த ஸ்ரீராமமூர்த்தி மேலும் பிரச்னைசெய்தாரோ, அல்லது சுவாநுபூதி சாட்சாத்காரமடைந்தாரோ அதைக்கூறவேண்டுமென்று பரத்வாஜர் வான்மீகமகாரிஷியை வினவியது. (க)

(அ-கை.) கேள்வி இருவருக்கும்சரியாசவிருக்கஉனக்குண்டான சந்தேகமோக நீங்கினதும் நீங்காததுங்கொண்டுஇராமருக்கும் அவ்வாறே நிச்சயிக்கலாகாதோவென்று சங்கிக்கப்போகாது ஏனென்றால் இராமருக்கும் எனக்கும் மிகதாரதம்மியமுண்டென்று ப்ரத்துவாஜர் மேலும்கூறுகின்றார்.

அனையரா கவன்பரம யோகிமூ வுலகேத்து மமரர்
நாதன், இனையவரு பிறப்பிறப்பி லாதசுத்த போதசுபா
வத்தனெல்லாப், புனைகுணங்கட் குறையுளா னவன்கம
லை யகமகிழும் புனிதவாசன், கனைகடல்சூ ழகிலமெலா
ம் படைத்தளித்து நீக்கவல்ல கடவுளானேன்.

இ-ள். அனையராகவன் - அம்மேன்மையுடைய ஸ்ரீராமர், பரமயோகி - இயல்பாக ஞானயோகமுடையவர், மூவுலகேத்துமமரர்நாதன் - திரிலோகங்களுந் துதிக்கின்ற தேவோத்தமர், இனையவருபிறப் பிறப்பிலாத - துன்பத்துக்கேதுவான ஜனன மரணம் இல்லாதவர், சுத்தபோதசுபாவத்தன் - நிர்மலஞானஸ்

வரூப்ர், எல்லாப்புனேகுணங்கட்குறையுளானவன் - சகலசத்குணங்களுக்கும் வைப்பானவர், கமலையகமகிழும் புனிதவாசன் - ஸ்ரீமகாலட்சுமி வாசஸ்தானமானவர், கனேகடல்சூழகிலமெலாம் - சத்திக்கின்றகடல்சூழ்ந்த சகலசகத்தையும், படைத்தளித்துநீக்கவல்ல கடவுளானேன் - சிருட்டி திதி யநுக்கிரகஞ் செய்யும் வல்லமையுள்ளசர்வேஸ்வரராயு மிருக்கின்ருர்—எ-று. (தா-ம்.) ஸ்ரீராமமூர்த்தி நித்தியசித்தமான ஞானயோக ஐஸ்வரியமுள்ளவர், யானே அணுதியஞ்ஞானமுள்ளவன் அற்பமான சாதனசம்பத்தியுடன் மோக்ஷேச்சையுள்ளவன் எனக்கும் அவருக்கும் வெகுதாரதம்மியமுண்டென்று குறிப்பித்தது. (உ)

(அ-கை.) இவ்வாறு ப்ரத்துவாஜர்வினவ, வான்மீகமகாரிஷி அவரதுகேள்வியிரண்டனுள் முதற்பக்ஷத்தைசாதித்து உத்தரஞ் சொல்லுகின்ருர்.

முனம்வகுத்த வேதாந்தப் பொருளெல்லாந் தொ
குத்துரைத்த முனிவாசிட்டன், அனகவாக்கியங்கேட்டு
மலர்க்கணிரா கவன்ஞான மனேத்துமோர்ந்து, கனசுக
வா னந்ததத்வோ தயவசத்தா லகமலர்ந்து களங்கநீங்கி,
மனநிறைந்தோர் முகுர்த்தவரை சைதன்யா னந்தமகோ
ததியாய்கின்ருன்.

இ-ள். முனம்வகுத்த வேதாந்தப்பொருளெல்லாம் - முன்புவகுத்துக்கூறிய வேதாந்தவர்த்தமெல்லாம், தொகுத்துரைத்தமுனிவாசிட்டன் - நிருவாணப்பிரகரணத்தால்கூட்டிப் போதனைசெய்த வசிட்டமுனிவரது, அனகவாக்கியங்கேட்டு- பரிசுத்தமான வாக்கியங்களைக் கேட்டுக்கொண்டு, மலர்க்கணிராகவன் ஞானமனேத்துமோர்ந்து-கமலலோசனரான ராமர் ஞானமுற்றுமுணர்ந்து, கனசுகவானந்த தத்வோதயவசத்தால் - (சத்தி

பாதவசத்தால்,) அகமலர்ந்து - (உன்மேஷத்தால்பிரகாசித்து) அகமலர்ச்சியுண்டாய், களங்கநீங்கி - நிர்மலசுவ்ரூபியாய், மன நிறைந்து - மனதுபூரணமாய்; ஓர் முகுர்த்தவளா - ஒருமுகுர்த்த காலமட்டும், சைதன்யானந்தமகோததியாய் நின்றுன்-சுவரூபத் தில்சாக்ரமுடையவராய்பிர்ம்மானந்த சமுத்திரமாய்விளங்கினர் எ-று. (ப - ம்.) சத்திபாதமாவது-அகண்டாகாரவாக்கியசிரவண த்தாலுண்டான சித்தவிருத்தியில் நித்தியநிரதிசயானந் தாத்மத த்வோதயமாம், உன்மேஷமாவது-அதன்வசத்தால் அவித்தியா சம்புடத்தைத் திறப்பதாகிய ஞானவிகாசமாம். (தா-ம்.) ஸ்ரீராம மூர்த்தி நிருவிகற்பசமாதியடைந்தமை கூறியது. (ந)

இதுவுமது.

ஆங்கமைந்து கடாவிடையின் மனநீங்கிப் பரானந் தவமுதாற்பூரித், தோங்காரா காரமதாம் பிராணனெடு முரோமபுள கிதமாயங்கம், நீங்காதசிற்சாமா னியசொ ரூப வியாபகத்தா னிறைந்துநித்யம், தாங்கியவட் டயிஸ் வரியந் திரணமென நினைமனந்தான் சமித்ததன்றே.

இ-ள். ஆங்கமைந்து - அவ்வாறுநிலைபெற்று, கடாவிடை யின்மனநீங்கி-வினுவிடைகளால் பகுத்தறிதல்முதலான மனோ விவகாரமற்றவராய், பரானந்தவமுதாற்பூரித்து-பரமானந்தவமு தால் நிறையப்பெற்று, ஓங்காராகாரமதாம்பிராணனெடும் - பிர ணவாகாரமான உயிர்ப்புடையவராய், உரோமபுளகிதமாயங்கம்- சரீரமெங்கும் மயிர்க்கூச்சுள்ளவராய், நீங்காத - பிரிவின்றிய, சிற்சாமானிய சொரூபவியாபகத்தால் - சன்மாத்திரமான சொ ரூபவியாபகத்தால், நிறைந்து - பூரணமாய், நித்யம் - எப்போ தும், தாங்கியவட்டயிஸ்வரியம் - கிடைத்திருக்கின்ற அணிமா திஅஷ்டயிஸ்வரியங்களை, திரணமெனநினைமனந்தான்-திரணமா

கரிலீனக்கின்றமனம், சமித்ததன்றே-உப்சாந்தமடைந்தது-எ-று. (ப-ம்.) சர்வாதிஷ்டான சன்மாத்திரமாயிருத்தலே பிரத்யகாத்ம சுவரூபமாம், அங்ஙனம் எங்கும் சித்வியாபகமாயிருத்தலே நிரதிசயானந்தாவிர்ப்பாவமாம், இவை அஷ்டயிஸ்வரியங்களிலுந் திரணப்பிராய மனோரதரென்றதனால் வெளியிடப்பட்டது. (தா-ம்.) வெளிப்படை. (சு)

(அ-கை.) உத்தமாதிகாரியான இராமருக்கு சிரவணாதியால் வந்த பிரமப்பிராப்த்தியை வர்ணித்து மந்தமத்திம அதிகாரிகளுக்கு சித்தசுத்திவரும்பொருட்டு உபாசனாவிசேஷத்தையும், மூன்றுஅவத்தைகளின் விவேகத்தால் திரிசியங்களை லயஞ்செய்வது முதலான மனோபாயங்களையுஞ்சொல்ல அவைவருதற்கு ஏதுவாகிய பரத்துவாஜருடைய ஆச்சரியமொழி முதலானவைகளை அரிஷ்டநேமியென்னும் இராஜனுக்கு வான்மீகமகாரிஷி எடுத்துக்கூறுகின்றார்.

சிவபதத்தி லேகரச மாக்கலந்து பூரணமாத் திகழ்ந்தியாதொன் றும், அவனுரையா திருந்தனனென் றுன் முனிவன் பரத்துவாஜ னதனைக்கேளா, தவமுனிநா யகவிந்த மகாபதத்தை யிராகவன்றான் சார்ந்தானீது, பவமகலா வெனக்குமிக வாச்சரிய மீதெங்ஙன் பலிப்பதென்று.

இ-ள். சிவப்தத்தில்-பிரமபதத்தில், ஏகரசமாக்கலந்து-ஒரே அம்சமாகக்சலந்து, பூரணமாத்திகழ்ந்து-பரிபூரணமாய்விளங்கிக்கொண்டு, இயாதொன்றும் அவனுரையா திருந்தனனென்றான் முனிவன்-ஏதொன்றும் இராமர்கூறாது மௌனமாயிருந்தாரென்று வான்மீகமுனிவர்கூறினார், பரத்துவாஜனதனைக்கேளா -

பரத்துவாஜர் அதனைக்கேட்டு, தவமுனிநாயக - மகாதப்முடை யமுனிசிரோஷ்டரே, இந்தமகாப்தத்தை - இந்தமேலானமுத்தி பதத்தை, இராகவன்முன் சார்ந்தான் - இராமர்தா னடைந்தார், ஈதுபவமகலாவெனக்கு மிகவாச்சரியம் - பாபியானவெனக்கு இது மிகுந்தஆச்சரியமாயிருக்கின்றது, ஈதெங்ஙன்பலிப்பதென்னு - இப்பேறு எனக்கெவ்வகை கிடைக்குமென்று வினவி, மேலும்—எ-று. (ரு)

இதுவுமது.

மூகராய் மதமேறிச் சிற்றறிவி னெம்போல்வார் முயர்ச்சியெங்கே, மாகமுறு பிரமாதி தேவர்களும் பிரார்த்திக்கு மகிமைமிக்க, சோகமறு மிராமனுள நிலையெங்கே குருமூர்த்தி சூழற்பாற்றே, தாகமுறு பவவேலைக் கரையறியா மோகவெள்ளந் தாண்டலெங்கே.

இ-ள். மூகராய் மதமேறி - மூடர்களாய் மதமிகுந்த, சிற்றறிவினெம்போல்வார் - அற்பவறிவினராயிருக்கின்ற என்போலியர், முயர்ச்சியெங்கே - பிரயத்தினமெவ்வளவு, மாகமுறுபிரமாதிதேவர்களும் பிரார்த்திக்கு மகிமைமிக்க - வானத்துள்ள பிரமாதிதேவர்களும் பிரார்த்திக்கத்தக்க மேன்மையுள்ள, சோகமறுமிராமனுளநிலையெங்கே- சோகமற்ற இராமருள்ள நிலையெத்தன்மைத்து, குருமூர்த்தி - ஓ குருராயரே, சூழற்பாற்றே - நானடையத்தகுமா, தாகமுறுபவவேலைக்கரையறியா-அவாவுகின்ற பிறவிசமுத்திரத்தின் கரைகாணப்படவில்லை, மோகவெள்ளந்தாண்டலெங்கே - யான்மோகப்பிரவாகத்தைக் கடப்பதெங்ஙனம் கூறல்வேண்டும்—எ-று. (சு)

(அ-கை.) இராமருக்குக் கிடைத்தநிலை எம்போல்வார்க்கு அரிதாதலால் அதுகிடைக்குமாறு கூறவேண்டுமென்று பரத்து

வாஜர்வினவ, வான்மீகரிஷிஅதற்கு சிரவணம் செய்ததையே ம னனஞ்செய்யவேண்டு மென்கின்றார்.

ஈதெமக்கு நன்குணரக் கடிதுபுகன் றருளென்ன வியல்வான்மீகி, ஆதிமுத னிருமித்த வசிட்டவாக் கியங் கடமை யநுசரித்தே, எதிலிரா கவன்சரித முழுதுநின்ற ன் புந்தியினு லினிதாலோசி, தீதிலதே யெம்மாலிங் கு ன்பொருட்டா லெடுத்துரைக்கச் சிறந்ததென்றான்.

இ-ள். ஈதெமக்குநன்குணர - இதையான் நன்றாயுணரும் படி, கடிதுபுகன்றருளென்ன - விரைவிற் கூறவேண்டுமென்று பரத்துவாஜர் வினவ, இயல்வான்மீகி - சிரேஷ்டரானவான்மீ கர், ஆதிமுதனிருமித்த-ஆரம்பமுதல்எடுத்துக்கூறிய, வசிட்டவா க்கியங்கடமை யநுசரித்து-வசிட்டமுனிவர் வாக்கியங்களை அநு சந்தித்து, எதிலிராகவன்சரிதமுழுதும்-களங்கமற்ற இராமருடை யசரித்திரமுற்றும், நின்றன் புந்தியினுலினிதாலோசி - நினதுபு த்தியால் பரியாலோசனைபண்ணக்கடவாய், தீதிலதேயெம்மாலிங் கு-குற்றமற்ற அப்பொருளையே எம்மால் இப்போதும், உன்பொ ருட்டால்-நினக்கு, எடுத்துரைக்கச்சிறந்ததென்றான் - எடுத்துச் சொல்லத்தக்கதென்றார்—எ-று. இந்த மூன்றுகவியின் (தா-ம்) இராமர் அடைந்த மேலானநிலையை பரத்துவாஜர்கேட்டு இன் னும் சிரவணத்தையே விரும்பி வினவ, அதற்கு வான்மீகர் சிர வணஞ்செய்ததையே சிந்தனையாவிர்த்தி செய்யவேண்டுமென் று மேலும் உபதேசிக்கத்தொடங்கியது. (எ)

(அ-கை.) பிரபஞ்சம் மித்தையென்று விவேகிகளறிவார் அவிவேகிகள் அறியாரென்கின்றார்.

அவித்தையின் காரிய மாகு மிச்சகம்
உவப்புறற் கிலேசமு முண்மை யில்லைகாண்

தவப்பெரு விவேகியித் தன்மையோர்ந்திடும்
அவப்புலமூடர்களறைவர்தர்க்கமே.

இ-ள். அவித்தையின்காரியமாகுமிச்சகம் - இந்தப்பிரபஞ்சம் அஞ்ஞானத்தாலுண்டான விஷயமாம், உவப்புறற்கிலேசமுமுண்மையில்லைகாண்- சுகித்தற்கு அற்பமும் சத்தியமல்ல வென்றறியக்கடவாய், தவப்பெரு விவேகியித்தன்மையோர்ந்திடும்- தவமுடையபுத்திமான் இந்த எதார்த்தமறிவான், அவப்புலமூடர்கள் - வீணேபுலன்வழியிற்செல்லுமூடர்கள்,அறைவர்தர்க்கமே - வாதஞ்செய்துக்கொண்டிருப்பார்கள்—எ-று. (தா-ம்) பிரபஞ்சம் அசத்தென்றும், சித்தின் அத்துவைதாதிசயமென்றும் விவேகிகளறிந்து சுகிப்பார்கள், அவிவேகிகள் வாதிப்பார்களென்றது. (அ)

(அ-கை.) பொய்யானதுவைதத்தினுல் அத்வைதத்திற்கு ஆனியில்லை யென்கின்முர்.

ஒருபொருண் மற்றொருபொருட்கு வேறிலை
வருமுலகத்தினுன் மறைப்பென் வள்ளலே
பிரணவமுதன்மறை பேசும் வாக்கியம்
மருவுமப் பியாசஞ்செய் மனது சுத்தியாம்.

இ-ள். ஒருபொருள் - ஓர்வஸ்து, மற்றொருபொருட்கு - மற்றோர்வஸ்துவுக்கு, வேறிலை-வேறுபட்டதல்ல, வருமுலகத்தினுன் - இங்ஙனந்தோற்றமான பிரபஞ்சத்தினுல், மறைப்பென் வள்ளலே - வண்மையுள்ளபரத்துவாஜனே என்மறைக்கப்படுகின்றுய், பிரணவமுதன்மறை பேசும்வாக்கியம் - பிரணவமுதலான மகாவாக்கியமந்திரங்களை, மருவுமப்பியாசஞ்செய் - பொருந்தியப்பழக்கஞ்செய்வாயாக, மனதுசுத்தியாம் - மனேபரிசுத்தமு

ண்டாகும்—எ-று. (தா-ம்.) எப்பொருளும் சச்சிதானந்தாம்ச மாயிருத்தலின் வேற்றுமையில்லையென்றுகருத்து. (௯)

(அ-கை.) அவற்றுள் முதலில் பிரணவத்தின் முதன்மாத்திரையின்பொருளான ஜாக்ரப்பிரபஞ்சத்தை தெரிந்து அதின்சாட்சிவிவேகம் வரும்பொருட்டு பொய்யென்று நிரூபிக்கின்றார்.

எவனுளந் தன்னிலே யிலகுஞ்சித்தொளி
அவனவ னியினுள் விஷய மாகிய
பவமுறு சாக்கிரம் பயின்ற நித்ரையின்
நவமுறு கனவுபோ னயந்து காணுமே.

இ-ள். எவனுளந்தன்னிலே - இயாவன்மனதில், இலகுஞ்சித்தொளி- ஞானதீபம் பிரகாசிக்கின்றதோ, அவனவனியினுளவிஷயமாகிய - அவனுக்குப் பிரபஞ்சவிஷயமான, பவமுறுசாக்கிரம்-தோற்றுகின்ற சாக்ரவிர்த்தியானது, பயின்றநித்ரையின்- உண்டானநித்திரையினிடத்து, நவமுறுகனவுபோல்-புதுமையானசொப்பனம்போல், நயந்துகாணுமே-நன்றாய்விளங்கும்-எ-று. (தா-ம்.) சீவன்முத்தனான ஞானிக்கு மூன்றவத்தைகளும் மூன்றுசொப்பனமாக தோற்றுமென்று சுருதியிற்கூறப்பட்ட கருத்தை உணர்த்தியது. அவத்தாதிரய சாட்சிமாத்திரமாய் சுகிப்பானென்றுகருத்து. (௧௦)

இதுவுமது.

ஆயவிப் பிரபஞ்ச மவித்தை மூலமாம்
மேயது முடிவினும் விலகுஞ் சூன்யமாய்
பாயவிம் மத்தியிற் பயனின் றுதலால்
தூயநல் விவேகிகள் துச்ச மென்பரே.

இ-ள். ஆயவிப்பிரபஞ்சம் - தோற்றமானவிந்தச்சகம், அவித்தைமூலமாம் - அஞ்ஞானத்தைக்காரணமாகவுடையது, மேயதுமுடிவினும் விலகுஞ்சூன்யமாய் - பொருந்திய இந்தச்சகம் விசாரணைமுடிவிலும் இல்லாமற் போகின்றது, பாயவிம்மத்தியில் - இதனடுவிலும், பயனின்மைதலால் - சத்தையில்லாமையால், தூயநல்விவேகிகள் - மெய்யுணர்வுடைய விவேகிகள், துச்சமென்பரோ - அசத்தியமென்று சொல்வார்கள்—எ-று. (தா-ம்.) நடுவிலுமென்றது - திரிவித்கரணத்தால் பகுத்தறிந்து பரியாலோசனை செய்யும்போது நிலையில்லாமல் பிராதிபாசிகமாத்திரமாயிருத்தலால் அதில் விவேகிகள் சத்தியபுத்திவையார்களென்றுகருத்து. (ப-ம்) திரிவித்கரணமாவது-வியாவகாரிகன், பிராதிபாசிகன், பாரமார்த்திகன் பேதமறிதல். (கக)

(அ-கை.) அசத்தானபிரபஞ்சம் வாசனையோடுகூடிய அவித்தையால் கந்தருவநகரம்போல தோற்றமாத்திரமென்கின்றார்.

அசத்தெனப் படுமிது வநாதி வாசனு
வசத்துறு தோஷத்தால் மருவுங் கந்தர்வ
விசித்திர நகரென மிகவும் பிரம்மையால்
இசைத்தசம் சாரந்தா னிங்ஙன் காணுமே

இ-ள். அசத்தெனப்படுமிது - பொய்யென்று சொல்லப்படும் இந்தப்பிரபஞ்சம், அநாதிவாசனுவசத்துறுதோஷத்தால் - அநாதி அவித்தியாவாசனை வசத்துண்டான தோஷத்தினால், மருவுங் கந்தர்வவிசித்திரநகரென - கந்தருவநகரம்போல் நானுநாமரூபபேதமாகத்தோன்றி, மிகவும்பிரம்மையால் - மிகுந்தமோகத்தால், இசைத்தசம்சாரந்தானிங்ஙன் காணுமே - சொல்லப்பட்ட விவகாரங்கள் உண்டாம்—எ-று. (கஉ)

(அ-கை.) சுத்தாசுத்தவாசனையை உவமானபூர்வமாகக் கூறுகின்றார்.

அமலநற் சுபந்தரு மழிவில் சைதன்ய
விமலமா வமிர்தபைங் கொடியை மேவுறு
தமமிகு வாசனை தங்கு நஞ்சதாய்
அமர்கொடி யென்கொல்நீ யணுகன் மோகத்தால்

இ-ள். அமலநற்சுபந்தரும் - பரிசுத்தமான மங்களந்தருகின்ற, அழிவில்சைதன்னிய - அழிவற்றஞானமாகிற, விமலமாவமிர்தபைங் கொடியை - சுத்தமான அமிர்தசஞ்சிவிக்கொடியை, மேவுறுது - அடையாமல், தமமிகுவாசனை - அஞ்ஞானமாகியபிரபஞ்சவாசனை, தங்குநஞ்சதாயமர்கொடி - தங்கும்படியான விஷக்கொடியை, என்கொல்நீயணுகன்மோகத்தால் - அறியாமையால்ஏன்அடைகின்றாய்—எ-று. (கரு)

இதுவுமது.

இத்தகு சாக்கிரந்தா னியல்நிரா லம்பப்பற்றை
பற்றுமுன் வீழ்ந்ததாங்குப் பற்றிய பின்புதோன்று
உத்தம துரியவிந்த நிராலம்ப வுலப்பின்ஞானம்
சத்துவ யோகமுள்ளோர் தமக்கநு பவமதாமே.

இ-ள். இத்தகுசாக்கிரந்தான் - இந்தசாக்ராவஸ்தையானது, இயல் நிராலம்பப்பற்றை - மேலானநிராலம்பஞானப்பற்றுக்கோட்டை, பற்றுமுன்வீழ்ந்தது - பிடிக்குமுன் வீழ்ந்துவிட்டது, பற்றியபின்புதோன்று - அதைப்பற்றிக்கொண்டால் பின்பு இந்தசாக்ராதி அவஸ்தாதாபங்கள் வரமாட்டாது, உத்தமதுரியவிந்த நிராலம்பவுலப்பில் ஞானம் - மேலான இந்தநாலாவது-துரிய நிராலம்பஞானம், சத்துவயோகமுள்ளோர் தமக்கநுப

வமதாமே-ஞானயோகிகளுக்கு அநுபவமாம்—எ-று. இ-ங-க-(தா-ம்.) சித்தநிலைக்கேதுவான நிராலம்பஞானம் பற்றைப் பற்றுவதன்முன் - இந்தசாக்ரமுதலான மூன்றவத்தைகளுண்டேயன்றி துரியதிசையில் தத்துவதரிசனத்தினுல் அவையில்லையென்றும் இதுஞானயோகிக் கநுபவமாமென்றுங்கூறியது. (கச)

இதுவுமது.

எம்மட்டு மமுதபூர்ண விரதமா ஞானவாரி
தம்மூயர் சுவரூபத்தியானந் தன்னினு லெய்தக்கிட்டா
தம்மட்டும் பிரபஞ்சபாவ வலைதிகழ் விக்ஷேபந்தான்
செம்மையன்நதியிற்ருேன்றுஞ்செறியுமஞ்ஞானத்தாலே

இ-ள். எம்மட்டும் - எதுபரியந்தம், அமுதபூர்ண விரதமா ஞானவாரி-அமிர்தப்பிராயமான ரசநிறைந்த ஞானநதியானது, தம்முயர் சுவரூபத்தியானந்தன்னினுல் - தமதுமேலான சுவரூப்பாவனையினுல், எய்தக்கிட்டா தம்மட்டும் - அடையக்கிடையாதோ அதுவரையில், பிரபஞ்சபாவவலைதிகழ் விக்ஷேபந்தான்-பிரபஞ்சபாவனையாகிற விக்ஷேப அலைகள், செம்மையன்நதியிற்ருேன்றுஞ்செறியு மஞ்ஞானத்தாலே - அஞ்ஞானத்தால் அவ்வெள்ளத்தில் தோன்றும்—எ-று. (தா-ம்.) அஞ்ஞானமிருக்கும்வரையிற்ருன் ஞானநதியில் ஜகத்தாகிற விக்ஷேப அலைகள் தோன்றுமென்றது. (கரு)

இதுவுமது.

முன்னமு மில்லையிந்தத் திரிசிய வஸ்துமுற்றும்
பின்னையு முடிவிலில்லை பிரித்திடி னுதலாலே
அன்னவை மத்தியத்து மபாவமென் றறிந்துகொள்வாய்
பன்னுறு கனவுபோலப் பார்த்திட வேண்டுநண்பு.

இ-ள். முன்னமுமில்லையிந்தத் திரிசியவஸ்துமுற்றும் - இந்தத்திரிசியமான சகலவஸ்துவும் ஆதியிலுமில்லை, பின்னையுமுடிவிலில்லை பிரித்திடின்-படுத்துணரும்போதுபின் அந்தத்திலுமில்லை, ஆதலாலே - ஆனதால், அன்னவைமத்தியத்தும் - அவைமத்தியகாலத்திலும், அபாவமென்றறிந்துகொள்வாய் - இல்லையென்றே அறிந்துகொள்ளக்கடவாய், பன்னுறுகனவுபோல-சொல்லப்பட்ட கனவைப்போல, பார்த்திடவேண்டுநண்ப - (சிநேகனே)? சாட்சிமாத்திரமாய்க் கண்டிருப்பாயாக—எ-று. (தா-ம்.) முன்னும்பின்னுமில்லாத வஸ்து நடுவிலும் இல்லையென்பதே யுக்தமாதலால் ஜகத்திரிசியம் கனவுபோலத் தோற்றமாத்திரமேயென்றது. (கசு)

இதுவுமது.

அவித்தைதான் மூலமாக வணுகுமிவ் வஸ்துபேதம்
நிவத்தநீர்க் குமிழிபோல நிலைபெறுக் கணந்தானிற்கும்
உவப்புற நிறைந்தஞான வுததியி னிகழ்ந்ததன்கண்
அவப்பிரிவின்றியொன்று யணுகுமெய்புணர்வாற்காண

இ-ள். அவித்தைதான்மூலமாக - அஞ்ஞானங்காரணமாக, அணுகுமிவ்வஸ்துபேதம் - நாமரூபபேதமாகத்தோற்றும் வஸ்துக்கள், நிவத்தநீர்க்குமிழிபோல - எழுகின்ற நீர்க்குமிழிபோல, நிலைபெறுக்கணந்தானிற்கும் - நிலையின்றிக்ஷணந்தானிருக்கும், உவப்புறநிறைந்த ஞானவுததியினிகழ்ந்து - சுகாகாரமாய் நிறைவுபெற்ற ஞானசமுத்திரத்திற்றோன்றி, அதன்கண் - அதனிடத்து, அவப்பிரிவின்றி - வேறுபட்டிராமல், ஒன்றுயணுகு மெய்யுணர்வாற்காண - விவேகத்தாலுணரும்போது ஏகவஸ்துவாக விளங்கும்—எ-று, (தா-ம்.) வெளிப்படை. (கஎ)

(அ-கை.) ஞானத்தின்மேன்மையும் அஞ்ஞானத்தின் இழி வுங் கூறுகின்றார்.

சித்தமார்பிராந்திக் கிரீஷ்மதாபங்க டீர்ந்தகன்றெ ழிந்திடுமாறு, சுத்தசீ தளநீர் ஞானநன் நதியைத் தோய் ந்துப சாந்தியைப்பெறுக, மத்தவஞ் ஞானச் சலதியொ ன் றதன்கண் வையமாழ்ந் திடப்புரிந்திருக்கும், தத்தக ங்காரப் பேரலையுள து சாருமஞ் ஞானவா தத்தால்.

இ-ள். சித்தமார்பிராந்திக்கிரீஷ்மதாபங்கள் - மனதிற்பொ ருந்திய மோகமென்னுங் கொடையிற்றோன்றும் வெப்பமான து, தீர்ந்தகன்றொழிந்திடுமாறு - தூரநீங்கிப்போகும்படி, சுத்த சீதளநீர் ஞானநன்நதியைத்தோய்ந்து - குளிர்ந்தபரிசுத்தமான ஞானநதியின்மூழ்கி, உபசாந்தியைப்பெறுக - உபசாந்தமடைய த்தக்கது, மத்தவஞ்ஞானச் சலதியொன்று - மூடமான அஞ் ஞானசமுத்திரமொன்றுண்டு, அதன்கண் - அதுதனக்குள், வை யமாழ்ந்திடப்புரிந்திருக்கும் - உலகத்தைமூழ்கவைத்துக் கொ ண்டிருக்கும், தத்தகங்காரப் பேரலையுளது - எழுகின்றஅகங்கார மென்னும் பேரலைகளையுடையது, சாருமஞ்ஞானவாதத்தால்-அ வைஅஞ்ஞானக்காற்றினுலுண்டாகின்றனவாம்—எ-று. (தா-ம்) அஞ்ஞானவாதம் குதர்க்கமென்றும் பொருள்கொள்க. (கஅ)

இதுவுமது.

அந்தவஞ் ஞானக் கடலினிற் சிறிய வலைகள்யா தெ னிலெலகில்லா, விந்தையாம் விஷயங் களிற்சித்தமேவு வி ரித்திபே தங்களுமவற்றின், முந்துகா ரணமா மிராகமா தியவு மோகமா மவத்தையே சுழியாம், வந்துறு முதலை விருப்பொடு வெறுப்பாம் வயப்படி னரகமார் தடுப்பார்.

இ-ள். அந்தவஞ்ஞானக்கடலினில் - அந்த வக்கியானச முத்திரத்தில், சிறியவலைகள்யாதெனில் - சிற்றலைகள்யாதென்றால், அலகில்லாவிந்தையாம் விஷயங்களில் - அளவற்றவினோதமான விஷயங்களில், சித்தமேவுவிரித்திபேதங்களும் - மனஞ்செல்கின்ற சங்கற்பவிகற்பங்களும், அவற்றின் முந்துகாரணமாமிராகமாதியவும் - அவைக்கு முதற்காரணமான ராகத்திவேஷாதிகளுமாம், மோகமாமவத்தையே சுழியாம்-மயக்கமானமமதையேசுழியாகும், வந்துறுமுதலை - அதிலுண்டாகின்ற முதலைகளோ, விருப்பொடு வெறுப்பாம்- விருப்பமும் வெறுப்புமாம், வயப்படினரகமார் தடுப்பார் - அதிலகப்பட்டுக்கொண்டால் பாதாளத்தையார் தடுப்பவர்கள்—எ-று. (ப-ம்.) பாதாளமென்றது-இயமலோகம். (தா-ம்.)வெளிப்படை. (கக)

(அ-கை.) அஞ்ஞானக் கடலைவிட்டு ஞானனந்தக்கடலிற் குளித்து மாயாசோகந்திரப் போதிக்கின்றார்.

சாந்தமா மமுத வலைதிகழ் கின்ற சைதன்ய வாரியின்மூழ்காய், நீந்துதற் கரிய பேதவஞ் ஞான நிகழுவர்க் கடலலை புகுதேல், போந்துள தேது சேர்ந்துள தேது பொருந்துவ தேதெவர்க் கெவனுல், ஆந்திகழ் விவேகியானநீ யென்கொ லலைதரு மாயையி னமிழ்தல்.

இ-ள். சாந்தமாமமுதவலை திகழ்கின்ற - சாந்தமாகிய அமுதவலைகளையுடைய,சைதன்யவாரியின்மூழ்காய்-ஞானநதியில் ஸ்நானஞ்செய்யக்கடவாய், நீந்துதற்கரிய-நீந்திக்கரையேறக்கூடாத, பேதவஞ்ஞானநிகழ் - பேதகற்பனையைத்தரும் அக்கியானமான, உவர்க்கடலலைபுகுதேல்-உப்புச்சமுத்திர கல்லோலத்திற்செல்லாதே, போந்துளதேது - போனதென்ன, சேர்ந்துளதேது - இருக்கின்றதென்ன, பொருந்துவதே தெவர்க்கெவனுல் -

எவனுக்குளவனால் எதுண்டானது, ஆந்திகழ்விவேகியானநீ - நிறைந்தவிவேகமுள்ளநீ, என்கொலலைதருமாயையி னமிழ்தல்- அலைக்கின்றமாயையிலமிழ்ந்தி எனழிகின்றாய்—எ-று. கொல், அசை (தா-ம்.) வெளிப்படை. (உ0)

இதுவுமது.

இந்தமா ஞால மேகமா மாத்ம தத்துவ மென்றுவே தாந்த, அந்தவாக் கியங்க டெளிதர வியம்ப வஃதன்றிச் சோகநீ யெய்தற், கெந்தகாரியமிங் கிருப்பது சகமா யிசைந்தவிப் பிரமமா விவர்த்தம், மந்தமாஞ் சிறியர்க் குளது நல்லறிஞர் வயங்கும விவர்த்தமாய் மகிழ்வார்.

இ-ள். இந்தமாஞாலம் - இந்தப்பெரிதானவுலகம், ஏகமா மாத்மதத்துவமென்று - ஒன்றானபிரம்ம சுவரூபமென்று, வேதாந்த அந்தவாக்கியங்கள் - வேதமுடிவான மகாவாக்கியங்கள், தெளிதரவியம்ப - தெளிவாகச்சொல்லவும், அஃதன்றிச்சோகநீ யெய்தற்கு - நீஅதைவிட்டு சோகமடைகிறதற்கு, எந்தகாரியமிங்கிருப்பது - யாதுவிஷயம்இங்கிருக்கின்றது, சகமாயிசைந்த - சகம்போலத்தோன்றுகின்ற, இப்பிரமமாவிவர்த்தம் - இந்தப்பிரம்மவிவர்த்தமானது, மந்தமாஞ்சிறியர்க்குளது - மந்தரானசிற்றறிவினர்ச்குள்ளது, நல்லறிஞர் - நல்லவிவேகிகள், வயங்குமவிவர்த்தமாய்மகிழ்வார் - வேறுபாடின்றி பிரம்மானந்தமாயநுப்விக்கின்றார்கள்—எ-று. விவர்த்தம் பழுதைப்பாம்பெனல்.(உக)

இதுவுமது.

பவமிகு மாந்தர் காரண மின்றிப் பல்சுக துக்கமே யடைவார், தவமிகு தத்வ ஞானியோ நகைத்துத் தான் மகிழ்ந் திருக்குமோர் காலை, அவமுறு மோகப் படுமெ

னி லவஙா யநுசரி மாத்திர மன்றி, உவனந்த மோகந்
தனேக்கணத் தொழிக்கு முற்றுணர் மெய்யறிவாலே.

இ-ள். பவமிகுமாந்தர் - பாபகன்மமேலிட்டசனங்கள்,காரணமின்றி - காரணமில்லாமல், பல்சுகதுக்கமேயடைவார்-பலவானசுகதுக்கங்களை யடைகிருர்கள்; தவமிகுதத்வஞானியோ-நிட்காமதபமுள்ள ஆத்மக்ஞானியோவென்ருல், நகைத்துத்தான் மகிழ்ந்திருக்கும் - சிரித்துக்கொண்டு சந்தோஷமாயிருப்பான், ஓர்காலே அவமுறுமோகப்படுமெனில் - ஆனுல் ஒருசமயம் மோகமடைகின்ருனேயென்ருல்,அவனாயநுசரிமாத்திரமன்றி-அவிவேகிகளையநுசரித்த மாத்திரமல்லது, உவனந்தமோகந்தனே - இவனந்தமோகத்தை, கணத்தொழிக்கு முற்றுணர்மெய்யறிவாலே - மெய்யுணர்வால் நன்குணர்ந்து க்ஷணத்தில் நீக்கிக்கொள்வான்—எ-று. இ-உ-க-(தா-ம்.) விவேகிகள் சகம்பிரம்மாகாரமெனக்கண்டநுபவிக்கிருர்களென்றும்; அவிவேகிகள் வேருய்க்கண்டு சுகதுக்கத்திலழுந்துகிருர்களென்று முணர்த்தியது.

(அ-கை.) அவிவேகிகளுக்கு அவித்தையின் மறைப்பால் சட்டங்கள் சித்தாகத்தோற்று மென்கின்ருர்.

அணேயவிச் சூக்ம வாத்மதத் துவமு மவித்தையி
ன் றிரோபவ மதனுல், இணேயவஞ் ஞான வுலகவர்சலத்
து மெதிருறு தலத்தினு மாருய், நிணேயுநீர் நிலமா நில
ஞ்சல மாக நெடிதுசம் சயமுறல் போல, புணேயுமவ் வா
ன்மா பேதமுள் ளதுபோற் புகன்றிடப் பிராந்தியாற்
ருேன்றும்.

இ-ள். அணேயவிச்சூக்மவாத்ம தத்துவமும் - அங்ஙனஞ்சூக்ஷ்மமான ஆத்மசுவரூபமும், அவித்தையின்றிரோபவமதனுல்-

அஞ்ஞான மறைப்பினுல், இனையவஞ்ஞான வுலகவர் - இத் தன்மையரான அக்கியானசனங்கள், சலத்துமெதிருறுதலத்தி னுமாருய் - எதிரோதோன்றுகின்ற சலத்தினிடத்தும் பூமியி னிடத்துமாற்றமாக, நினையுநீர் நிலமாநிலஞ்சலமாக - நிச்சயிக்க த்தக்க சலத்தைநிலமாகவும் - நிலத்தைச்சலமாகவும், நெடிதுசம் சயமுறல்போல - மிகவுஞ்சந்தேகப்படுவதுபோல, புனையுமவ்வா ன்மா - விளங்கக்கூறியவந்த ஆத்மா, பேதமுள்ளதுபோல்-பே தத்தோற்றமுள்ளதுபோல், புகன்றிடப் பிராந்தியார்ஞ்ருன்றும்- மயக்கத்தால்கூறும்படி தோன்றும்—எ-று. (தா-ம்.) உலகத்தா ர்க்கு பிரமையால் ஒன்று வேருென்ருகத் தோற்றல்போல அவி த்தையால்ஆத்மாநாமரூபசகமாகத்தோற்றுமென்றுகருத்து(உக)

(அ-கை.) தேகாதிபிரபஞ்சதோற்ற நாசத்தால் ஆத்மாவுக் கழிவில்லை யென்கின்ருர்.

பிருதிவி முதலாம் பூதங்க ளைந்தின் பிறங்கணு ம யமெனுஞ்சகந்தான், மருவுமப்போதுஞ் சோகமே வுத ற்கு மாய்ந்துபோம் பொருளொன்று மில்லை, வருந்தவர் மதத்தும் தேகாதி யனைத்தும் வயங்காத்ம சொரூபமன் றதனுல், இருந்துள வான்மா தேகநா சத்தா லெய்திடா தழிவென வுணர்வாய்.

இ-ள். பிரதிவிமுதலாம் பூதங்களைந்தின் - நிலமுதலானப ஞ்சபூதங்களினது, பிறங்கணுமயமெனுஞ்சகந்தான் - தோற்று கின்ற பரமாணுமயமென்று கொள்ளப்பட்ட சகமானது, மருவு மப்போதும் - அங்ஙனமாம் போதும், சோகமேவுதற்கு - சோ கப்படுதற்கு, மாய்ந்துபோம் பொருளொன்றுமில்லை - அழிந்து போகின்ற பொருளொன்றும் இல்லையே, வருந்தவர்மதத்தும்-

துன்புறுகின்ற அவர்மதசம்மதமும், தேகாதியனைத்தும்-தேகமு தலிய பிரபஞ்சமெல்லாம், வயங்காத்மசொரூபமன்றதனுல் - வி ளங்குகின்ற ஆத்மசுவரூபமல்லாமையால், இருந்துளவான்மா- நித்தியமானஆத்மாவானது, தேகநாசத்தால் - தேகாதிபிரபஞ்ச மழிதலினுல், எய்திடாதழிவெனவுணர்வாய் - அனித்தியமாய ழியாதென்று அறியக்கடவாய்—எ-று.(தா-ம்.)சகத்து பரமாணு மயமென்னும் வாதிபோலநினைத்தாலும் தேகாதிநாசத்தில் சோ கத்திற்கிடமில்லை மாயாமச்மென்னும் பட்சத்தில் சோகபிரசி த்திக் கிடமில்லையென்றும் கருத்து. (௨௪)

(அ-கை.) பிரியவஸ்து அழிந்தாலல்லோ சோகமுண்டாம் உள்ளது அழிகிறதில்லை; அசத்தாய் இல்லாதது எப்போதுமில் லை ஆகவே இரண்டுபக்ஷத்திலும் சோகத்திற் கேதுவில்லையென் கின்றார்.

மிக்கசத் தாம்பொருட்கு மேவுசம் பவமேயில்லை
தக்கதா யுளபொருட்கு சாற்றிடு மபாவமில்லை
இக்குறி நோக்குங்காலை யியைதரு மாயையாலே
அக்குண வஸ்துதோன்றி யழியும்வேறன்றியில்லை.

(இ-ள்.) மிக்கசத்தாம் பொருட்கு - மிகவும் அசத்தானவ ஸ்துவுக்கு, மேவுசம்பவமேயில்லை - உண்டாந்தன்மையில்லை, த க்கதாயுளபொருட்கு - தகுதியாய்உள்ளவஸ்துவுக்கு, சாற்றிடு மபாவமில்லை - சொல்லப்படும் . இல்லாமையில்லை,. இக்குறி நோக்குங்காலை - இந்தக்குறியை யூகிக்கும்போது, இயைதருமா யையாலே - பொருந்தியமாயையினுல், அக்குணவஸ்து தோன் றி - அத்தன்மையதான திரிசியந்தோன்றி, யழியும்வேறன்றி யில்லை - மறைந்துபோகு மல்லது வேறில்லை—எ-று. (௨௫)

(அ-கை.) சரீரமுதலானதிரிசியமெல்லாம் மாயையால் வந்ததென்றால் சோகத்திற்கேதுவேதென்னுஞ் சங்கைக்கு உத்தரம் கூறுகின்றார்.

தேகமுற் பொருள்களெல்லாந் திகழுமா யையினு லென்னில், ஆகிய விந்திரசாலத் துதாசீனம் போலாமன்றி, சோகமோ கங்களேதென் றிடிற்றொடர் புண்யபாபம், பாகமாம்புருடகன்மம் பயனுற விடம்போற்பற்றும்

இ-ள். தேகமுற்பொருள்களெல்லாம் - தேகாதிபிரபஞ்சமெல்லாம், திகழுமாயையினுலென்னில் - மாயையினுலேதோற்றுமென்றால், ஆகியவிந்திரசாலத்து - உண்டான இந்திரசால மாயாதோற்றத்தில், உதாசீனம்போலாமன்றி - விருப்புவெறுப்பற்றிருக்கவேண்டுமல்லது, சோகமோகங்க ளேதென்றிடில் - சோகமோகம்ஏன்உண்டாகிறதென்னில், தொடர்புண்யபாபம்- முன்செய்த புண்ணியபாபங்களின், பாகமாம்புருடகன்மம்-பரிபாகமான புருஷமுயர்ச்சியானது, பயனுறவிடம்போற்பற்றும்- அநுபவிக்கவிடம்போலப்பற்றிக்கொண்டிருக்கும்ஆதலால்-எ-று. (தா-ம்.) மாயையாற்றோன்றும் தேகாதிகளாற்செய்த புண்ணியபாபங்களை யநுபவிக்கும்பொருட்டு விஷத்தைப்போல மோக சோகமரணாதி அனர்த்தங்களைக்கொடுக்க கர்ம மேதுவாயிருக்குமென்றுகருத்து. (உசு)

(அ-கை.) அந்தக்கர்மவசத்தால் வேதாந்தசாஸ்திரம் நூறுதரம் உபதேசித்தாலும் மனதிற்பொருந்துகிறதில்லை அதுநீங்கும் பொருட்டு ஈஸ்வரவுபாசனைவேண்டுமென்கின்றார்.

அன்பொடு சார்ந்தோர்தம்மை யநுக்கிரகஞ்செய்யுமாறு நன்குறவிளங்குமர்த்த நாரீசமூர்த்தமாதி

இன்புறத் தரித்துலோக குருவென விருக்குமீசன்
தன்னருள் போற்றல்செய்வாய் தனிமன நிலைபெறற்கே

இ-ள். அன்பொடுசேர்ந்ததோர்தம்மை - அன்பாகத்தன்னை வழிபட்டவர்களை, அநுக்கிரகஞ்செய்யுமாறு - இரட்சிக்கும்பொருட்டு, நன்குறவிளங்கும் - நன்றாகப்பிரகாசிக்கும், அர்த்தநாரிசமூர்த்தமாதி - அர்த்தநாரீஸ்வரமூர்த்தமுதலியன, இன்புறத்தரித்து - பிரியமாகக்கொண்டு, உலோககுருவெனவிருக்கும் ஈசன் - சகத்குருவாக இருக்கின்ற பரமேஸ்வரர், தன்னருள்போற்றல் செய்வாய் - தனது அருள்வழி வைத்துதிசெய்யக்கடவாய், தனிமனநிலைபெறற்கே - மனம்பரிசுத்தநிலைபெறும்பொருட்டு—எ-று. (தா-ம்.) ஞானங்கிடைத்தற்கு ஈஸ்வரவுபாசனைவேண்டுமென்று கருத்து. (௨எ)

இதுவுமது.

நினக்குள பாப வினையெலா மின்ன நீங்கிலைநிச்சயமாக, இனத்துள பசுக்கள் கருமமே யந்த வீசனும் பசுபதி தனக்குக், கனத்தபா சமதா மவர்களைப் பிறப்பிற் கலப்புறக் கட்டுதற் கென்று, உனற்கரு மறைகள் பிரசித்தமா யுரைக்கு முன்னுக நன்கிதை யென்ன.

இ-ள். நினக்குளபாபவினையெலாம் - உனக்குண்டான சகலபாபகன்மங்களும், இன்னநீங்கில நிச்சயமாக - உறுதியாக இன்னமொழியவில்லை; இனத்துளபசுக்கள் - தாரதம்மியமான சீவர்களது, கருமமே - கன்மங்களே, அந்தவீசனும்பசுபதிதனக்கு - அந்த ஈசனாகிய பசுபதிக்கு, கனத்தபாசமதாம் - பெரியதாம்பாகும், அவர்களைப்பிறப்பிற்கலப்புறக்கட்டுதற்கென்று - அவர்களைப்பிறவியிற்சேரப்பிணிப்பதற்கென்று, உனற்கருமறைகள்-

மேலானவேதங்கள், பிரசித்தமாயுரைக்கும் - விளக்கமாகக்கூறு ம், உன்னுகநன்கிதையென்ன - இதைநன்றாய் நினைக்கக்கடவா ய்—எ-று. (தா-ம்.) பாசமாகிய கன்மம்பரிகாரமானால் தத்துவ ஞானம் பொருந்துமென்றுகருத்து. (உஅ)

(அ-கை) சித்தசுத்திக்கு சகுணோபாசனைவேண்டுமெனல்.

ஆவதாற் சித்தந் தெளியுமட் டந்த வற்புத சகுண மா நிறைந்த, தேவதே வனைநீ யுபாசனை புரிதி திகழ்ப ரி பாகமுண் டாகி, பாவமில் பரம தத்துவ நிலைதான் ப லித்திடும் நிருவிக்ன மாக, ஏவமில் சுருதி சம்மத மித னை வியற்றுக சிரத்தையோ டென்ன.

இ-ள். ஆவதாற் சித்தந்தெளியுமட்டும் - ஆனதால் மனத் தெளிவுண்டாம் பரியந்தம், அந்த அற்புதசகுணமாநிறைந்த-அம் மேலான திருவுருவங்கொண்டுவிளங்கிய, தேவதேவனைநீ உபா சனைபுரிதி - நீ மகாதேவனை உபாசனைசெய்யக்கடவாய், திகழ்ப ரிபாகமுண்டாகி - அதனாற்கன்மவிமோசனமாகி, பாவமில்பரம தத்துவநிலைதான் - நிராகாரமான தத்துவநிலையானது, பலித்திடு ம்நிருவிக்னமாக - விகற்பமின்றி சித்திக்கும், ஏவமில்சுருதிசம் மதமிதனை-இது குற்றமற்ற சுருதிசம்மதமாகும், இயற்றுகசிரத் தையோடென்ன - இதைச்சிரத்தையோடு செய்யக்கடவா ய்—எ-று. (தா-ம்.) சகுணோபாசனையால் சித்தசுத்தியுண்டாய் நிர்க்குணப்பிரமசித்தியாமென்பதுசுருதிசம்மதம். (உகூ)

(அ-கை.) மூர்த்தி உபாசனையோடும் யோகாப்பியாசமும் வேண்டுமென்கிறார்.

இத்தகு சிவோபா சனையினாற் சுத்த மெய்திய ம னோதிடத் தாலே, அத்தகை யனேக மோக்வா ரம்ப ம

ணுகுறு தமசினேச் செயித்தே, உத்தம குருசாத் திரவுப் தேசத் துற்றவிஸ் வாசவம் மனத்தால், நித்தமா யோக நிலைபெறக் கரணேந் தியநிரோ தனஞ்செய வேண்டும்.

இ-ள். இத்தகுசிவோபாசனையினல் - இந்தமேலான சிவ த்தியானத்தால், சுத்தமெய்திய மனோநிட்டத்தாலே - பரிசுத்தமா னமனோநிச்சயத்தால், அத்தகையனேக மோகவாரம்பம் - அத்த ன்மையவான அனேகமோகத்தொடர்ச்சி, அணுகுறுதம சினேச் செயித்தே-உண்டானஅஞ்ஞானவிருளைக்கெடுத்து,உத்தமகுருசா த்திரஉபதேசத்து - சற்குருவினிடத்திலும் சாஸ்திரவிசாரணையி லு முண்டானபோதத்தில், உற்றவிஸ்வாசவம்மனத்தால் - பொ ருந்திய சிரத்தையுள்ள வந்தமனதினல், நித்தமாயோகநிலைபெற- நித்தியமான யோகாப்பியாசஞ் செய்யும்பொருட்டு, கரணேந்தி யநிரோதனஞ் செயவேண்டும் - பாஹியாந்தக் கரணங்களையும் இந்திரியங்களையும் நிக்கிரகிக்கவேண்டியது—எ-று. (௯௦)

இதுவுமது.

அம்முறை சமாதி கணப்பொழு தேனு மமர்மன த் தாற்பரான் மாவை, இம்மை யிற் றரிசித் திடவத ஞ லே யிவண்முனந் தயசினன் மறைந்த, உம்முயர் புந்தி யிரவிரு ளகல வுயர்கதி ருதயம் துண்டாம், தம்மிகு க ருமமுயற்சியே தராதோ சார்ந்திடாச் சிவனரு ளில தேல்.

இ-ள். அம்முறைசமாதி - அங்ஙனமர்சிய சமாதியில், கண ப்பொழுதேனும் - ஒருக்ஷணநேரமானலும், அமர்மனத்தாற்ப ரான்மாவை - சாந்தமானமனதினல் பரமாத்மாவை, இம்மையி ற்றரிசித்திடவதனலே - இப்போதுதரிசிக்கப்பெற்றல், இவ

ன்முனந்தமசிஞன்மறைந்த - இங்குமுன்னந் தமசிஞன்மறை பட்டிருந்த, உம்முயர்புந்தி யிரவிருளகல - உமதுநல்ல புத்தியை மறைத்திருந்த அஞ்ஞானவிருள்நீங்கி, உயர்கதிருதயமதுண்டா ம் - மேலான ஞானசூரியனுதிக்கும், தம்மிகுகரும முயற்சியே தாராதோ - தாஞ்செய்யுங் கர்மாநுஷ்டானுதிகள் கொடாதோ வென்றால், சார்ந்திடாச்சிவனருளிலதேல் - சிவாநுக்கிரகமின் றியுண்டாகமாட்டாது — எ-று. (தா-ம்.)சிவாநுக்கிரகமின்றி சத் கருமங்களான் மாத்திரம் ஞானசித்தியில்லையென்றது. (ருக)

(அ-கை.) ஈஸ்வரபத்தியும் இயமாதியோகமும் வேண்டு மென்கின்றார்.

பூருவ கன்ம மிகவலி யுளது புகன்றிடி லனந்தமா தலினுல், சார்தரு மவற்றைக் குலமொடா சாரந் தரும மா தியவெலற் கரிதாம், ஓர்தரிற் கடவுட்பத்திசெய் தா லு முத்தியாற் புருடருக் கெட்டாத், தேர்தரு வேதம் விளக்கிய மாதி தெளியுஞா னம்பெற வேண்டும்.

இ-ள். பூருவகன்மமிகவலியுளது-முன்வினைமிகவும்வலிமை யுள்ளன, புகன்றிடிலனந்தமாதலினுல் - சொல்லுமிடத்து அன ந்தமாகையால், சார்தருமவற்றை - உண்டானஅவைகளை, குல மொடாசாரந் தருமமாதியவெலற் கரிதாம் - நல்லகுலம்ஆசாரம் தருமமுதலியவை வெல்லமாட்டாது, ஓர்தரிற்கடவுட்பத்திசெ ய்தாலும் - நன்றாயுணருமிடத்து ஈஸ்வரபத்திசெய்தாலும், உத் தியாற்புருடருக்கெட்டா - புருடயுத்திக்கடங்காததாய், தேர்தரு வேதம்விளக்கியமாதி - தெளிவர்கவேதங்கூறும் இயமநியமாதி அஷ்டாங்கயோகத்தால், தெளியுஞானம் பெறவேண்டும்-தெளி வானஞானசித்திபெறவேண்டும் — எ-று (தா-ம்.) வெளிப்படை.

இதுவுமது.

சகலவிக் கரும வினையெலாந் தானே சமூலமா யழிக்குமிஞ்ஞான,மிகுமுபா யத்தைச் செயநடுங் குவதென் மேதகவிளங்குமீ சனுமே, தகவுற லலாடத் துனக்குள வெழுத்தைத் தன்கையா லிவணழித் திடுமோ, அகமுள மூலாக்கியானத்தை ஞான வருளினுற் றுடைத் தகற் றிடுமே.

இ-ள். சகலவிக்கரும வினையெலாம்-இந்தச்சகலகன்மவினைகளையும், தானேசமூலமாயழிக்குமிஞ்ஞானம் - தானேவேருடன்களையத் தக்கஞானத்தையடையும், மிகுமுபாயத்தை - மேலானயுக்தியை, செயநடுங்குவதென் - முயர்ச்சிக்க ஏன்பயப்படுகிருய், மேதகவிளங்குமீசனுமே - மேலாகப்பிரகாசிக்கின்ற பரமேஸ்வரனும், தகவுறலலாடத்துனக்குளவெழுத்தை- நன்ருகவுன்தலையில்பொறித்திருக்கும் விதியெழுத்தை, தன்கையாலிவணழித்திடுமோ - தன்கரத்தால் இங்கும்போக்கிவிடுவரோ, இல்லை ஆனல், அகமுளமூலாக்கியானத்தை - உள்ளத்திலிருக்கும் மூலாக்கியானத்தை, ஞானவருளினுற்றுடைத்தகற்றிடுமே-ஞானசத்தியால் அழித்துநீக்குவார்—எ-று. (கக)

(அ-கை.) சற்குரு உத்தமசீடன் தெளிவானசாஸ்திரம் இராகாதிபரிபாசம் ஆகிய இவையெல்லாம் ஈஸ்வரநியதியாற் கூடுமென்கிருர்.

அனுக்கிரக நிமித்த முருக்கொடு வந்த வதீதமா யகண்டமாம் பிரமம், தனக்குள சித்தின் கலாரூப மாகச் சார்ந்திடு குருமூர்த்தி யெங்கே, மனக்கொளச் சீடன் வல்லப மெங்கே மருவுறு சமதமா திகளால், பினப்படத்

தகுமோ கக்கொடி யெங்கே பேசிவை யொருப்படல் நி
யதி.

இ-ள். அனுக்கிரகநிமித்தம்-இரக்ஷகார்த்தமாய், உருக்கொ டுவந்த - வடிவுகொண்டெழுந்தருளிய, அதீதமாயகண்டமாம்பி ரமம்-வாக்கிற்கும் மனத்திற்குமெட்டாத அகண்டமானபிரம்ம சுவரூபம், தனக்குள சித்தின்கலாரூபமாக - தனது சிற்கலாவடி வாக, சார்ந்திடுகுருமூர்த்தியெங்கே - ஞானசாரியர்வரக்கிடைப் பதெங்ஙனம், மனக்கொளச்சிடன் வல்லபமெங்கே - மனதிற் பொருந்த வுணரும் சீடனது சக்தியெங்ஙனம், மருவுறுசமதமா திகளால் - பொருந்தியசமதமம்முதலியசாதனங்களால், பினப் பட்டதகுமோகக்கொடியெங்கே - அழியத்தக்கமோகக்கொடியி ன் விரிவெங்ஙனம், பேசிவையொருப்படல் நியதி - கூறிய இ வைகள் ஒன்றோடொன்றுநேர்படுதல் ஈஸ்வரநியதியாம்—எ-று. இ-உ-க- (தா-ம்.) இவையெல்லாம் ஈஸ்வராநுக்கிரகத்தாத்கூடு மென்றுகருத்து. (௩௪)

(அ-கை.) இவையெல்லாங் கூடியபோது மோகநீங்கமுய லவேண்டுமல்லது சோகமடையத்தகாதென்கின்றார்.

சிந்தனைக் கெட்டாப் பெருமித முடைய சிவனரு
ணியதியீ திதனால், இந்தமா மோகந் தனைவிவேகத்தா
லிகந்திடப் பரத்வாஜவிதனால், மூந்துறு மஞ்ஞா னங்
கெட ஞானமுறுமசா தாரணமாக, சந்தய மிதனி லில்
லைநின் போல்வார் சார்ந்திடத் தக்கதே கண்டாய்.

இ-ள். சிந்தனைக்கெட்டா - மனதிற்களவுபடாத, பெரிமித முடைய - பெருமையையுடைய, சிவனருணியதியீது - சிவாநு க்கிரகசத்தியிதுவாம், இதனால் இந்தமாமோகந்தனை - இந்தமகா

மோகத்தை, இகந்திடப்பரத்துவாஜ-பரத்துவாஜனே நீக்கக்கட வாய், இதனுல் முந்துறும் அஞ்ஞானங்கெட - முன்புள்ள அஞ் ஞானம்நீங்கி, ஞானமுறுமசாதாரணமாக - இயல்பாக மெய்ஞ் ஞானமுண்டாகும், சந்தயமிதனிலில்லை - இதிற்சந்தேகமில்லை, நின்போல்வார்சார்ந்திடத்தக்கதேகண்டாய் - நின்னைப்போன்ற விவேகிகளடையத்தக்கதாம்—எ-று. (ங௫)

(அ-கை.) சகாயமுடையவர்களுக்கு பெருங்காரிய சித்தி யெளிதிலாமென்கின்ருர்.

மகாபல முடைய வரசனே யுத்த மாதிய வாபத்து வரினும், சகாயமா மிடம்பொன் னேவலே முதலாஞ் ச ம்பத்து மிகவுடை மையினுல், தகாவய லோர்கள்நினை க்கவு மரிதாஞ் சகரக்ஷை துஷ்ட நிக்கிரகம், அகாதமாயி னுமாக் கினையினுன் முடிக்கு மற்பமுஞ் சிறியர்காக்க ரிதே.

இ-ள். மகாபலமுடையவரசனே - மிகுந்தவல்லமையுள்ள இராஜனே, உயுத்தமாதிய வாபத்துவரினும் - சண்டைமுதலிய அபாயம்வந்தாலும், சகாயமாமிடம் பொன்னேவலேமுதலாம்- உதவியான இடம் பொருள் ஏவல்முதலான, சம்பத்துமிகவுடை மையினுல் - மிகுந்த செல்வமிருத்தலால், தகாவயலோர்கள்-அ வ்வியல்பில்லாத எளியவர்கள், நினைக்கவுமரிதாம்-எண்ணங்கொ ள்ளவுங்கூடாத, சகரக்ஷைதுஷ்டநிக்கிரகம் - பூமியைக்காத்தளி த்தல் துஷ்டரைத்தண்டித்தலிவை, அகாதமாயினும் - பெரிதா னுலும், ஆக்கினையினுன்முடிக்கும்-அதிகாரத்தால் முடிக்கவல்ல வனுவன், அற்பமுஞ் சிறியர்காக்கரிதே - கொஞ்சகாரியமானுலு ம் சிறியவர்கட்கு அருமையாம்—எ-று. (ங௬)

(அ-கை.) புண்ணியமிகுதியால் போதமுண்டாமென்றறிந்து முயலும்படி பரத்துவாஜருக்கு சீவன்முத்தர் திருஷ்டாந்தத்தால் நிஷ்காமகர்மபலவிசேஷத்தை கூறுகின்றார்.

அனேகசென்மாந்திர புண்ணிய பலத்தா லடைந்திடு ஞானமங் கதனே, மனோதெளி வுடைய ஞானியா முத்தர் மகிமையா லநுமதித் திடலாம், உறுதசத் துருவா மெக்கரு மத்தா லுற்றிடு மிச்சமு சாரம், தனுதுமித் துருவாங் கன்மமே முத்தி தருவதா மிராகநீத் திடினே

இ-ள். அனேகசென்மாந்திர புண்ணியபலத்தால் - அனந்தசென்மங்களிலுண்டான நல்வினைப்பயனால், அடைந்திடுஞானமங்கதனை - பெறத்தக்கஞானசித்தியை, மனோதெளிவுடைய - மனத்தெளிவுள்ள; ஞானியாமுத்தர்மகிமையால் - ஞானமடைந்தசீவன் முத்தர்களதுகுணங்களால், அநுமதித்திடலாம் - பிரமாணமாகவறியலாம், உறுதசத்துருவாமெக்கருமத்தால் - நினைக்கப்படாதபகையான எந்தக்கருமத்தால், உற்றிடுமிச்சமுசாரம் - இந்தசம்சாரபந்தமுண்டாயிருக்கிறதோ அதையும், தனுதுமித்துருவாங்கன்மமே - தனதுரிமையான சத்கருமங்களே, முத்திதருவதாமிராக நீத்திடினே-இச்சையின்று ஈஸ்வரார்ப்பணமாகச் செய்தால் முத்தியைக் கொடுக்குமென்றும் உணரக்கடவாய்— எ-று. (தா-ம்.) இராக மிகுந்தால் புண்ணியபந்தகமாமென்றும் அஃதின்றேல் அப்புண்ணியகன்மமே மித்திரனுயிருந்து மோக்ஷயேதுவாமென்றுங் கருத்து. (கூஎ)

(அ-கை.) நிஷ்காமபுண்ணியமிகுதியால் பாபமழிந்து சமந்தமமுதலான சத்குணங்களான அமிர்தத்தினுல் திர்ப்தியடைந்தவர்களுக்கு தாபத்திரயமொழியு மென்கின்றார்.

மழைப்பெரு வெள்ள முயிர்க்குலதாப வனக்கன ல் தணித்துத வுதல்போல், இழைத்துள புண்ணிய மி குதிசா துகளுக் கிருந்துள பாபகன் மத்தை, ஒழித்துத வியதாஞ் சம்சார சக்ரத் துறுசுழ றீர்ந்திட வேண்டில், இழித்திடு கன்ம மியாவையும் விடுத்தே யிசைதரப் பிர மத்தில் விருப்பாய்.

இ-ள். மழைப்பெருவெள்ளம் - மழையிலுண்டான பெரு வெள்ளமானது, உயிர்க்குலதாபவனக்கனல் - உயிர்களுக்குண் டாகுந் தாபாக்கினியை, தணித்துதவுதல்போல் - நீக்கியுதவிசெ ய்தல்போல, இழைத்துளபுண்ணியமிகுதி - செய்யப்பட்ட இந் தப்புண்ணியமிகுதியானது, சாதுகளுக்கிருந்துளபாபகன்மத்தை- சத்துக்களுக்கு முன்புள்ளபாபகன்மங்களை, ஒழித்துதவியதாம்- நீக்கிவுதவிசெய்யும், சம்சாரசக்ரத்து - சம்சாரமார்கிறசக்கரத்தில், உறுசுழல் தீர்ந்திடவேண்டில்-உண்டான அலைவுதீரவேண்டுமா னால், இழித்திடுகன்மமியாவையும்விடுத்தே-இழிவான சகலகரு மங்களையும்விட்டு, இசைதரப்பிரமத்தில்விருப்பாய் - பிரமசுவ ரூபத்தில் விருப்பமுற்றிருக்கக்கடவாய்—எ-று. (தா.ம்.) புண் ணியமேலிட்டால் பாபம் நசித்து வைராக்கியந் திடப்படும்போ து பரமபத்தியுண்டாய் சம்சாரஅலைவு தீருமென்றுகருத்து. (௯அ)

(அ-கை.) அதையின்னும் வற்புறுத்திக் கூறுகின்றார்.

எதுபரி யந்தம் வெளிமுகப் பார்வை யிருக்குமவ் வளவுமே விகற்பத், திதியுறு பிரபஞ்ச பாவனை தோன் றுஞ் செழுங்கடலலையசை வுளதேல், உதைந்திடுங்கரை யை யொழிந்திடி னிலைத்த வுதகமே போலுமெய்ப் பிர மம், சுதந்தர வடிவாய் நிறைந்திடிற் சோகந் தோன்றி டா தெனத் துணி மகனே.

இ-ள். எதுபரியந்தம் - எதுவரையில், வெளிமுகப்பார்வை- விடையநோக்கம், இருக்குமவ்வளவுமே - இருக்கின்றதோ அதுவரையில், விகற்பத்திதியுறு - விகற்பசங்கற்பத்திலுண்டான, பிரபஞ்சபாவனைதோன்றும் - இந்தப்பிரபஞ்சதோற்றமுண்டாயிருக்கும், (அஃதெங்ஙனமென்னில்) செழுங்கடலலையசைவுளதேல் - பெரிய சமுத்திரங்கள் அசைந்துகொண்டிருந்தால், உதைந்திடுங்கரையை - கரையில்வந்து மோதிக்கொண்டிருக்கும், ஒழிந்திடில் - அலைநின்றால், நிலைத்தவுதகமேபோலும் - நிலைத்தசலமாயிருத்தல்போல, மெய்ப்பிரமம் - சத்தியமானபிரமம், சுதந்தரவடிவாய்நிறைந்திடில் - பூரணசுவஸ்சொரூபமானால், சோகந்தோன்றிடாதெனத்துணிமகனே - மகனே சோகமுண்டாகாதென்று திடமாயிருக்கக்கடவாய்—எ-று. (ருசு)

இதுவுமது.

விவேகநோக் கத்தை மறைக்குமிச் சோக மேவுறநினைப்பிடித் திடலென், தவாதசோகத்தாற் குருடனுமுனக்குத் தக்கவவ் விவேகக்கண் டிறக்குஞ், சுவாதினம் வருமட் டசைவறத் திடமாந் துணைஞான வூன்றுகோலொன்றே, விவாதமெத் தனைவந் திடினுநின் றன்னைமெல்லென நடத்திடவேண்டும்.

இ-ள். விவேகநோக்கத்தை - விவேகதிருட்டியை, மறைக்குமிச்சோகம் - மறைக்கின்ற இந்தத்தளர்ச்சி, மேவுறநினைப்பிடித்திடலென் - உன்னைப்பற்றி யுண்டாவதேன், தவாதசோகத்தால் - நீங்காத இந்தச்சோர்வால், குருடனுமுனக்கு - அந்தகனானவுனக்கு, தக்கவவ்விவேகக்கண்டிறக்கும் - தகுதியான ஞானக்கண்விளங்கும், சுவாதினம்வருமட்டும் - சுவாதீனமுண்டாம்வரையில், அசைவறத்திடமாம்-அசைவின்றியுறுதியான, துணை

ஞானவூன்றுகோலொன்றே - உதவியான ஞானத்தண்டமொன்றுமே, விவாதமெத்தனைவந்திடினும் - எத்தனைவிகற்பம்வந்தாலும், மெல்லெனநடத்திடவேண்டும் - பையநடத்திவைக்கத்தக்கது—எ-று. (இ-உ-க-நா-ம்.) சோகம் விவேகத்தைமறைக்குமாதலால் ஞானவூன்றுகோலைப்பற்றி நடக்க வேண்டுமென்று கருத்து. (௬0)

இதுவுமது.

தரங்கநின் றலைக்குந் திரணமே போலச் சந்தோடம் விதனமென் றிவற்றின், அரந்தைசெய் பங்க முற்சாக மென்னு மலைகளாற் பவக்கட லலைவோர், திரம்பெறுபெரியோர் குழுவொடு மெண்ணச் சேர்ந்திடார் திரம்பெற வேண்டில், நிரந்தர மனோவா யுவையகத் தடக்கி நிர்ச்சல னம்பெற வேண்டும்.

இ-ள். தரங்கநின்றலைக்கும் - அலைகளினு லலைக்கப்பட்ட, திரணமேபோல - துரும்பையொத்து, சந்தோடம்விதனமென்றிவற்றின் - மகிழ்ச்சிசோகமென்னு மிவற்றால்; அரந்தைசெய் பங்கமுற்சாகமென்னும் - துன்பஞ்செய்கின்ற மக்னமும் செருக்குமென்கின்ற, அலைகளாற்பவக்கடலலைவோர் - அலைகளினுற் பவசாகரத்துழலுகின்றவர்கள், திரம்பெறுபெரியோர்குழுவொடும் - நிலைபெற்றபெரியோர் கூட்டத்தில், எண்ணச்சேர்ந்திடார்- எண்ணிக்கையிற்சேரார், திரம்பெறவேண்டில்- நிலைபெறவேண்டுமானல், நிரந்தரமனோவாயுவையகத்தடக்கி-மனவசைவை புறத்திற்செல்லவொட்டாது நிறுத்தி, நிர்ச்சலனம்பெறவேண்டும் - சாஞ்சல்லியந்தீர்ந்து இருக்கவேண்டும்—எ-று. (நா-ம்.) சந்தோஷத்தில் உற்சாகமே அலை, விதனத்தில் பங்கமே அலை, ஆதலால் இந்தஅலைகளிலகப்பட்டு அலைகின்றவர்கள் பெரியோர்குழுவிலெண்ணிக்கையுறுரொன்று கருத்து. (௬௧)

(அ-கை.) காலதத்துவத்தின் தன்மையைக் கூறுகின்றது.

பகலிரவென்னுங் காலதத்துவத்தாற் பற்பல வுயிர்க்குலசமூகம், சுகமுறுசந்தோ டத்தொடுவிதனஞ் சூழ்திசை யாகுமூ சலிலே, தகவுற வேற்றப் பட்டறு வகையாந் தளர்வுறு மாட்டமா டுவதால், அகமெலிந் திடலென் காலமே சகத்தை யளித்தழித் திடும்பல முறையே.

இ-ள். பகலிரவென்னுங் காலதத்துவத்தால் - பகல் இரவு என்கின்றகாலதத்துவத்தினுல், பற்பலவுயிர்க்குலசமூகம் - பலவிதமான சீவகோடிகள், சுகமுறுசந்தோடத் தொடுவிதனம்-சுகிக்கின்ற இன்பதுன்பமாகிய, சூழ்திசையாகுமூசலிலே - அநுபோகபேதமென்னும் உஞ்சலிலே, தகவுறவேற்றப்பட்டு-தகுதியாக ஏற்றப்பட்டு, அறுவகையாந் தளர்வுறுமாட்டம் - ஆறுவகையான மெலிவுண்டாகுமாட்டங்கள், ஆடுவதால் - ஆடுகின்றதால், அகமெலிந்திடலென் - மனந்தளர்வானேன், காலமேசகத்தை - காலதத்துவந்தான் இந்தவுலகத்தை, அளித்தழித்திடும்பலமுறையே - பலதரம் உண்டாக்கி அழித்துக்கொண்டிருக்கும்—எ-று. (தா-ம்.) ஆறுவகையாட்டங்களாவன-சுஊர்மி. அதாவது: சட்பாவவிகாரம், காமாதியாறு, ஆறுருதுக்கள், முதலானவையாம். சகத்தின் உற்பத்தி-திதி-நாசங்கள் காலவிளையாட்டென்றறிக. விளையாடுவோன் சற்பித்தவஸ்துக்கள் கூடிப்பிரிவதில் சோகத்திற் கிடமில்லையென்று கருத்து. (சஉ)

(அ-கை.) காலதத்துவத்தை சர்ப்பமாகவுவமித்தல்.

காலமாம் பெரிய சர்ப்பமாக் கிரமித்துக் கடிதுணைப் பற்றிடு முயிர்க்குள், எலுமீ திவைக ளேன்றிடா தென்ன விருந்ததொன் றிலேயபேப் தமதாய், மேலதாங் தே

வர் கணங்களு மதற்கு விரும்பிய புசிப்பெனப் படுமே ல், சாலவோர் கணமு நிலையிலா மாந்தர் சரீரமோ பெரி தெலாங் கொளுமே.

இ-ள். காலமாம்பெரியசர்ப்பம் - காலதத்துவமென்னும் பெரியபாம்பானது, அக்கிரமித்து - வேகங்கொண்டு, கடிதுணப் பற்றிடுமுயிர்க்குள் - விரைவாகப்பிடிக்கின்ற வுயிர்களுக்குள்ளே, எவுமீதிவைகளென்றிடாதென்ன - இதுதகுந்தகாதென்று சொல்லும்படி, இருந்ததொன்றிலை - மிகுந்துநின்றது ஒன்றுமில்லை, அபேதமதாய் - பேதமின்றி, மேலதாந்தேவர்கணங்களுமதற்கு, விரும்பியபுசிப்பெனப்படுமேல் - விருப்பமானவுணவாகுமென்ருல், சாலவோர்கணமுநிலையிலாமாந்தர் - ஒருக்ஷணப்போதும் நிலைமையில்லாதமனிதர்களது,சரீரமோபெரிதெலாங்கொளுமே- தேகமா பெரிதானது எவற்றையும் உட்கொள்ளும்—எ - று. (தா-ம்.) காலதத்துவத்தால் தேவ மனித சரீரமுதலான எவை யுமழியுமென்று கருத்து. (௩௩)

(அ-கை) சாக்ஷியானநீ தனமுதலிய பொருளழிவுவந்தால் சோகமடையலாகா தென்கிருர்.

தனமுதற்பொருள்க ளிழந்திடும்விபத்து சார்ந்திடி ல் விவேகநோக் கின்றி, துனிதர விரங்கும் விகாரவிந்தி யனுத் துன்புற நடித்திட லென்னே, கனனுறக் கணப் போ தசைவறநின்று கலங்குமிச் சமுசார நடனம், மன னுறக் கண்டு மகிழ்ந்தன்யமாக மதித்திடப் பெறிற்சோ க மெங்கே,

இ-ள். தனமுதற்பொருள்கள் - பொன்முதலான திரவி யங்கள், இழந்திடும்விபத்து சார்ந்திடில்-நீங்குகின்ற விபத்துவந்

தால், விவேகநோக்கின்றி - விவேகத்தால் சமமாதப்பாராமல், துனிதரவிரங்கும்விகாரவிந்தியனு - துன்புற்றுவருந்துகின்ற சித்தமுடையவனாக, துன்புறநடித்திடலென்னே - துயரப்பட்டுதிரிவதேன், கணனுறக்கணப்போது - மேன்மையாய் ஒருக்ஷணநேரம், அசைவறநின்று - அசையாமல்நின்று, கலங்குமிச்சமுசாரநடனம் - கலக்கமுறுகின்ற இந்தசமுசாரக்கூத்தை, மனனுறக்கண்டு - மனதிற்பகுத்துணர்ந்து, மகிழ்ந்தன்யமாகமதித்திடப்பெறில் - தான் இவைக்கன்னியமென்றீ சுகிக்கப்பெற்றால், சோகமெங்கே - சோகமோகங்கள்எங்கே உண்டாகும்—எ-று. (௪௪)

இதுவுமது.

ஓய்பரத்துவாஜ நண்ப நீ டினாக ளுடையதாய்க் கணத்தினி லழிந்து, மாய்தரு சகத்தைக் காண்பதிற்சோக மருவுறுர் விவேகிகள் சிறிதும், ஏய்தரு நீயு மமங்கல சோக மிகந்திடச் சுமங்கல நினைதி, ஆய்தரு ஞான னந்தமே கனமா மமலாத்ம தியானமே புரிதி.

இ-ள். ஒய்பரத்துவாஜநண்ப - ஒசினேகனான ப்ரத்துவாஜனே, நீடினாகளுடையதாய் - நீண்டஅலைகளுள்ளதாய், கணத்தினிலழிந்து மாய்தருசகத்தை - ஒருக்ஷணநேரத்தில் அழிந்துபோகின்ற பிரபஞ்சத்தை, காண்பதில்,சோகமருவுறுர்விவேகிகள்சிறிதும் - விவேகிகள் இலேசமும் சோகமடையார்கள், ஏய்தருநீயு மமங்கலசோகமிகந்திட - விவேகியானநீயும் அசுபமான சோகத்தைவிடக்கட்வாய், சுமங்கலநினைதி - சுபங்களையேநினைக்கக்கட்வாய், ஆய்தருஞானனந்த மேகனமாம் - ஆராயப்பட்ட ஞானனந்தக் கட்டியான, அமலாத்மதியானமேபுரிதி - நிர்மலாத்மசுவரூபத்தை தியானிக்கக்கட்வாய்—எ-று. (௪௫)

(அ-கை.) சிந்தனைசெய்யக்கூறிய சுபங்களிவை யென்கின்றார்.

தேவர்வே தியர்நற் குரவர்பால் வைத்த சிரத்தை யாற் கவின்பெறு சித்தம், ஓவறச் சிறந்த வேதசாத் திரத்தி லுறுதியாம் பிரமாணமதுடையோர், மூவராய்முதலாஞ் சிவனருளடைவார் மோக்ஷகாரணமதா ஞானம், மேவுவர் பரம சுபமுமத் துவைத விமலவா சனையுமுண் டாமே.

இ-ள். தேவர்வேதியர் நற்குரவர்பால்வைத்த-தேவர் பிராமணாள் சற்குருஇவர்களிடத்துண்டான, சிரத்தையாற்கவின்பெறு சித்தம் - விஸ்வாசத்தாற் சிறப்புற்றமனம், ஓவறச்சிறந்தவேத சாஸ்திரத்தில் - மிகவுஞ்சிறப்பான வேதசாத்திரங்களில், உறுதியாம் பிரமாணமதுடையோர்-நிலையான நம்பிக்கையுடையவர்கள்;மூவராய்முதலாஞ் சிவனருளடைவார்-மும்மூர்த்திகளாயும்முதன்மையாகவுமிருக்கின்ற சிவாநுக்கிரகம்பெறுவார்கள்,மோக்ஷகாரணமதாஞானம் - மோக்ஷஹேதுவான ஞானத்தையும், மேவுவர் - அடைவார்கள், பரமசுபமு மத்துவைதவிமலவாசனையுமுண்டாமே - பரமமங்களமும் அத்துவைத சத்வாசனையுமுண்டாகும்—எ-று. (தா-ம்.) தேவர்முதலானவரிடத்து விஸ்வாசமும் வேதசாஸ்திரத்தில் நம்பிக்கையும் ஈஸ்வராநுக்கிரகங் கிடைப்பதற்கேதுவான மங்களகுணமென்றும் அவ் வீஸ்வராநுக்கிரகம் மோக்ஷஞானத்திற்கு ஏதுவாகையால் பரமமங்களமென்றுங் கருத்து. அவ்வாறு ஈஸ்வராநுக்கிரகத்தினால் அருமையாய் சிலருக்கே அத்துவைதவாசனையுண்டாகிறதென்று பிரமாணம். (௬௬)

(அ-கை.) பரத்துவாஜவாக்கியம். கிரியமான பிரபஞ்சத்தை லயப்படுத்துமுபாயமும், வசிட்டர் விரிவாகக்கூறிய ஞானார்த்த சாரத்தையும் சுருக்கமாயெடுத்துக்கூற வினவுகின்றார்.

தேவரீ ரருளா லிவையெலா முற்றுந் தெளிந்தன னெங்ஙன மென்னில், ஆவறீர் வைராக் கியத்தின்மேற் பந்து வறிகிலே னிச்சமு சார, பாவனை யதனிற் பகையி லை வசிட்டர் பற்பல நூற்பொருள் விரித்து, நாவின்வ ல் லபத்தாற் புகல்ஞான சாரம் நயம்பெறச் சுருக்கியீங் கருள்வீர்.

இ-ள். தேவரீரருளாலிவையெலாமுற்றுந் தெளிந்தனன் - குருவே! தமதுகிருபையால் இவை முழுதுந் தெளிவாகவுணர்ந் தேன், ஆவறீர்வைராக்கியத்தின்மேற்பந்துவறிகிலேன் - அவா நீங்கிய விராகத்தைவிட மேலானதுணை வேறுகாணேன், இச் சமுசாரபாவனையதனிற் பகையிலை- இந்த சமுசாரவிவகாரத்தை விடசத்துருவேறில்லை, வசிட்டர் பற்பலநூற்பொருள் விரித்து- வசிட்டமுனிவர் பலவாயசாஸ்திரங்களின்பொருளை விஸ்தரித் து, நாவின்வல்லபத்தால் - வாக்கின்வல்லமையால், புகல்ஞா னசாரம் - உரைத்தருளிய ஞானசாரமான ரகசியங்களை, நயம் பெறச்சுருக்கி யீங்கருள்வீர் - யான் பயனடையும்பொருட்டு சு ருக்கமாகவுரைத்தருளல் வேண்டும்—எ-று. (சஎ)

(அ-கை.) பரத்துவாஜர் வினவுக்கு வான்மீகரிஷி விடை கூறுகின்றார்.

எப்பொரு டன்னைக் கேட்டமாத்திரத்தி லிச்சமு சாரசா கரத்தில், தப்புறவீழா திருந்திடப் பெறுவை த குமிகு மோக்ஷசா தனமாம், அப்பர ஞான ரகசியந் தெ ளிவா யறைகுவன் பரத்துவாஜ வதனைச், செப்பமாப் பு ந்தி யொருப்படநின்று தெளிதரக் கேட்டியென் றிசை ப்பான்.

இ-ள். எப்பொருட்னினக் கேட்ட்மாத்திரத்தில் - எந்த அர்த்தத்தைக்கேட்ட்வுடனே, இச்சமுசாரசாகரத்தில்-இந்தச் சமுசாரசமுத்திரத்தில், தப்புறவீழா திருந்திட்ப்பெறுவை - தவறிவீழ்ந்திடாதிருக்கச் சித்திக்குமோ, தகுமிகுமோக்ஷசாதனமாம்-தகுந்தமோக்ஷசித்திக்கேதுவான, அப்பரஞானரகசியம் - அந்த மேலான ஞானந்தரங்கத்தை, தெளிவாயறைகுவன் - பரத்துவாஜ - ஓ பரத்துவாஜனே சொல்லுகின்றேன், அதனை செப்பமாப் புந்தியொருப்படநின்று-அதை செவ்வையாய் ஏகாக்கிரசித்தமாயிருந்து, தெளிதரக்கெட்டியென்றிசைப்பான்-திருத்தமாகக் கேளுமென்று கூறுவார்—எ-று. (௬அ)

(அ-கை.) உபாசனமூர்த்தியை தியானஞ்செய்துக்கொண்டு சொல்லுகிறார்.

எந்தமா தேவ னேகமா யிருந்து மிப்பல சிருட்டியா திகளால், தொந்தமா யனேக வடிவமாய் விளங்கித் தொன்மையாய் நிறைந்தருள் வடிவாம், எந்தையா மந்த சச்சிதானந்த விறைவனை வணங்கியிப் பிரபஞ்சம், வந்தவா றந்த வுண்மையில் விளங்கி வதிந்தவா றறிந்தவாறுரைப்பாம்.

இ-ள். எந்தமாதேவன் - எந்தமகாதேவர், ஏகமாயிருந்தும்-தானொருவராயிருந்தும், இப்பலசிருட்டியாதிகளால் - இந்தசிருட்டி திதிலயபேதவிர்த்திகளினுல், தொந்தமாயனேக வடிவமாய் விளங்கி - தொடர்பாய் அனேகமூர்த்தமாகப் பிரகாசித்து, தொன்மையாய்நிறைந்தருள் வடிவாம்-புராதனபூரண நிர்பாருபமாயிருக்கின்றனே, எந்தையாமந்த - என்தந்தையான அந்த, சச்சிதானந்தவிறைவனைவணங்கி - சச்சிதானந்த சுவரூபமானகடவுளைவணக்கஞ்செய்து, இப்பிரபஞ்சம்வந்தவாறு - இந்தச் சகந்

தோன்றிய பிரகாரம், அந்தவுண்மையில்விளங்கி - அப்பரம்பொருளில்விளங்கிநின்று, வதிந்தவாறறிந்தவா றுரைப்பாம் - அதனில் லயித்தமுறையே யான் அறிந்தபடி கூறுகின்றேன்—எ-று.()

(அ-கை.) அங்ஙனம் பிரிதிக்கினைசெய்து பல்வாற்ருற்கூறினும் முன்பின்கூட்டியறியத்தக்க நினதுசூக்குமபுத்தி யேன் மருண்டதென்றதட்டி மேல் மாண்டூக்கிய உபநிடத தாற்பரியத்தை ஆழ்ந்தறியும்படி கூறுகின்றார்.

மன்னுமிப்பிரபஞ்சம் லயப்படிற்றத்துவம் வயங்குமாண் டூக்கியம தென்னப், பன்னுப நிடதங் கூறிய முறையே பகருதுஞ்சுருக்கமாய் நினக்கு, முன்னொடு பின்னுங் கூட்டிநன்குணரு முதிருநின் புந்தியேன்மருண்டு, தன்னதே யங்கை நெல்லிபோற் காண வறிதரு மாழ்ந்திடப் பெறினே.

இ-ள். மன்னுமிப்பிரபஞ்சம் - தோற்றுகின்ற இந்தச்சகம், லயப்படிற்றத்துவம்வயங்கும் - இலயமானால் உண்மைப்பொருள்விளங்குமோ அந்த, மாண்டூக்கியமதென்னப் பன்னுப்நிடதம்-மாண்டூக்கியமென்றுசொல்லும்உபநிட்தத்தில், கூறியமுறையே-கூறியபிரகாரம், பகருதுஞ்சுருக்கமாய்நினக்கு-நினக்கு சம்க்ஷேபமாக சொல்லுகின்றோம், முன்னொடுபின்னுங் கூட்டிநன்குணரும் - முன்கூறியதும் பின்கூறுகின்றதும் கூட்டியூகித்தறியவல்ல, முதிருநின்புந்தியேன்மருண்ட-நல்ல தெளிவுள்ள நின்புத்தியேன் மயங்கிப்போயிற்று, அன்னதேயங்கை நெல்லிபோற்காண-உள்ளங்கைநெல்லிக்கனிபோல அப்புந்தியே தோன்ற,அறிதருமாழ்ந்திடப்பெறினே - சாவதானமாய் அழுந்துமானல் தெளிவா யுணருமென்றுகூறி மேற்சருக்கத்தால் சொல்லத்தொடங்குகின்றார்—எ-று. (௫௦)

பரத்வாஜ அநுசாஸனம் முற்றிற்று.

சிவமயம்.

வசிஷ்டமுனிவர் ஸ்ரீராமருக்கு

உபதேசித்தருளிய

ஞானவாசிட்ட வமலராமாயனம்.

நிருவாணப்பிரகரணம்.

இராம வியுத்தாபனம்.

வியாக்கியானகவி.

இலகுமிச் சருக்கந் தத்துவத் தகில மிறப்பதும் பரத்துவா ஜன்றன், நலமுறு பேறும் ஞானிக ளியல்பாய் நவையறப் புரிதரு செயலும், புலமுறு மிராமன் சமாதியின் றெழுந்து புரிதரு விவகார நெறியும், பலமுற யார்க்கும் பண்புறத் தெளிவாய்ப் பகர்ந்திடப் படுவனமுறையே.

அவதாரிகை.

ஸ்ரீவான்மீகமகாரிஷி வாக்கியம். முமுட்சுவானவன் சாந்தனாய், உபரதனாய், திதிட்சுவாய், சிரத்தாவானாய், சமாஹிதனாய் இருந்து தனக்குள்ளே தன்னைக் காணுகிறானென்னுஞ் சுருதியின்கருத்தை வர்ணித்து அந்நெறியே சாட்சாத்காரம்வருமட்டும் பிரபஞ்சத்தைக் காரணத்தில் இலயப்படுத்தும் விதத்தை சாங்கமாகக் கூறத்தொடங்குகின்றார்.

கவிதை.

சாந்தனய்த் தாந்தனகித் தபுகன்மங் காம்யகன்மம்
பாந்தவிந் திரியச்சார்பாம் பல்சுக மிவற்றைநீத்து
ஆந்திகழ் சிரத்தையோடு சுகாசனத் தமர்ந்துசித்தம்
போந்தவிந் தியவியாபாரம் பொருந்துரு மனத்தனகி.

இ-ள். சாந்தனய் - சமமுள்ளவனகவும், தாந்தனகி-தமமுள்ளவனகவும், தபுகன்மம்-நிஷித்தருமமும், காம்யகன்மம்-காமியகருமமும், பாந்தவிந்திரியச் சார்பாம் - ஒழுங்கான இந்திரியங்களின் சேர்க்கையாலுண்டாகும், பல்சுகமிவற்றைநீத்து-பலவிடய சுகங்களையும்விட்டு, ஆந்திகழ்சிரத்தையோடும் - நல்லசிரத்தையுடன், சுகாசனத்தமர்ந்து - மிருதுவான ஆசனத்திலிருந்து, சித்தம்போந்த விந்திய வியாபாரம் - சித்தஞ்செல்லுகின்ற இந்திரியத்தொழில்களை, பொருந்துருமனத்தனகி-செய்யாதமைந்த மனமுடையவனக—எ-று. (தா-ம்.) சமதமாதிசாதனங்களுடையவனய் - சுகாசனத்திருந்து இந்திரிய விஷயங்களில் மனஞ்செல்லாதடக்க வேண்டுமென்றது. (க)

(அ-கை.) ஞானயோகமார்க்க முரைக்கின்ருர்.

பிரணவ மோமென்ருேதிப் பிரமன நிலையாமட்டும்
கரணங்கள் சுத்தியாகக் கருதுபிரா ணயாமஞ்செய்
புரையுறு விடயமேவிப் போகுமிந் திரியமைந்தை
விரகொடு மெல்லவுள்ளே மேவுற நிறுத்தல்வேண்டும்.

இ-ள். பிரணவமோ மென்ருேதி - பிரணவமந்திரத்தை ஓமென்றுச்சரித்து, பிரிமனநிலையாமட்டும் - பிரவிர்த்திக்கின்ற மனம்நிலை பெறும்வரையில், கரணங்கள் சுத்தியாக - அந்தக்கரணங்கள் சுத்தமாக, கருதுபிராணயாமஞ்செய் - ஊகித்துப் பிரா

ணுயாமஞ்செய்வாயாக, புரையுறுவிடயமேவி - குற்றமானவிஷயங்களிற்சென்று, போகுமிந்திரிய மைந்தை-திரிகின்ற பஞ்சேந்திரியங்களை, விரகொடுமெல்லவுள்ளே - விரகொடுமெல்ல உள்ளத்தின்கண், மேவுறநிறுத்தல்வேண்டும் - அடங்கநிறுத்தவேண்டும்—எ-று. (தா-ம்.) பிரணவமோமென்ருேதி யென்றது-அதை தீர்க்கமாகவாவது புசுண்டயோகி உபாக்கியானத்திற்கூறியபடி அளபெடையாகவாவது உச்சரிக்கவேண்டுமென்று கருத்து. (உ)

(அ-கை.) உற்பத்தியாதி லயக்கிரமங்கூறுகின்ருர்.

தேகமிந் திரிய மனந்தெளி புந்திதிகழ்சீவ னிவற்றி
னுற் பத்தி, ஆகிய விவைகள் தோன்றிய பூத மதிதேவர்
சுருதியிற் புகன்ற, பாகமா மவற்றி லயமுறப் புரிந்து ப
கரதின் முதல்விராட் புருடன், வாகதி னின்று மிரணிய
கருப்பன் மருவிமே லவ்வியா கிருதன்.

இ-ள். தேகமிந்திரியமனந்தெளிபுந்தி-தேகம் இந்திரியங்கள் மனம் தெளிந்தபுத்தி, திகழ்சீவனிவற்றினுற்பத்தி-விளங்குகின்றசீவன்இவைகளின்உற்பத்தி, ஆகியவிவைகள்தோன்றியபூதம்-ஆன இவைகள் உண்டானபூதங்களும், அதிதேவர்-இவற்றின் அதிதேவர்களும், சுருதியிற்புகன்ற-வேதத்திற்கூறிய, பாகமாமவற்றிலயமுறப்புரிந்து-பிரிவான அவ்வவற்றில் இலயஞ்செய்து, பகரதில்-(வியஷ்டியாகக்கூறிய)அவற்றினின்றும்,முதல்விராட் புருடன்-முதல்சமஷ்டிகாரணமான விராட்புருட்னிடத்திலும், வாகதினின்றும் இரணியகருப்பன் - அதினின்றும் இரணியகருப்பனிட்த்திலும், மருவிமேலவ்வியாகிருதன் - அதினின்றும்மேல் அவ்வியாகிருதனிட்த்திலும் (இலயஞ்செய்க)—எ-று (தா-ம்.) அத்தியாதமீகமானவியஷ்டிதேகேந்திரியாதி யாகாரத்தைவிட்டு தேவ்தா சமஷ்டிகாரணமாய் அகரத்தின்பொருளான விராட்டுஸ்

வரூப்த்தில்நின்றுபின்உகாரத்தின்பொருளான சூக்குமலிங்க சமஷ்டி ஸ்வரூபமான இரணியகருப்பனுக விராட்டைலயப்படுத்தி நின்று பின்பு அவற்றின்காரணமாய் முக்குணவடிவாய் மாயோபாதியுள்ளதாய் மகாரத்தின்பொருளான அவ்வியாகிருதத்தில் நின்று மேல் இவைகட்கெல்லாம் அதிஷ்டானமாய் அனாமாத்தினாயாகக் குறிக்கப்பட்ட சுத்தப்பிரமத்தில் அவ்வியாகிருதத்தையும் லயப்படுத்தி நிற்கவேண்டுமென்றுகருத்து. (ரு)

இதுவுமது.

பரமகா ரணமா மவைக்கதிஷ்டான பரிசுத்த பிரம
மாய் நிற்க, விரவுமாம் சாதி பிரிதிவி தன்னின் மேவிரத்
தாதிகள் சலத்தில், திரமுறு தேயு செறிதேயு வதனிற்றி
கழ்வாயு மகாவாயு தன்னில், உரவுட லாகா யம்மகா கா
யத் தொன்றதாய் லயஞ்செயப் படுமே.

இ-ள். பரமகாரணமாம் - மேலானகாரணப்பொருளான, அவைக்கதிஷ்டான - மேற்கூறிய வியஷ்டிசமஷ்டியான சர்வத்திற்கும் இருப்பிடமான, பரிசுத்தபிரமமாய்நிற்க-நிஷ்குணபிரம்மாகாரமா யிருக்கவேண்டும், விரவுமாம்சாதி - கூடியமாம்சமுதலியவற்றை, பிரிதிவிதன்னில் - பிரிதிவிபாகத்திலும், மேவிரத்தாதிகள் சலத்தில் - இரத்தமுதலியவை சலத்திலும், திரமுறுதேயுசெறிதேயுவதனில் - பிரகாசமான அக்கினியை மகாக்கினியிலும், திகழ்வாயு மகாவாயுதன்னில் - பரிசிக்கும் வாயுவை மகாவாயுவிலும், உரவுடலாகாயம் மகாகாயத்து - திடமானதேகாசாயத்தை பூரணகாயத்திலும், ஒன்றதாய்லயஞ்செயப்படுமே-அந்தந்த காரணமாத்திரமாகக்கருதி இலயஞ்செய்யவேண்டும்—எ-று. (தா-ம்) வெளிப்படை. (சு)

(அ-கை.) முன் தொகுத்துக்கூறியதை வகுத்துக்கூறுகின்றது.

கிராணமுதலா மிந்தியங்கள் கிடைத்தவதிதே வதைகளுக்கு, பராவுமுபாதி யாஞ்சூக்கும பராதியவைம்பூதத்தில், விராவுலயமாம் படிபுரிந்து மேவுசிவ னனுபவத்துக், கிராநின்றுளசத் தாதிகளை யிலயந்திக்கா தியிற்புரிக.

இ-ள். கிராணமுதலாமிந்தியங்கள்-கிராணமுதலிய இந்திரியங்களை, கிடைத்தவதிதேவதைகளுக்கு - அவற்றின் காரணமாயிருக்கும் அதிதேவர்களுக்கு, பராவுமுபாதியாம் - கிரமவுபாதியான, சூக்குமபராதிய வைம்பூதத்தில் - சூக்குமப்பிரிதிவி முதலிய பூதங்களில், விராவுலயமாம்படிபுரிந்து - வரிசையாகலயஞ்செய்து, மேவுசிவனனுபவத்துக்கு - பொருந்தியசிவனுக் கனுபவமாக, இராநின்றுள சத்தாதிகளை - இருக்கின்ற சத்தாதிவிஷயங்களை, இலயந்திக்காதியிற்புரிக, திக்குமுதலிய தேவர்களிடத்திலும்லயஞ்செய்யவேண்டும்—எ-று. (ரு)

(அ-கை.) அங்ஙனம் லயஞ்செய்யுமுறையைப் பிரித்துக்கூறுகின்றார்.

தன்னது சுரோத்ரேந் திசையினுந் துவக்கு சார்வாயு சட்சிர வியின்றன், மன்னுறு பிம்பம் இஃகுவை வருணன் மருவுமாக் ராணமஸ்வனியின், பன்னுறும்வாக்கு வக்கினி யிடத்தும் பாணியை யிந்திர னிடத்தும், துன்னுறு பாத மரிபாயு மித்ரன் றுகளில்கா சிபனிடத்துபத்தம்.

இ-ள். தன்னதுசுரோத்ரம் - தனதுசுரோத்ரேந்திரியத்தை, திசையினும் - திக்குகளிலும், துவக்குசார்வாயு - பரிசேந்திரியத்

தை வாயுவினிடத்திலும், சட்சிரவியின்றன் மன்னுறுபிம்பம் - நேத்திரேந்திரியத்தை சூரியபிம்பத்திலும்; இஃகுவைவருணன் - நாக்கிந்திரியத்தை வருணனிடத்திலும், மருவுமாக்ராணமஸ்வனியில் - பொருந்திய ஆச்ராணேந்திரியத்தை அஸ்வனியிடத்திலும், பன்னுறும்வாக்கு வக்கினியிடத்தும் - சொல்லப்பட்ட வாக்கேந்திரியத்தைஅக்கினியிடத்தும், பாணியையிந்திரனிடத்தும் - பாணி இந்திரியத்தை இந்திரனிடத்திலும், துன்னுறுபாதமரி-நடக்கும்பாத இந்திரியத்தை விஷ்ணுவினிடத்திலும், பாயுமித்ரன் - குத இந்திரியத்தை சூரியனிடத்திலும், துகளில்காசிபனிடத்துபத்தம் - குற்றமற்ற காசிபனிடத்தில் உபத்தஇந்திரியத்தையும்(இலயஞ்செய்யவேண்டும்)—எ-று. (தா-ம்.) ஞானேந்திரியம் கன்மேந்திரியங்கள் லயஞ்செய்முறைகூறியது. (சூ)

இதுவுமது.

மனமது சந்திர னிடத்தினும் புந்தி மறைபுகல் சதுமுக னிடத்தும், கனவகங் கார முருத்திர னிடத்துங் கவின்சித்த மச்சுத னிடத்தும், இனமுற லயஞ் செய்திடுக மற்றிவைகட் கிறைவரா யிருந்தவித் தேவர், முனமுள பெயரோ டிந்தியமென்ன முயலுமென் றருமறை புகலும்.

இ-ள். மனமதுசந்திரனிடத்திலும்-நாற்கரணத்துள்மனதை சந்திரனிடத்திலும், புந்திமறைபுகல் சதுமுகனிடத்தும் - புத்தியைவேதமோதும் பிரமனிடத்திலும், கனவகங்கார முருத்திரனிடத்தும் - அகங்காரத்தை உருத்திரனிடத்திலும், கவின்சித்தமச்சுதனிடத்தும் - நல்லசித்தத்தை அச்சுதனிடத்திலும், இனமுறலயஞ்செய்திடுக - முறையாகஇலயஞ்செய்யக்கடவாய், மற்றி

வைகட் கிறைவராயிருந்த வித்தேவர் - மேலிவற்றிக்கு இறைவராகவிருந்த தேவர்கள், முனமுளபெயரோ டிந்தியமென்ன - முன்னந் தங்களுக்குள்ள பெயரோடு இந்திரியமாக, மூயலுமென்றருமறை புகலும்-தொழிற்படுமென்று அரியவேதங்கூறுகின்றன—எ-று. (தா-ம்.) அந்தக்கரணங்கள் லயஞ்செய்முறைகூறி தேவர்களே அவ்வவ்விந்திரியங்களாய் விவகரிக்கிறார்களென்றுணர்த்தியது. (எ)

(அ-கை.) தேவர்களே இந்திரியாதிகளாய் விவகரிக்கிறார்களென்பது சுருதியுக்தமென்றுகூறி முடிவில் விராட்புருடாகாரமாய் தியானிக்கக் கூறுகின்றார்.

தேவர்க டாமே யிந்திய மென்னத் திகழ்தர விவகரிப்பவரொன், றோவரு மறைவாக் கியப்பிரமாண மோர்ந்துரைத் தனமலாற் சுவயமே, மேவுமுத் தியினாற் கற்பனை யன்று விளம்பவை முறைலயஞ் செய்து, பாவனை முடியில் விராட்புரு டாகா ரம்பயில் சிந்தனை புரிக.

இ-ள். தேவர்கடாமேயிந்தியமென்ன - தேவர்களே இந்திரியமென்னும் பெயருடன், திகழ்தரவிவகரிப்பவரொன்று - விளங்கவிவகாரஞ்செய்வார்களென்று, ஓ வருமறைவாக்கியப்பிரமாணம் - நிறைந்தவேதவாக்கிய நிச்சயத்தை, ஓர்ந்துரைத்தனமலால் - அறிந்து உரைத்தோமேயல்லது, சுவயமே மேவுமுத்தியினால் - சுவேச்சாயுத்தியினால், கற்பனையன்று - கற்பித்துக்கூறியதல்ல, விளம்பவைமுறை லயஞ்செய்து-மேற்கூறியவாறே லயஞ்செய்து, பாவனைமுடிவில்-தியானநிறையில், விராட்புருடாகாரம்பயில் சிந்தனைபுரிக - விராட்சுவரூபனாயிருக்கிறேனென்று தியானஞ்செய்க வேண்டும்—எ-று. (அ)

(அ-கை.) மேல் இரண்யகற்பம் அவ்வியாகிருதமா யிருத்த லை விவகரிக்குமுன் பிரசங்கசங்கதியாகச் சொல்லவேண்டி பிரமவித்தையை விரும்பினவர் முதல் உபாசிக்கத்தக்கதாயும் பிரமாண்டமே வடிவான விராட்புருடனிருதயகமலத்தில் அர்த்தபாகம் எப்போதும்பெற்றிருக்கின்ற மாயையோடுகலந்து சகலசகத்திற்கும் அபின்னநிமித்தோபாதான காரணமாகிய பிரம்மமே அர்த்தநாரீசமூர்த்தமாய் சர்வகாரணமா யிருக்கிறுரென்கின்றுர்.

அருத்தநாரீச வடிவமாம் பிரபுவே யகிலமார்பிராணிக டமக்கு, கருத்தவா தார கார ண மென்னக் கருது தாய் தந்தையா தலினுல், திருத்தமாப்படைத்த சகந்தேவர் மனிதர் திரளுயி ருணவினை யருந்த, பொருத்தமா மழையா திகளினுற் காத்துப் புகலெக்ய மூர்த்தியா யிருப்பார்.

இ-ள். அருத்தநாரீச வடிவமாம் பிரபுவே - அர்த்தநாரீஸ்வரவடிவமான பிரபுதானே, அகிலமார் பிராணிகடமக்கு - சகலசீவர்களுக்கும், கருத்தவாதாரகாரணமென்ன - கர்த்தாவாயும் ஆதாரமாயும் காரணராயும், கருதுதாய்தந்தையாதலினுல்-எண்ணப்பட்டதாய்தந்தையாயிருத்தலால்,திருத்தமாப்படைத்த-திருத்தமாகச்சிருட்டித்த, சகந்தேவர்மனிதர் திரளுயிருணவினையருந்த-சகந்தேவர் மனிதர் முதலான சீவகோடிகள் புசிக்கும்படி, பொருத்தமாமழையாதி களினுற்காத்து-தகுதியான மழைமுதலியவையால் இரட்சித்து, புகலெக்கிய மூர்த்தியாயிருப்பார்- பிரமாண்டத்தில் எக்கியமூர்த்தியாய்த்துதிபெற்றிருக்கின்றுர் எ-று.
(ப-ம்.) எக்கியமூர்த்தி - உலகுநாடிய தபோபலமளிப்பவர், (கூ)

(அ-கை.) பிரகிர்தமான லயக்கிரமத்தைச் சொல்லவேண்டி பிரம்மாண்டத்தி னுவரணங்களைக் கூறுகின்றார்.

அண்டமா னதற்குப் புறம்புள பிரதிவி யதிகமா மிரண்டுபங்கதற்குக்,கண்டநீ ரிரண்டா மனலதற்கிரண்டு காலதற் கிரண்டதா காயம், மண்டதற் கிரண்டு பங்கதாய் விரிந்து வளர்ந்திடும் வரிசையாய் மேலும், விண்டதோர் வியஸ்த சமஸ்தவியா பகத்தால் மேதினி சூழ்ந் திடப் படுமே.

இ-ள். அண்டமானதற்கு - அண்டகோளத்திற்கு, புறம்புளபிரதிவி - புறம்பிலுள்ள பிரதிவிபூதம், அதிகமாமிரண்டுபங்கு- இரண்டுபங்குஅதிகமாகும், அதற்குக்கண்ட நீரிரண்டு-அதற்குமேல் சலபூதம் இரண்டுபங்குஅதிகமாகும், அனலதற்கிரண்டு-அதற்குமேல் அக்கினிபூதம்இரண்டுபங்கு அதிகமாகும், காலதற்கிரண்டது - அதற்குமேல் வாயுபூதம் இரண்டுபங்கு அதிகமாகும், ஆகாயமண்டதற் கிரண்டுபங்கதாய்விரிந்து - அதற்குமேல் ஆகாயபூதம் இரண்டுபங்கு அதிகமாகவும் வியாபித்து, வளர்ந்திடும் வரிசையாய் - முறையே விர்த்தியடையும், மேலும் விண்டதோர் வியஸ்த சமஸ்தவியாபகத்தால் - மேலும் சொல்லப்பட்ட பஞ்சீகரணஞ்செய்யப்படாமலும் பஞ்சீகரணஞ்செய்யப்பட்டு மிருக்கிற ஆவரணத்தினுல், மேதினிசூழ்ந்திடப்படுமே - சகமானது சூழப்பட்டும் இருக்கின்றது-எ-று. (தா-ம்.) அண்டமானது ஒன்றுக்கொன்று பத்துபங்கு ஆவரணங்களினுல் வியாபித்திருக்கிறதென்று புராணங்களிற் கூறப்பட்டிருக்க, இங்குஇரண்டிரண்டுபங்கதிகமென்ற தெவ்வாறென்னில்; இரண்டுபங்கை நாற்புறமுஞ்சூழ்ந்துவந்தால் பத்துபங்காகும், எவ்வாறென்னில்-ஐந்து குரோசத்தைப் பிரதக்ஷணமாகவந்தால் ஐயைந் திருபத்தைந்து

குரோசமாகும், அதுபோல ஒன்று ஐந்தானல் இரண்டுபத்தாமெ ன்றறிக. அல்லது அங்கு பஞ்சீகரணஞ்செய்யப்படாத ஆவரண மென்றும் இங்கு செய்யப்பட்டதென்றுங் கருத்தாதலாலும் வி ரோதமில்லை. (கo)

(அ-கை.) வியாப்பியத்தை வியாப்கத்தில்இலயப்படுத்தவே ண்டுமென்கிறார்.

ஆதலாற் பூமி சலத்தினுஞ் சலந்தா னனலினும னல்வாயு தனிலும், ஓதிய வாயு விண்ணிலும் விண்டா னுற்பவ மூலமாந் தூல, பேதமார் சகல பிரபஞ்சகார ணமாப் பேசிய மகாகாய மென்னும், ஏதமி லிரண்ய க ர்ப்பவியோ மத்து மியைதர லயமது புரிக.

இ-ள். ஆதலால் பூமிசலத்தினும் - பிரதிவியை அப்புவிலு ம், சலந்தானனலினும் - அப்புவை தேயுவிலும், அனல்வாயுத னிலும் - தேயுவை வாயுவிலும், ஓதிய வாயுவிண்ணிலும் - கூறி யவாயுவை ஆகாயத்திலும், விண்டான் - அவ்வாகாயத்தை, உற் பவமூலமாம் - சிருட்டிக்கேதுவாய்நின்று, தூலபேதமார் சகல பிரபஞ்சகாரணமா - நாலுவகையான தூலப்பிரபஞ்சகாரணமா க, பேசியமகாகாயமென்னும் - கூறப்பட்ட மகாகாயமான, ஏத மிலிரண்ய கர்ப்பவியோமத்தும் - குற்றமற்ற இரண்யகற்பாகா யத்திலும், இயைதரலயமதுபுரிக - பொருந்த இலயஞ்செய்து மேலும்—எ-று. (கக)

இதுவும்து.

அந்தமா மகதா காயத்தில் யோகி யமலலிங் கத்த னு மாத்ர, வந்தனைய்க் கணப்போ திருந்திட வதுதான் வாசனை சூக்குமபூதம், மூந்துறு கன்ம மவித்தைஞா

னேந்திய முறயரு கன்மவிந் திரியம், பந்தமா மனது பு
ந்தியென் றுரைப்ப பகரும்லிங் காத்மக பாவம்.

இ-ள். அந்தமாமகதாகாயத்தில் - அப்பெரியமகதாகாயத்தி
ல், யோகியமலலிங்கத்தனுமாத்ரவந்தனுய் - யோகியானவன் இ
லிங்கசரீரமாத்திரமுடையவனுக, கணப்போதிருந்திட - ஒருக்ஷ
ணகாலமேனும் இருக்கவேண்டும், அதுதான் - அந்தலிங்கசரீர
மாவது, வாசனை - சகவாசனை, சூக்குமபூதம் - சூட்சுமபூதங்கள்,
முந்துறுகன்மம் - முன்னுள்ளகருமம், அவித்தை - அஞ்ஞானம்,
ஞானேந்தியம் - ஞானேந்திரியங்கள்,முயறருகன்மவிந்திரியம்-
தொழிற்படுகின்றகன்மேந்திரியங்கள், பந்தமாமனதுபுந்தியென்
றுரைப்ப - மனம் புத்தி இவைகளென்றுங்கூறப்படும், பகரும்
லிங்காத்மகபாவம்-முற்கூறியலிங்கசரீரத்தன்மை— எ-று. (௬௨)

இதுவுமது.

அம்முறை தூல வுபாதியை லயஞ்செய் தர்த்தமா
சித்திபெற் றவன்போல், இம்மையிப் பிரமாண் டப்புற
த் தவனு யிருந்திந்தச் சூக்கும பூதச், செம்மையாஞ் சம
ஷ்டி லிங்கதே கத்தில் செறிந்ததிஷ் டித்தவனை, மும்
மையு மூணரு மிரணிய கருப்ப முதல்வனுய் நின்றமை
நினைக.

இ-ள். அம்முறை - முற்கூறியபிரகாரம், தூலவுபாதியைல
யஞ்செய்து - தூலவுபர்தியை விராட்டு சுவரூபத்தில் லயஞ்
செய்து, அர்த்தமாசித்திபெற்றவன்போல் - அனைவாசி சித்தி
பெற்றவன்போலாய், இம்மையிப்பிரமாண்டப் புறத்தவனுய் -
இப்போது இந்தப்பிரமாண்ட அபிமானம்விட்டு வெளிப்பட்ட
வனுக, இருந்து - நின்று, இந்த சூக்குமபூதச்செம்மையாஞ் சம

ட்டிலிங்கதேகத்தில் செறிந்ததிஷ்டித்தவனுன - பொருந்தி அத
ற்கதிஷ்டிதாவான், மும்மையுமுணரும் - திரிகாலமுமுணருகின்
ற, இரணியகருப்ப முதல்வனுய்நின்றமைநினைக - இரணியகரு
ப்பசுவரூபனுய் இருக்கின்றேனென்று சிந்திக்கவேண்டும்-எ-று.

(அ-கை.) தாமரையிற்றேன்றிய நான்முகப்பிரமனன்றே
இரணியகருப்பன் சூக்குமபூத சமஷ்டி எவ்வாறுமென்ற வினுக்
குத்தரம்.

சூக்குமபூத சமட்டியி னபிமா னந்தொட ரிரணிய
கருப்பன், நீக்கமி லண்டப் பரப்பினையொடுக்க நினைக்கு
முன் றனதயிஸ்வரிய, போக்கியநிமித்தந் தாமரைப்போ
திற் பொலிதர நான்முகம் படைத்தான், ஊக்கமெஞ்
ஞானியிதிற்பேத நோக்க மொழித்தது தானென நினைக

இ-ள். சூக்குமபூதசமட்டியின் - சூக்குமபூதசமஷ்டியினது,
அபிமானந்தொடரிரணியகருப்பன் - அபிமானம் பொருந்திய இ
ரணியகருப்பனே, நீக்கமிலண்டப் பரப்பினையொடுக்க நினைக்கு
முன்-வேறுபடாதஅண்டவிரிவை லயப்படுத்தநினைக்குமுன்னர்,
தனதயிஸ்வரிய போக்கியநிமித்தம்-தனது அண்டத்தின் அயிஸ்
வரியத்தை யனுபவிக்குநிமித்தம், தாமரைப்பூவிற் பொலிதரநா
ன்முகம்படைத்தான் - பத்மாசனத்தில் விளங்கியிருட்டிக்க நா
ன்குமுகங்கள்பெற்றுர் ஆதலால், ஊக்கமெஞ்ஞானி - ஞானவா
ன்திடமாக, இதிற்பேதநோக்கமொழித்து - இதுதனக்கு வேறெ
ன்னுங் கருத்தைவிட்டு, அதுதானெனநினைக - அச்சமட்டிலி
ங்க சரீரம் தானென்று நினைக்கக்கடவன்—எ-று. (தா-ம்.) பூத
சூக்கும சமஷ்டி அபிமானியே இரண்யகருப்பனென்று க
ருத்து. (௧௩)

(அ-கை.) இங்ஙனம் இரணியகருப்பனைச் சிந்தித்த பின் மேற்செய்காரியங் கூறுகின்றார்.

இவ்வகை சமஷ்டி லிங்கதேகத்தை யியல்புற மிகு சூக்க மாய், அவ்வியா கிருத மாயாம்சந் தனிலு மதிசூக்க வவ்வியக்த சித்தில், செவ்விய சிதாபா சனும்பிரி வாகத் திகழ்தா லயமது புரிக, எவ்வமி லிதனைப் பன்மதத் தவரு மேன்றநா மத்தினு லிசைப்பார்.

இ-ள். இவ்வகைசமஷ்டிலிங்கதேகத்தை - இவ்வாறான சமட்டிசூக்குமதேகத்தை, இயல்புறமிகுசூக்கமாய் - பஞ்சீகரணஞ் செய்யப்படாத சூக்குமபூதங்களைவிட (இயல்பாக மிகுசூக்குமமாயிருக்கும்), அவ்வியாகிருதமாயாம்சந்தனிலும் - உபாதிரூபமாகப்பகுக்கப்படாதமாயாம்சத்திலும், அதிசூக்கவவ்வியக்தசித்தில் - அதிசூட்சுமமாகப்பகுக்கப்படாத வுபாதிரசிதமான சித்திலும், செவ்வியசிதாபாசனும்பிரிவாக - நல்லசிதாபாசனையும் வெவ்வேறாக, திகழ்தாலயமதுபுரிக - சேரும்படி லயஞ்செய்யக்கடவாய், எவ்வமிலிதனை - குற்றமற இந்த வவ்வியாகிருதத்தை, பன்மதத்தவரும் - பலமதஸ்தர்களும், என்றநாமத்தினுலிசைப்பார் - தங்கட்ங்கட் கிசைந்த பெயரை கூறுவர்கள்—எ-று. (தா-ம்.) சடாம்சத்தை சட்த்திலும் சிதபாசாம்சத்தை சித்திலும் லயப்படுத்தவேண்டுமென்று தெரியப் பிரித்துக் கூறியது. (கரு)

(அ-கை.) இந்த அவ்வியாகிருத ஸ்தானத்தைப் பிராந்தியால் பலவாதிகள் பலவாறு கூறுகின்றாரென்கிறார்.

எவ்விடந் தன்னிற் சகநாமரூப விருபேத மறவொன்றி நிற்கும், அவ்விடந் தன்னைச் சாங்கியர் முதலோ ரறிதரப் பிரகிர்தியென் றுரைப்பார், செவ்விய வேதாந்

திகள்மாயை யென்பர் திகழணு வென்பர் தார்க்கீகர், ஒ வ்வுருப் பவுத்த ரவித்தையென் றுரைப்ப ரோர்ந்திடவ் வியாகிர்த மொன்றே.

இ-ள். எவ்விடந்தன்னிற்சகம் - எந்தவிடத்தில் சகமானது, நாமரூபவிருபேதமாவொன்றிநிற்கும் - நாமம் ரூபம் என்னுமிருபேதமின்றி யிருக்கின்றதோ, அவ்விடந்தனை-அந்தஸ்தானத்தை, சாங்கியர் முதலோர் - சாங்கியமதஸ்தர்முதலானோர், அறிதரப்பிரகிரதியென்றுரைப்பர் - அறியத்தக்கதாய் பிரகிர்தியென்றுகூறுவார்கள், செவ்வியவேதாந்திகள்மாயையென்பர்- நல்லவேதாந்திகள் மாயையென்பார்கள், திகழணுவென்பர்தார்க்கீகர் - தார்க்கீகர்தோன்று மணுவென்பார்கள், ஒவ்வுருப்பவுத்தரவித்தையென்றுரைப்பர் - ஒருமையின்றிய பவுத்தமதஸ்தாள் அவித்தையென்று கூறுவார்கள், ஓர்ந்திடவ் வியாகிருதமொன்றே - ஆதலின் அந்த அவ்வியாகிருதமொன்றென் றறியக்கட வாய்—எ-று. (கசு)

(அ-கை.) அவ்வியாகிருதத்தில் சகலமும் லயமடைந்திருந்து சிருட்டியிற்றோன்றும்வகை கூறுகின்றார்.

அனையதோ ரவ்வியா கிருதத்திற் சர்வ மமைதரு லயமுற வுருவம், நினைதரத் தோன்று ததன்சத்தை யாலே நிகழ்தரு மெங்ஙன மென்னில், புனைதரு மவைசம் பந்தமொன் றின்றிப் பொருந்துசித் தருந்துத லின்றி, வினைதரு சிருட்டி காலமட் டிருந்து விளையுமவ் வியக்தத த்தி னின்றே.

இ-ள். அனையதோ ரவ்வியா கிருதத்தில் - அந்த அவ்வியாகிருதத்தில், சர்வமமைதருலயமுற-சகலபதார்த்தங்களும் லயம

டைந்து, உருவங்களைதரத்தோன்ருது - பாவிக்கின்றரூபந்தோன்ருமல், அதன் சத்தையாலேநிகழ்தரும் - அதனது சத்தையாலேயமைந்திருக்கின்றன, எங்ஙனமென்னில், எவ்வாறென்னில், புனைதருமவை - எடுத்துக்கூறியவைகள், சம்பந்தமொன்றின்றி - ஒன்ருெடொன்று சம்பந்தமில்லாமலும், பொருந்து சித்தருந்துதலின்றி - சித்துக்குப்போக் கியமாகாமலும், வினைதருசிருட்டி காலமட்டிருந்து - மறுசிருட்டிகாலம்வரையிலிருந்து, விளையுமவ்வியக்தத்தினின்றே - அந்த அவ்வியாகிருதத்திலிருந்து மறுசிருட்டியுண்டாகிறது—எ-று. (கஎ)

(இ-கை.) சிருட்டிக் கிரமமும் சம்மாரக்கிரமமும் கூறுகின்ருர்.

சிருட்டி யாகாய முதலநுலோமத் திகழ்தரு கிரமமா யுண்டாம், வருத்து சங்காரம் பிருதிவி முதலா மாறியே பிரதிலோம மாகத், திருத்தமா யொடுங்குந் தோன்றிய நெறியே தெளிஞரோ பகுத்திட வல்லார், அருத்தமாமிதனை நிரந்தரவநுசந் தான்மன்பொடு புரிந்திடவே.

இ-ள். சிருட்டியாகாயமுதல் - உற்பத்தியானது ஆகாயமுதலாக, அநுலோமத்திகழ்தருகிரமமாயுண்டாம் - அநுலோமக்கிரமமாயுண்டாகும், வருத்து சங்காரம் - வருந்துகின்ற ஒடுக்கமானது, பிருதிவிமுதலா - பிருதிவிமுதலாக, மாறியேபிரதிலோமமாக - அதற்குமாருய் பிரதிலோமக்கிரமமாக, திருத்தமாயொடுங்குந் தோன்றியநெறியே - உற்பத்தியான முறைப்படி சரியாய் லயப்படும்; தெளிஞரோ பகுத்திடவல்லார் - இத்தோற்றவொடுக்கங்களை தத்துவஞானிகளே பிரித்துணரத்தக்கது, அருத்தமாமிதனை-பொருளாயிருக்கின்றவிதனை, நிரந்தரவநுசந்தானமன்பொடுபுரிந்திடவே-சதாவநுசந்தானஞ்செய்யவேண்டும்-எ-று,

(அ-கை.) அங்ஙனம் விராட்டு, இரண்யகற்பம், அவ்வியாகிருதமென்னு மூன்றுஸ்தானத்தையும்விட்டு பரமகாரணத்திலிருக்கவேண்டுமென்று முற்கூறியதை விரித்துக்கூறுகின்றார்.

ஆகியவிராட்டு விரணியகருப்ப னவ்வியா கிருதனுமூன்று, வாகிய தூல சூக்கும மூல மருவுறு சமஷ்டியாஞ் சகத்தும், மோகமா மவத்தை மூன்றெடும் விடுத்துமொழிந்திடு துரியமாய்நின்ற, சோகமில் பிரம பதமதுகிடைக்கத் தொடர்பினிற் றியானிக்க வேண்டும்.

இ-ள். ஆகியவிராட்டு விரணியகருப்ப னவ்வியாகிருதனுமூன்று-முற்கூறிய விராட்டு இரணியகருப்பன் அவ்வியாகிருதனென்னுமூன்று, வாகியதூலசூக்குமமூலம் - புறத்திலுள்ளதூலம் சூக்குமம் காரணமுமாகிய, மருவுறுசமஷ்டியாஞ் சகத்தும் - சேர்ந்தசமஷ்டிசகத்தையும், மோகமாமவத்தை மூன்றொடும் விடுத்து - மயச்கமான சாக்கிரசொற்பன சுழுத்தியென்னு மூன்றவத்தையையும்விட்டு, மொழிந்திடு துரியமாய்நின்ற - நாலாவது துரியஸ்தானமாய்நின்ற, சோகமில்பிரமபதமதுகிடைக்க - துன்பமில்லாத சர்வாதிஷ்டானமான பிரமபதசித்தியின்பொருட்டு தொடர்பினிற்றியானிக்கவேண்டும் - இடைவிடாது தியானஞ்செய்யவேண்டும்—எ-று. (கக)

இதுவுமது.

அம்மசா தியானந்தன்னு லடைதருஞ் சாக்ஷாத்காரம், செம்மையாம் விருத்திதன்னுற் றியானகாரண கர்த்தாவாம், இம்மையா ரிலிங்கமு லாக்கியானத்தை யிகந்து நீக்கி, தம்மூமயர் பரத்தை யொன்றச் சால்கெட வானென்றும்போல்.

இ-ள். அம்மகாதியானந்தன்னல் - அந்தமகத்தானதியான பலத்தினல், அடைதருஞ்சாக்ஷாத்காரம் - சாக்ஷாத்காரமான சுவாநுப்வமுண்டாகும், செம்மையாம் விருத்திதன்னல் - அந்தசுத்தவிருத்தியினல், தியானகாரணகர்த்தாவாம் - தியானத்திற்குக் காரணமாயும் - கர்த்தாவாயுமிருக்கின்ற, இம்மையாரிலிங்கம் - இங்ஙனமுள்ள லிங்கதேகத்தையும், மூலாக்கியானத்தை - மூலாஞ்ஞானத்தையும், இகந்துநீக்கி - போக்கிலயஞ்செய்து, தம்முயர்பதத்தையொன்றச்சால்கெடவானென்றும்போல்-கடமுடைந்தாலவ்வாக்யம் மகாகாயத்தைச்சேர்வநுபோல தானுகிய மேலான பிரமானந்தபதத்தையடையக் கடவாய்-எ-று.(தா-ம்.) சுருதிவாக்கியம். மூன்று ஸ்தானத்தையும் விட்டென்னுமிடத்து உள்ளறிவுமல்ல வெளியறிவுமல்ல இவ்விரண்டிடத்திலறிவுமல்ல, அறிவுமல்ல அறிவின்மையுமல்ல அறிவேகனமாயுறைந்திருப்பதுமல்லவென்று சுருதியிற் காட்டப்பட்ட முறையே விட்டு சர்வாதிஷ்டானமாயும் முடிவாய் மிகுந்த சிஙமாத்திர ஏகரசமாயும் திரிசியமல்லாமலும் விவகரிக்கக்கூடாமலும் கிரகிக்கக்கூடாமலும் இலக்கணமில்லாமலும் சிந்திக்கக்கூடாமலும் பெயருக்குட்படாமலும் ஏகாத்மஞான சாரமாயும் பிரபஞ்சத்தின் ஒழிவாயும் சிவமாயும் சாந்தமாயும் அத்வைதமாயும் இருப்பது நாலாவதுபதமாம். அதுசாக்ஷாத்தாககிடைக்கும் வரையில் தியானிக்கவேண்டுமென்றுகொள்க. இங்ஙனம் இலிங்கதேகத்தை லயப்படுத்தி துரியபதத்தைச் சேர்வதே லிங்கமாகிய விலங்கை விட்டு கிர்தார்த்தனுத லென்றுணர்க. (உ0)

(அ-ஙக.) உள்ளறிவுமல்ல வெளியறிவுமல்ல வென்பது முதலாகச் சொல்லிய சுருதியில் லிங்கதேகத்தைவிடச் சொல்லவில்லேயே அதுவும் விடவேண்டுமென்றதேனென்று சங்கித்து ஸ்தூல சூக்குமபூதம் இந்திரியங்களிலேயே லிங்கதேகம் நிலைபெ

ற்றிருப்பதால் மூன்றுஸ்தானத்தையும் விடும்போதே லிங்கதே கத்தைவிடுவதும் தானேசித்தமாகுமென்று காட்டுகின்றார்.

பூத மிந்திரிய மனந் தெளிபுந்தி புணர்கன்மம் வா சனை வாயு, பேதவஞ்ஞான மிவை லிங்கதேகப் பெற்றி யஞ்ஞான மேதென்னில், ஏதமில் பிரம மவித்தையைக் கூடி யியலவ்வியா கிருதமாம் போதில், ஓதியசூக்க பூ தநின் றிலிங்க முற்பவ மாகுமென் றுணர்வாய்.

இ-ள். பூதமிந்திரியமனந் தெளிபுந்தி-பூதங்கள் இந்திரியங் கள் மனம் புத்தி இவைகளும், புணர்கன்மம்வாசனைவாயு-பொ ருந்தியகர்மம் வாசனை வாயு இவைகளும், பேதவஞ்ஞானம் - பேதமானவஞ்ஞானமும், இவைலிங்கதேகப்பெற்றி - இவை யே லிங்கசரீரநிலையாகும், அஞ்ஞானமேதென்னில் - அஞ்ஞா னமெங்ஙன நிலையாமென்றால், ஏதமில்பிரமம் - களங்கமற்ற பி ரமமானது, அவித்தையைக்கூடி - அஞ்ஞானவரணத்தினால்,இ யலவ்வியாகிருதமாம்போது-இசைந் தவ்வியாகிருதமாயிருக்கும் போதே, ஓதியசூக்கபூதநின்று - முற்கூறியசூக்கும பூதங்களின் வழியே, இலிங்கமுற்பவமாகுமென்றுணர்வாய் - இலிங்கசரீர முண்டானதென்றுணரக்கடவாய்—எ-று. (தா-ம்.) அஞ்ஞான மே இலிங்கசரீரத்திற்கு முதனிலையாகும், அதுநீங்கின் இலிங்க சரீரமழியுமென்பது கருத்து. (உக)

(அ-கை.) இவ்வாறு வான்மீகிமகாரிஷியால் பிரணவப் பொருளைவிளக்கு முபாயத்தினால் போதிக்கப்பட்ட பரத்வாஜர் ஞானவானாய் தமதனுபவத்தைக் குருவினதனுபவத்தோ டொ த்து பரிக்ஷைசெய்யும் பொருட்டு பிரகாசமாகச் சொல்லுகின் றார்.

நிகழு மிப்போ திலிங்க நிகளம் விட் டனைய சர்வ [னல்
இக முத்த னனெ னெந்த வியைபெனிற் சிதாம்சந் தன்
தகுஞானு னந்தவாரி சார்ந்தன னபேத மாக
சகலமா முபாதி நீங்குந் தற்பரமாகி நின்றேன்.

இ-ள். நிகழுமிப்போது - விளக்கமான விப்போது, இலிங்கநிகளம்விட்டு - இலிங்கதேகமான விலங்கைவிட்டு, அனையசர்வ - அந்தச்சர்வப்பிரகாரத்தினலும், இகமுத்தனனென - சிவன்முத்தனனேன், எந்தவியைபெனில் - எவ்வாறென்னில், சிதாம்சந்தன்ஞல் - நான் சித்தினம்சமாக விருத்தலினல், தகுஞானனந்தவாரி சார்ந்தனன் - மேலான ஞானனந்த சமுத்திரத்தை யடைந்தேன், அபேதமாக-பேதமின்மையால், சகலமாமுபாதிநீங்கும் - சகலவுபாதிகளு மற்றிருக்கின்ற, தற்பரமாகிநின்றேன் - பரமாத்மாவாக விருக்கிறேன்—எ-று. (உஉ)

(அ-கை.) ப்ரமாத்மாவாக விருக்குந்தன்மையை திருட்டாந்தத்துடன் கூறுகின்ருர்.

மேலுங் கூடஸ்த்தமாக விளங்கு கேவலமா வியாபி, மூலமாஞ் சித்தாய் நின்றேன் முதிர்சத்தி பெற்றேனல்லன், சால் குட முடைந்தால் வானிற் சார்பேத மின்மை போல, தூலமார் சீவேஸாத்ம சொற்பேதஞ் சுருதி கூறு.

இ-ள். மேலுங் கூடஸ்தமாக - பின்னுங் கூடஸ்தமாகவும், விளங்குகேவலமர்வியாபி - பிரகாசிக்கும் ஏகவஸ்துவாக வியாபித்திருக்கின்ற, மூலமாஞ் சித்தாய்நின்றேன் - காரணமான சித்தாகவே யிருக்கிறேன், முதிர்சத்திபெற்றேனல்லன் - சிற்

சத்திவேருய்ப்பெற்றேனன்று, சால்குட்முடைந்தால் - சால்கு ட்முதலானவையுடைந்தால், வானிற்காரபேதமின்மைபோல - அவ்வாகாயங்கள் மகாகாயத்தில் அபேதமாவதுபோல, தூலமா ர்சிவேஸாத்ம - தேகத்திற் பொருந்திய சீவாத்மாவென்றும் பர மாத்மாவென்றும், சொற்பேதம் - சொல்லுகின்ற வேற்றுமை, சுருதிகூரு - வேதங்களிற்சொல்லவில்லை (என்ருல் அவையேக மென்றே கூறுகின்றன)—எ-று.(தா-ம்.) ஒருகடத்திற்கே கடம் கலசமுதலான நாமபேதகற்பனையினுல் அவ்வுபாதியடைந்த ஆ காயத்திற்கும் கடாகாயம் கலசாகாயமுதலான நாமபேதகற்ப னையுண்டாவதுபோல, ஓரஞ்ஞானத்திற்கே சகமென்னும் பல நாமபேதகற்பனையுண்டானதால் அந்த சகத்தாகிய வுபாதியுள்ள எனக்கும் சிவன் ஈஸ்வரன் தேவன் மனிதன் யானை என்பது முதலான நாமபேதகற்பனையுண்டாயிற்று. அந்த ஓர் கடமழிந் தால் இரண்டுபேதமுநீங்கி சுத்தாகாயமாவதுபோல ஓரஞ்ஞா னம் நீங்கில் சகலநாமரூப பேதமுநீங்கி சித்தோடயிக்கமான ஐஸ்வரிய முண்டாமென்றுகருத்து. இங்ஙனம் சீவாத்ம பரமா த்துமாக்களுக்கு ஐக்கியங் கூறுஞ் சுருதிகளாவன: எங்கே வே ருென்றைப் பார்க்கவும் கேட்கவும் அறியவுமில்லையோ அஃதே பூமா பிரம்மானந்தமாகும் எல்லாம் இவனது ஆத்மாவாக இரு க்கும்போது எதனுல் எத்தைக்காண்பன் ஒரே ஆத்மஞான சார மாயும் சிவமாயும் சாந்தமாயும் அத்வைதமாயு மிருப்பது நாலா வது துரியப்தம் இவ்விடத்துப்பலவாக ஒன்றுமில்லையென்றும் சுருதிகள் ஐக்கங் கூறுகின்றனவென்றறிக. (உ௩)

(அ-கை.) சீவாத்மா பரமாத்மாவில் அபேதமாமென்பது சுருதிகள் கூறும் ஐச்கியம் திருஷ்டாந்தத்தாற் கூறுகின்ருர்.

திகழ்தரு மக்னிதன்னைச் சேர்ந்திடு மக்னி யொன்ருய்
நிகழ்தரு மபேதமாக நிறைந்த பேருருவத் தாலும்

மிகுந்திடு விசேட மின்றி மேவல்போற் சீவாத்மாவும்
தகும்பர மாத்துமாவிற் சார்ந்தொன்றி மகத்தாய்நிற்கும்

இ-ள். திகழ்தரு மக்னிதன்னை - விளங்குகின்ற நெருப்பில், சேர்ந்திடுமக்னியொன்ருய் - கூடிய நெருப்புமொன்ருக, நிகழ்தருமபேதமாக - பேதமின்றிவிளங்கும், (அதுவுமன்றி) நிறைந்தபேருருவத்தாலும் - பெயரினுலும் வடிவினுலும், மிகுந்திடு விசேடமின்றி - மேற்படுங் குணவிசேஷ மில்லாது, மேவல்போல - இருக்குந்தன்மைபோல, சீவாத்மாவும் - சீவாத்மாவானது, தகும்பரமாத்துமாவில் - தக்க பரமாத்துமாவில், சார்ந்தொன்றி மகத்தாய்நிற்கும் - ஒன்ருய்க்கூடி பூரணமா யிருக்கும்—எ-று.

(அ-கை.) மேலும் அசேதனப்பிரபஞ்சமும் சித்தில் லயப்படுத்துவதால் சேதனமா மென்பதற்குத் திருஷ்டாந்தங் கூறுகின்ருர்.

உப்பளஞ் சேர்ந்த திரண முப்பாகு மொருமை
போற் சைதன்னியத் தொன்றும், இப்பிரபஞ்ச வசேத
ன மெல்லா மியைதரு சேதன மாகும், செப்புமக்கட்டி
கணாந்திடு லுப்பாஞ் செறிந்திடச் சமுத்திரந் தன்னில்,
அப்பதாய் நாம ரூப மின்ரும் போலற லமிழ் தவி யொ
ன்றல் போலும்.

இ-ள். உம்பளஞ் சேர்ந்ததிரணம் - உப்பளத்திற் சேர்ந்ததிரணமுதலானவை, உப்பாகு மொருமை போல் - அதின் மடிந்து உப்பாகுந்தன்மைபோல, சைதன்னியத்தொன்றும் - சித்தில் லயப்படுத்தப்பட்ட, இப்பிரபஞ்சவ சேதனமெல்லாம் - இந்தப்பிரபஞ்ச வசேதனங்களெல்லாம், இயைதரு சேதனமாகும் - கூடிச் சேதனங்களாகும், செப்புமக்கட்டி - அவ்வுப்புக்க

ட்டியானது, கரைந்திடிலுப்பாம் - உடைந்துகரைந்தால் உப்பென்று சொல்லப்படும், செறிந்திடச் சமுத்திரந்தனில் - கட்விற்சேர்ந்தால், அப்பதாய் நாமரூபமின்றும்போல் - அன்னீராகி நாமரூபமில்லாமற்போதல்போல, அறலமிழ் தவியொன்றல்போலும் - சலத்தில் சலமும் பாலில்பாலும் நெய்யில் நெய்யும் கூடுவதுபோல ஏகசுவரூபமாகும்—எ-று. (உரு)

முனமிவை யெல்லாந் தம்மி னுட்கூடி முதிர் சொரூபங் கெடாதாகி, பினமுறு பேத மாக் கொளற் கரிதாம் பெற்றிபோ லியானபேதமதாய், நினைவில் சேதனமாய் நித்தி யானந்த நிறைந் தெலாமறிந்து மேலாகி, கனந்தரு பரம காரண சத்திற் கவின்பெறப் பிரவேசமாய்நின்றேன்.

இ-ள். முனமிவையெல்லாம் - முற்கூறிய இவைகளெல்லாம், தம்மினுட்கூடி - தம்முட்சேர்ந்து, முதிர் சொரூபங்கெடாதாகி - தமது சுவரூபநாசமில்லாமல், பினமுறுபேதமாக்கொளற்கரிதாம் - பிரிவுபடபேதமாமகக் கிரிகிக்கப்படாததான; பெற்றிபோல் - தன்மையைப்போல, இயானபேதமதாய் - நான் சர்வப்பிரகாரத்தினுலும் அபேதமாகவும், நினைவில்சேதனமாய் - சங்கற்பமற்ற சிதேகரசமாகவும், நித்தியானந்த நிறைந்து - சதானந்தபூரணமாக, எலாமறிந்து மேலாகி - சர்வமுமுணர்ந்து மேன்மையுடையதாகவும், கனந்தருப்ரமகாரணசத்தில் - மகத்தாகவுமிருக்கின்ற மூலமான சத்தாத்மாவில், கவின்பெறப்பிரவேசமாய்நின்றேன் - நன்றுப்பிரவேசித்திருக்கிறேன்—எ-று. (தர்-ம்.) சுவரூப நாசமில்லாம லென்றதினுல் உபாதியழியும்போது உபாதிசீங்கிய சீவாத்மாவுக் கழிவில்லையென்றுகருத்து. (உசு)

(அ-கை.) சுருதியிற் கூறியபடி சுத்த குணங்களையுடைய பிரம்மானுபவத்தை விளக்குகின்றார்.

நித்தியமாய் வியாபகமாய்ச் சாந்தமாகி நிரஞ்சன மாய்க் குறைவற நிட்களம தாகி, சுத்தமதாய்ச் சலன்மி ன்றி மேன்மையான தொல்பதமா மப்பிரம சொரூபமா னேன், சித்தமுறத் தள்வதிது கொள்வதென்னுஞ்செ றிபேத மறத்திகழுஞ் சத்யமாகி, இத்தகையிந் திரியமி ல்கே வலமாய்ச் சத்திய வியல்பான சங்கற்பப் பிரமமா னேன்.

இ-ள். நித்தியமாய் - நித்தியமாகவும், வியாபகமாய் - வியா பகமாகியும், சாந்தமாகி - உபசாந்தமாகியும், நிரஞ்சனமாய்-குற் றமற்றதாயும், குறைவற நிட்களமதாகி - குறைவின்றி நிஷ்கள மாகியும், சுத்தமதாய் - சுத்தமாகியும், சலனமின்றி மேன்மை யான - அசைவற்றதாய் மேலானதாயிருக்கின்ற, தொல்பதமா மப்பிரமசொரூபமானேன் - அநாதியான அந்தப்பிரமசொரூப மானேன், சித்தமுறத்தள்வதிது கொள்வதென்னும்-சித்தம்பொ ருந்த இது தள்ளத்தக்கது இதுகொள்ளத்தக்க தென்கின்ற, செ றிபேதமறத் திகழுஞ்சத்தியமாகி - பொருந்திய பேதமின்றி வி ளங்குஞ் சத்தியப் பொருளாகி, இத்தகை யிந்திரியமில் கேவல மாய் - இவ்வாறான இந்திரியப் பிரவிர்த்தியில்லாத தனிவஸ்து வாய், சத்தியவியல்பான சங்கற்பப்பிரமமானேன் - இயல்பான சத்திய சங்கற்பமுடைய பிரமமானேன்—எ-று. (௨எ)

இதுவுமது.

புண்ணிய பாப மிரண்டு மின்றாகிப் புகல்சகத் பா மகா ரணமாய், எண் ணுமத் விதியப் பாஞ்சுடராகு மிற

ப்பி லானந்த மாம் பிரமம், நண்ணு மான்மாவா யிக்கு
ண முளதாய் நவின்றிடு சத்துவ மாதி, திண்ணிய மாயா
குணமிலா தெல்லாஞ் செறிந்திடு மெனச் சிந்தை செய்
வேன்.

இ-ள். புண்ணியம் பாபமிரண்டு மின்ருகி - புண்ணியபா
பமற்றதாயும்; புகல்சகத்பரமகாரணமாய் - பிரபஞ்சத்திற்கு மே
லானகாரணமாயும், எண்ணுமத்விதியப் பரஞ்சுடராகி-நிச்சயிக்
கப்பட்ட அத்வைதமான பரஞ்சோதியாகியும், இறப்பிலானந்த
மாம் பிரமம் - அழிவற்ற நித்தியானந்தமான பிரமமானது, நண்
ணுமான்மாவாயிக்குண முளதாய் - பொருந்திய ஆத்மாவென்
னப்பட்டு மேற்கூறிய குணவிசேஷமுடையதாய், நவின்றி
டுசத்துவமாதி - சொல்லப்பட்ட சத்துவமுதலிய, திண்ணியமா
யாகுணமிலாது - சத்துவம் ரஜசு தமசு வென்னுந் தூலமாயாகு
ணங்களில்லாது, எல்லாஞ் செறிந்திடுமெனச்சிந்தை செய்வே
ன் - எல்லாவற்றையும் பிரவேசித்திருக்குமென்று சதாத்தியான
ஞ்செய்கின்றேன்—எ-று. (தா-ம்) அப்பியாசகாலத்திலும் இ
தை இவ்வாறு தியானிக்க வேண்டுமென்று நீ ருபதேசித்தபடி
தியானுநுசந்தானஞ்செய்கின்றேனென்றது. (ப-ம்.) எல்லாஞ்
செறிந்திடு மென்றதனுல் பிரமமுழுமுதுந் தன்னுற்பிரவேசிக்க
ப்பட்டிருக்கிறதென்றும் பொருள்கொள்க. (உஅ)

(அ-கை.) இவ்வனுசந்தானத்துடன் சுத்தகர்மவிதி வழு
வாது சாதகஞ்செய்து பிரமானந்தமடைய தக்கதென்கிருர்.

கன்மவிதியை வழுவாது கருதி யிவ்வா றப்பியாச
ர், துன்னு புருடன் மனமந்தச் சொருபந் தன்னி லயமா
கும், மன்னு மாத்ம பிரகாச முண்டாய் மாயுந் துக்க

சமுகங்கள், சொன்ன வாத்ம சையோகச் சுகமுண்டா கு மப்போது.

இ-ள். கன்மவிதியைவழுவாது - தான்செய்யவேண்டியசத்கர்மமார்க்கம்விடாமல், கருதியிவ்வாறப்பியாசம் - அறிந்து இந்தப்பிரகாரம் பழகுதலே, துன்னு புருடன்மனம் - பொருந்திய புருஷனது மனமானது, அந்தச் சொரூபந்தன்னி லயமாகும் - அந்தப் பிரமத்திலய மடையும், மன்னுமாத்மப் பிரகாசமுண்டாய் - நிலைபெற்ற ஆத்மானுபவமுண்டாகி, மாயுந்துக்கசமுகங்கள் - சகலதுக்கமு நிவர்த்தியாம், சொன்ன வாத்மசையோக - முற்கூறிய ஆத்மசையோகமாகிய, சுகமுண்டாகு மப்போது - சதானந்தமுண்டாகும்—எ-று. (௨௬)

இதுவுமது.

தன்னாற்சுவயமே யானந்த சத்தியான்மாவைத்தா னடைவன், பன்னு மெவ்வாறெனி லெனினும் பரமாஞா ஞனந்த மயந், துன்னும் பிரபு வேறிலே யானேதுகளில் பிரம சொரூபமென, மன்னுஞ் சுவாநுபவ முள்ளே வ யங்கக் குளிர்ந்து மகிழ்தருமே.

இ-ள். தன்னாற்சுவயமே - தானேதன்னால், ஆனந்தசத்தியான் மாவைத்தானடைவன் - ஆனந்தமயமான சத்தியாத்மபதந் தானடைவான், பன்னுமெவ்வாறெனில் - அஃதெங்ஙனங் கூறுவதென்னில், எனினும் பரமாஞாஞனந்தமயம் - என்னைவிட பிரம்மக்ஞான ஆனந்தாம்சம், துன்னும் பிரபுவேறிலே - பொருந்தியபிரபுவேறில்லை, யானேதுகளில்பிரமசொரூபமென - யானேபிரம்மசொரூபமென்று, மன்னுஞ் சுவாநுபவம் - நிலைபெற்ற சுவாநுபவம், உள்ளேவயங்கக்குளிர்ந்து மகிழ்தருமே - உள்ளத்தில் விளங்கும்படி வுப்சாந்தமாய்சுகிப்பன்—எ-று.(தா-ம்.) ஆத்மசையோகமென்பது சாட்சாத்கார மாதலென்று கருத்து.

(அ-கை.) இங்ஙனம் பரத்துவாஜர்கூறிய அனுபவத்தைக் கேட்டு வான்மீகமகாருஷி சந்தோஷமடைந்து அவ்வனுபவம் நிலைநிற்கும்பொருட்டு விட்டே அதையறியவேண்டும், விட்டவ னுக்கே அந்தமேலான ஞானபதங்கிடைக்கும் என்னுஞ்சுருதி யிற்கூறிய விடுகையாகிய சன்னியாசத்தை அவசியஞ்செய்ய வேண்டுமென் றுபதேசிக்கின்றார்.

நண்பவிச் சமுசா ரச்சுழ லதனி னலிதருகின்ற நீ
சமமாம், எண்டகு விஸ்ராந் திச்சுகங்கிரகத் திருந்தடை
தற் கரிதாகில், மண்டிய கருமமியாவையும் விடுத்து மா
த்தியாகி யாகியே மேலாய், விண்டவப்பிரம பதத்தில்
விக்ஷேபம் விளிதர விருப்பொடு மிருத்தி.

இ-ள். நண்ப? - ஓ சினேகிதா, இச்சமுசாரச்சுழலதனில்- இந்தச்சமுசாரமாகிய சக்கரத்தில், நலிதருகின்றநீ - துன்புறுகி ன்ற நீ, சமமாமெண்டகுவிஸ்ராந்திச்சுகம்-சமரசமாக வெண்ண ப்பட்ட ஒழிவுசுகத்தை, கிரகத்திருந்தடைதற்கரிதாகில்-இல்லற த்திலிருந்து பெறுதற்கருமையாயிருந்தால், மண்டியகருமமியா வையும் விடுத்து - மிகுந்தகன்மங்க ளெல்லாவற்றையும் விட்டு, மாத்தியாகியாகியே - சர்வபரித்தியாகியாயிருந்து, மேலாய்விண் டவப்பிரமபதத்தில்-மேன்மையாகக்கூறிய அந்தப்பிரம்மப்பதத்தி ல், விக்ஷேபம்விளிதர - சகபாவனைநீங்க, விருப்பொடுமிருத்தி-பி ரியமாயிருக்கக்கடவாய்—எ-று. (தா-ம்.) பிரமநிஷ்டனே அமிர் தமாந்தன்மையைப் பொருந்துகிருனென்னுஞ் சுருதிப்படி வே றுவியாபாரமின்றி பிரமத்தில்விருப்புற்ற சன்னியாசிக்கேமூலா க்கியானத்தோடு பிராந்தியழியுமாகையால் கருமங்களைவிட்டுபிர மத்தினிடமாய் விருப்புற்றிருக்கவேண்டுமென்றுகருத்து. வியா பாரம்-பிரவிர்த்திவிவகாரம். (௩௧)

(அ-கை.) இங்ஙனங்கூறிய வான்மீகிமுனிவரது உபதேசத்தைக்கேட்டுப் பரத்துவாஜர் சொல்லுகின்றார்.

அருள்புரி குருவே நீரொமக்கன்பா லளித்திடு மிந்தமாஞானம், தெருளுற முற்று முணர்ந்தனன் புந்திதெளிதர நின்மலமான, மருளு மிச்சமுசாரம் விடப்படலால் வளர்தரா நெடிதினிமாயும், பொருவரு பிரம சம்பன்ன ஞனேன் புரையறு முத்தனு மானேன்.

இ-ள். அருள்புரிகுருவே - கிர்பையுடைய குருமூர்த்தியே, நீரொமக்கன்பால் - நீரெம்மிடத்தன்புவைத்து, அளித்திடுமிந்தமாஞானம் - அனுக்கிரகஞ்செய்த இந்தஞானத்தை, தெருளுறமுற்றுமுணர்ந்தனன் - சந்தேகந்திரமுழுது மறிந்துக்கொண்டேன், புந்திதெளிதர நின்மலமான - புத்திதெளிந்து சுத்தமாயிற்று, மருளுமிச்சமுசாரம் விடப்படலால் - மயக்கமான இந்தச்சமுசாரம் நீங்கிவிட்டதால், வளர்தராநெடிதினிமாயும்-இனிவிர்த்தியாகாமல் ஒழிந்துபோம், பொருவருபிரம சம்பன்னனுனேன் - ஒப்பற்றபிரமசம்பத்துடையவனுனேன், புரையறுமுத்தனுமானேன்-களங்கமற்றசீவன் முத்தனுமானேன்—எ-று.(தா-ம்.) சமுசாரத்தை அறிந்துவிட்டவுடன் பிரமசம்பன்ன னுவனென்று சுருதியிற்கூறுதலால் அறிந்துவிட்டபின் எனக்குச் சமுசாரமில்லையென்று கருத்து. (ப-ம்.) சம்சாரம் கிரிசியசத்தியபுத்தி.

இதுவுமது.

ஞானியாஞ் சீவன்முத்த னயந்துசெய் கருமமியாது
மேனயந் தியற்றவேண்டும் விடுத்திட வேண்டுமேயோ
மானமார் பிரவிர்த்தந் தானோ மருவுறு நிவர்த்தமேயோ
தானிதை யிப்போ தைய சாற்றிட விரும்புகின்றேன்

இ-ள். ஞானியாஞ்சீவன்முத்தன் - ஞானவானுகிய சீவன் முத்தன், நயந்துசெய்கருமமியாது - விரும்பிச்செய்கின்ற கரும ங்களெவை, மேனயந்தியற்றவேண்டும் - மேலும்அவற்றைவிரு ம்பிச்செய்யவேண்டியதா, விடுத்திடவேண்டுமேயோ - விடவே ண்டியதா, மானமார்பிரவிர்த்தந்தானே - செய்யவேண்டுங்கால் நித்திய நைமித்திக காமியமென்னும் பிரவிர்த்தி விஷயமான கன்மமுழுது முன்போற்செய்யவேண்டியதா, மருவுநிவர்த்த மேயோ-காமியமல்லாத தத்தம் ஆசிரமத்துக்குவிதித்த நிவர்த்தி விஷயமான கன்மமாத்திரஞ்செய்யவேண்டியதா, தானிதை யிப்போதைய-ஐயனே அஃதின்னதென் றிப்போது, சாற்றிட விரும்புகின்றேன்-சொல்லும்படி பிரார்த்திக்கின்றேன்—எ-று.

(அ-கை.) இங்ஙனம் பரத்துவாஜர் வினவுக்கு வான்மீக மகாருஷி ஞானிகள் ஞானவிருத்த கருமங்களைவிடுத்து ஞானபூ மிகளின் பரிபாகமுறையே சத்கர்மங்களைச் செய்யவேண்டுமெ ன்றும், செய்யுமிடத்து பிராரப்தம் பலவிதமாதலால் அஃது பி ரவிர்த்தமென்றும், நிவர்த்தமென்றும், நிச்சயிக்கக்கூடாதென் றுங்கருதி உத்தரங்கூறுகின்றார்.

ஆதலாற்சகல கருமமும் விடுத்தே யான்மாவில்வி ருப்புற விருத்தல், தீதுசம்சாரச் சக்கரச்சுழறீர் செஷ ஞானேபாயமென் றியாமே, ஓதிய துணர்ந்து முழுட்சு வாநீயு முனுற்றிடுபோ தெவை தோஷ, பேதமுண்டா கா தவற்றினையாய்ந்து பிறழ்தரா தியற்றிடவேண்டும்

இ-ள். ஆதலாற் சகலகருமமும்விடுத்தே - ஆனதால் சகல கன்மங்களையும்விட்டு, ஆன்மாவில்விருப்புறவிருத்தல் - பிரமத் தில்விருப்புற்றிருப்பதே, தீதுசம்சாரச் சக்கரச்சுழறீர் - தீமையா

ன சம்சாரசக்கரத்திற் சுழலுதலை நீங்கப்பெறுகின்ற, செறிஞா னோபாயமென்றியாமே - பொருந்திய ஞானோபாயமென்று நாமே, ஓதியதுணர்ந்தும் - உபதேசித்ததையறிந்தும், முமூட்சுவா நீயும் - மோக்ஷேச்சையுடைய நீரும், உஞற்றிடுபோதெவை - செய்யுங்கால் எக்கருமங்கள், தோஷபேதமுண்டாகாது-சிரவணாதிகட்குவிரோதமின்றி சித்தவிக்ஷேபம் மலினமாந்தன்மை பாபம் முதலானகுற்றங்க ளுண்டாகாததோ, அவற்றினையாய்ந்து-அவைகளை ஆராய்ந்து, பிறழ்தராதியற்றிடவேண்டும் - பிசகாமல் செய்யவேண்டியது—எ-று. (கூச)

இதுவுமது.

மேலுமோ காம்யம் நிஷித்தவிக்ஷேபம் விரிவுறு கருமங்கள் கூடா, ஏலுமச்சீவன் மனோகுணம் விடுத்தே யிகல்கரணஞ் சமமாக, சாலு மப்பிரம குணத்தொடுங் கூடிச் சாந்தனாய் விளங்குறின் மூன்று, காலு மச்சர்வ வியாபகமான கவின்பிரபு வாய் நிறைகின்றான்.

இ-ள். மேலுமோ - இன்னுங்கூறுமிடத்து, காம்யம் நிஷித்தவிக்ஷேபம் - காமியகருமமும் நிஷேதிக்கப்பட்ட துஷ்கருமமும் சித்தவிக்ஷேபந்தரும் கருமமுமாகிய, விரிவுறுகருமங்கள் கூடா - விரிந்தகருமங்கள் செய்யக்கூடாது, ஏலுமச்சீவன் மனோகுணம்விடுத்தே - இயலுமந்தப்புருஷன் மனத்தின்குணங்களைவிட்டு, இகல்கரணஞ்சமமாக - மாறுபடுகின்ற இந்திரியங்களையடக்கிச்சமமாக, சாலுமப்பிரம குணத்தொடுங்கூடி-மேலான பிரமகுணங்களோடு கூடிக்கொண்டு, சாந்தனாய்விளங்குறின் - உபசாந்தனாயிருந்தால், மூன்றுகாலுமச் சர்வவியாபகமான - முக்காலமும் சர்வவியாபகமான, கவின்பிரபுவாய்நிறைகின்றான்-மேலானபிரபுவாகப் பூரணமாகின்றான்—எ-று, பிரமகுணங்க

ளாவன - நிறைவு ஆனந்தம் இரண்டின்மை நிர்மலநிராயிருக்கை சங்கமின்மை ஞானைக ரசமாந்தன்மைமுதலியன. (௩௫)

இதுவுமது.

தேக மிந்திரிய மனம் புந்தி யிவற்றிற் சிறந்த தன்னுதிய நான்கு, பாகமாங் கோசா தீதவானந்தம் பகரதிற் சிறந்தது பிரமம், ஆகுநானெனச் சீவாத்துமா தன்னில னுதினந் தியானமே புரிய, ஏகமாம் பிரம சொரூபான்ம ஞான மியைதர முத்த னாகின்றான்.

இ-ள். தேகமிந்திரிய மனம்புந்தியிவற்றிற் சிறந்தது - தேகம் இந்திரியங்கள் மனது புத்திஇவைகளுக்குமேலானது, (எதென்னில்) அன்னுதியநான்குபாகமாம் - அன்னமயமுதலிய நான்குபிரிவான, கோசாதீத-கோசங்களுக்குமேற்பட்ட, ஆனந்தம்-ஆனந்தமயகோசமாகும், பகரதிற்சிறந்தது-கூறியவதற்குமேற்பட்டது, பிரமம் - எவற்றிற்கு மதிஷ்டானமான பிரமமே, ஆகுநானென - நான்ஆனேனென்று, சீவாத்துமாதன்னி லனுதினந்தியானமேபுரிய - எப்போதும் சீவாத்துமாவானவன் தனக்குள் தியானஞ்செய்தால், ஏகமாம்பிரம சொரூபான்மஞானம் - அத்வைதமான பிரம்மசொரூபக்கியானம், இயைதரமுத்தனாகின்றான் - அடைந்து சீவன்முத்தனாகிறான்—எ-று. (௩௬)

இதுவுமது.

மருவிய கருத்தா கரண காரியமும் வருபோக்தா போக போக்கியமும், விரிவுறு ஞாதா ஞான ஞேயமுமாய் விளங்கு மூவகைத் திரிபுடியும், பிரிவுற விடுத்திங் கிவைக்கேதுவாகப் பேசுபாதிகளெலா நீங்கி, பெருகுறு சுகதுக்காதியும்விடுத்துப் பிறங்குறின்முத்தனாகுவனே.

இ-ள். மருவியகருத்தா கரணகாரியமும் - சேர்ந்தகர்த்தா செய்கைசெய்காரியம் இவையும், வருபோக்தாபோக போக்கியமும் - உண்டான போகிபோகம் போக்கியமிவையும், விரிவுறு ஞாதாஞான ஞேயமுமாய் - விரிவாகின்ற ஞாதா ஞானம் ஞேயமும் ஆகின்ற, விளங்குமூவகைத் திரிபுடியும் - தோன்றுகின்ற மூன்றுவிததிரிபுடியும், பிரிவுறவிடுத்து - நீங்கும்படிவிட்டு, இங்கிவைக்கேதுவாக - இங்கிவைகளுக்கேதுவாக, பேசுபாதிகளெலா நீங்கி - சொல்லப்பட்ட வுபாதிகளெல்லாமொழிந்து, பெருகுறுசுகதுக் காதியும்விடுத்து - பெரிதான சுகதுக்கங்களையும்விட்டு, பிறங்குறின்முத்தனாகுவனே - விளங்கினால் சீவன்முத்தனாவான்—எ-று. (௬எ)

இதுவுமது.

சீவனெப்போது சர்வபூதத்துஞ் செறியாத்ம ளுகிய தனையும், மேவுறத் தன்னுட் சர்வமாம்பூதம் வேறுபாடறக் காணின் முத்தன், தாவுறுஞ் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தித் தானமூன்றும் விடுத் தப்பால், ஆவதாந் துரியானந்தமாபதத்தையடைந்திடின் முத்தனாகுவனே

இ-ள். சீவனெப்போது - சீவன்எப்போது, சர்வபூதத்தும் - சகலபூதங்களிலும், செறியாத்மனாகிய தனையும் - நிறைந்தவாத்மாவாகிய தன்னையும், மேவுறத்தன்னுள் - தனக்குள் பொருந்தியதாய்; சர்வமாம்பூதம் - சர்வபூதங்களும், வேறுபாடறக்காணின்முத்தன் - பிரிவின்றிக்காணப்பெற்றால் சீவன்முத்தனும், தாவுறுஞ்சாக்கிரம் - எழுகின்றசாக்கிரம், சொப்பனஞ்சுழுத்தி-சொப்பனம் சுழுத்தியுமென்கின்ற, தானமூன்றும் விடுத்தப்பால்-மூன்றவஸ்தையும்விட்டுமேல், ஆவதாந்துரியானந்தமாபதத்தை -

ஆனந்தமாகிய துரியஸ்தானத்தை, அடைந்திடின் முத்தனுருவ னே - சேர்ந்தால் சிவன்முத்தனுவான்—எ-று. (கஅ)

இதுவுமது.

மேவு மிச்சீவன் றனக்குள சாக்ரம் விரிதரு சொப் பனமூலம், ஆவதாகிய வாசனையொடு கரும மஞ்ஞான நித்திரையாதி, ஓவற நீங்கு சுகாத்மிகையாகு முயர்தரு துரியம தென்னும், ஏவமில்பரம மாயிருந்திடுத லிசை யோக முடிவான சமாதி.

இ-ள். மேவுமிச்சீவன்றனக்குள - பொருந்தியவிந்தச் சீவ னுக்குண்டான, சாக்ரம்விரிதரு சொப்பனமூலம் - சாக்கிரம் சொப்பனம் சுழுத்தியவத்தைகளும், ஆவதாகிய வாசனையொடு - அவற்றிற்கேதுவான வாசனையோடு, கரும மஞ்ஞான நித்திரை யாதி-கன்மம் அஞ்ஞான நித்திரை முதலியவை, ஓவறநீங்கும் - முற்றுநீங்கிய, சுகாத்மிகையாகும் - ஞானனந்த சொரூபையா கிய, உயர்தருதுரியமதென்னும் - மேலான துரியமென்கின்ற, ஏவமில்பரமமாயிருந்திடுதல் - களங்கமற்றபிரம்மமாகவிருத்தல், இசையோகமுடிவான சமாதி - கூறுகின்ற முடிவான சமாதி யாம்—எ-று. (கக)

இதுவுமது.

மேன்மையார் சுகானு பவமதுண்டாகும் விவேகி யாம் புருடர்க்கு மனதின், பான்மை நீங்கியபோ ததற் குவேருகப் பார்த்திடற் கொன்றுமின்மையினுல், மான் மிய சாந்தக் கைவல்ய வமிர்த வாரியின் மூழ்கினீ வதிவா ய்,என்மிகுபேத ஞானமா முதலை யியங்குவர்க் கடலலை யமிழ்தல்.

இ-ள். மேன்மையார்-மேன்மைபொருந்திய, சுகானுபவமு துண்டாகும் - ஆனந்தானுபவமுண்டாகும், விவேகியாம்புருடர்க்கு - விவேகமுள்ள புருட்ருக்கு, மனதின்பான்மைநீங்கியபோது - மனத்தன்மை நீங்கியபோது, அதற்குவேருக - அஃதின்றி வேருக, பார்த்திடற்கொன்று மின்மையினுல் - காணுதற்கொன்றுமில்லையாதலால், மான்மியசாந்தக்கைவல்ய - மகத்தானசாந்தமோக்ஷமென்கின்ற, அமிர்தவாரியின் மூழ்கி நீ வதிவாய் - அமிர்தசமுத்திரத்தில் மூழ்கியிருக்கக்கடவாய், என்மிகுபேதஞானமாமுதலை - என்னேபேதஞானமாகிற முதலைகள், இயங்குவர்க்கடலலையமிழ்தல்-சஞ்சரிக்கின்றவுப்புக்கடலலைகளில் மூழ்கிப்போகின்ருய்—எ-று. (தா-ம்.) அந்த பிரமத்தில் விசிராந்தி பெற்றிருக்கு முனக்கு பேதஞானப்பிரசத்தியில்லை ஆதலால் கன்மபேதமாகிற உப்புக்கடலில் மூழ்கிற பிரசத்தி தூரத்திற்போய் விட்டதென்று கருத்து. (சŪ)

(அ-கை.) முன்சொன்ன ஈஸ்வரவுபாசனையைச்செய் அவரநுக்கிரகத்தால் யான் உனக்கு வசிட்டோபதேசப்படிசொல்லிய ஞானமார்க்கத்தினுலாவது, யோகமார்க்கத்தினுலாவது, தத்துவஞானமுண்டாகும்போது ஒன்றையுணர்ந்தால் எல்லாமுணர்ந்ததாகுமதனுல் சகலசந்தேகங்களுக்கு மூலமான அஞ்ஞானமழிந்தால் விசிராந்தியுண்டாமென்றுகூறி முடிக்கின்ருர்.

அனுக்கிரகநிமித்தஞ் சகத்குருவாக வருளுருக்கொளும் பரமேசன், தனைப்பரமாக வுபாசனைசெய்யச் சாற்றிய வசிட்டோபதேசம், அனைத்தையுமுறையே பரத்வாஜனைமந்த வறைந்தனனின்பொருட் டதனை, மனத்துற ஞானமல தியோகமார்க்க மதித்து நிச்சயித்திடக் கடவாய்.

இ-ள். அனுக்கிரகநிமித்தம் - அனுக்கிரகார்த்தமாக, சகத்குருவாக - லோககுருவாக, அருளுருக்கொளும்பரமேசன் - கிர்பாவடிவங்கொண்ட பரமேஸ்வரர், தனைப்பரமாகவுபாசனைசெய்ய - அவரோகதியாக வுபாசனைசெய்யும்பொருட்டு, சாற்றியவசிட்டோபதேசம் - கூறப்பட்ட வசிட்டரதுபதேசம், அனைத்தையுமுறையே - யாவற்றையுங்கிரமமாக, பரத்வாஜமைந்த - புத்திரனன பரத்துவாஜனே, அறைந்தனனின்பொருட்டு - உன்பொருட்டாக யான்கூறினேன், அதனைமனத்துற - அவற்றைமனதிற்பொருந்தும்படி, ஞானமலயோகமார்க்கம் - இந்தஞானமார்க்கத்தினுலாவது யோகமார்க்கத்தினுலாவது, மதித்து நிச்சயித்திடக்கடவாய் - நிச்சயமாகத் தெளிந்தறியக்கடவாய்—எ-று.

(அ-கை.) அங்ஙனம் சாஸ்திரம், குருபதேசம், சுவாநுபவம் இம்மூன்று மொத்து நிச்சயமுண்டாம்பொருட்டு அடிக்கடிஅப்பொருளைச் சிந்திப்பதாகிய பராமரசமும், வாக்கியத்தை ஆவிர்த்திசெய்வதாகிய அப்பியாசமும் அவசியம் வேண்டுமென்கின்றார்.

சாத்திர விசாரங் குருவுபதேசந் தனதநுபவ வாக்கியார்த்தம், நேத்திரமாக வப்பியாசஞ்செய்ய நிலைதரு சகலசித்தியுமாம், சாத்தியவேத நியதியீ தெல்லாச் சங்கற்பவிகற்பமும் விடுத்து, பாத்தியமாக நிரந்தரம் பழகிப் படர்மன நிலைபெறக் கடவாய்.

இ-ள். சாத்திரவிசாரம் - சுருதிவிசாரணையும், குருவுபதேசம் - குருவுபதேசத்தையும், தனதநுபவவாக்கியார்த்தம் - தனக்கநுபவமான மகா வாக்கியார்த்தங்களையும், நேத்திரமாகவப்பியாசஞ்செய்ய - ஒத்து அப்பியாசஞ் செய்துவந்தால், நிலைத

ருசகல சித்தியுமாம் - நிலையானசகல சித்திகளுமுண்டாகும், சாத்தியவேதநியதியீது - கூறியவேதத்தின் கட்டளையிதுவாகும், எல்லாச்சங்கற்ப விகற்பமும்விடுத்து - சகலவிகற்ப சங்கற்பங்களும்நீங்கி, பாத்தியமாக நிரந்தரம்பழகி - உரிமையாகவெப்போதும் பழக்கஞ்செய்து, படர்மனநிலைபெறக்கடவாய் - அலையுமனத்தை நிலைபெறச்செய்வாயாக—எ-று. (சஉ)

(அ-கை.) பரத்வாஜர் குருவால் கரதலாமலகம்போல உபதேசிக்கப்பட்டு சுவாநுபவம்பெற்று விளங்கி இராமமூர்த்தி சமாதியைவிட்டு விவகரித்தலை வினவுகின்றார்.

சுவாநுபவமா யான்மாவிற் றுரியயோக நிலையடைந்தே, உவாவிற் குளிர்ந்த சீராம னுலகநோக்கினெழுந்ததெவ்வா, றவாவின் ஞானியானவவ னவனிவிவகா ரங்கள்செயும், தவாத நெறியே துணைத்தருளுந் தனேயானுணர்ந்து சரிப்பதற்கே.

இ-ள். சுவாநுப்வமா யான்மாவில் - (ஓ குருமூர்த்தியே) பிரமஸ்வரூபத்தில் சுவாநுபவமாக, துரியயோகநிலையடைந்தே - உபாதியற்றமேலான துரியயோகநிலைபெற்று, உவாவிற்குளிர்ந்த சீராமன் - பூரணச்சந்திரன்போற் குளிர்ச்சியடைந்த ஸ்ரீராமர், உலகநோக்கினெழுந்ததெவ்வாறு - உலகவிவகாரத்தில் வெளிப்பட்டெழுந்ததெப்படி, அவாவின்ஞானியானவவன் - இச்சையற்ற ஞானவானுகியஅவர், அவனிவிவகாரங்கள்செயும் - லோகவிவகாரங்கள்செய்கின்ற, தவாதநெறியே துணைத்தருளும் - பிறழாதமார்க்க மெவ்வண்ணமதைக் கிருபைசெய்து கூறக்கடவீர், தனேயானுணர்ந்து சரிப்பதற்கே - யானுமதையறிந்து நான்சமாதிநீங்கியகாலத்து விவகரிப்பதற்கு—எ-று. (சங)

(அ-கை.) வான்மீகமுனிவர் பின்பு விஸ்வாமித்திரருக்கும் வசிட்டருக்கும்நடந்த சம்பாஷணையைக் கூறுகின்றார்.

மகத்தாஞ் சாதுமனமுடைய மலர்க்கணிராமன் பரான்மாவில், மிகத்தானெக்கமாக்கலந்து விளங்குங்கால் விஸ்வாமித்திரன், சுகத்தவசிட்ட மகாருஷியைத் துதித்துநோக்கி மொழிகின்றான், இகத்தின் மகானுபாவனொன விசைக்கத்தகுமா குருநீரோ.

இ-ள். மகத்தாஞ்சாதுமனமுடைய - மேலானசாந்தமான மனதையுடைய, மலர்க்கணிராமன் பரான்மாவில் - பத்மலோசனனான ஸ்ரீராமர் பரமாத்மசுவரூபத்தில், மிகத்தானெக்கமாக்கலந்து விளங்குங்கால் - முழுதுமைக்கமாகக்கலந்து விளங்கியபோது, விஸ்வாமித்திரன் - விஸ்வாமித்திரமுனிவர், சுகத்தவசிட்டமகாருஷியை - ஆனந்த மடைந்திருக்கின்ற வசிட்டமகாருஷியை, துதித்துநோக்கி மொழிகின்றான் - தோத்திரஞ்செய்துநோக்கிச்சொல்லுகின்றார், இகத்தின்மகானுபாவனொன - இவ்வுலகததில் மகிமையுடையவராக, இசைக்கத்தகுமாகுருநீரோ-சொல்லும்படியான கீர்த்தியுள்ள ஆசாரியர்நீரோயாம்—எ-று. (சுசு)

இதுவுமது.

மூனந் தனையடுத்த சீடனதுள்ள முதிர்தரச் சத்திபாதத்தால், கனமுறு முத்திக் கனாயினி லேற்றக் கண்டனங் குருத்துவ நின்பால், பினமறு நோக்கம் பரிசநல்லுணாயாற் பெரிது சீடன் றனதுடலில், மனனுறச் சிவமாப் பிரவேசமுண்டாக்கு மான்மிய முடையநீர்குருவாம்.

இ-ள். முனந் தனையடுத்த - முன்பு தன்னையடுத்திருந்த, சீடனதுள்ளம் - சிஷ்யனுடைய மனது, முதிர்தரச் சத்திபாதத்தால் - பக்குவமாக சத்திபாதவசத்தால், கனமுறுமுத்திக்கரையினிலேற்ற - மேலான மோக்ஷத்துறையி லேறும்படிசெய்யும், கண்டனங்குருத்துவநின்பால்-குருத்திறத்தை உம்மிடத்தில்கண்டறிந்தோம், பினமறுநோக்கம்பரிச நல்லுரையால் - பிரிவின்றிய நோக்கம் பரிசம் நல்லுபதேசமிவற்றால், பெரிது சீடன்றனதுடலில் - மிகவுஞ் சிஷ்யனது தேகத்தில், மனனுறச்சிவமாப்பிரவேசமுண்டாக்கும் - மனதிற்பொருந்த மகாசிவப்பிரவேசத்தையுண்டாக்குகின்ற, மான்மியமுடையநீர் குருவாம்-மகாத்மியமுடைய நீரே குருவென்றுசொல்லப்படும்—எ-று. (சரு)

இதுவுமது.

இப்பெருந் தகையா மிராமனும் விசுத்த னியல்பாக விரக்த்தியு முடையோன், ஒப்பில் விசிராந்தி விருப்பமாத்திரத்தா லுயர்விசாரணையினு னிலையைச்,செப்பமாயடைந்தான் குருவுபதேசஞ் செயுந் தத்வ போதமுண்டாதற், கப்பெருஞ்சீட னறிவுகாரணமா மரிது பக்குவமிலாதவர்க்கே.

இ-ள். இப்பெருந்தகையா மிராமனும் - இப்பெரும்பான்மையுடைய ஸ்ரீராமரும், விசுத்தனியல்பாக விரக்த்தியுமுடையோன் - பரிசுத்தமான இயல்பானவிராகமுடையவர், ஒப்பில் விசிராந்தி விருப்பமாத்திரத்தால் - மேலான விசிராந்தியைமாத்திரம் விரும்பினவராய், உயர்விசாரணையினால் - மேலான சாஸ்திரவிசாரணையினாலே, நிலையைச் செப்பமா யடைந்தான் - நிலையானபதத்தைச் செவ்விதாகவடைந்தார், குருவுபதேசஞ்செயுந் தத்வபோதமுண்டாதற்கு - குருவுபதேசஞானமடைதற்கு, அப்

பெருஞ்சேட்னறிவுகாரணமாம் - அந்தப்பக்குவமுள்ள சிஷியன றிவேசாரணமாம், அரிதுப்க்குவமிலாதவர்க்கே - அபக்குவர்களுக்கு கிடைப்பதரிதாகும்—எ-று. (சகூ)

(அ-கை.) நல்ல சிஷியனிடத்தில் உபதேசித்த சாஸ்திரத்திற்குப் பயன் இங்குத்தானே காணப்படுமென்கின்றார்.

பிரத்தியக்ஷமதா மிந்தமாஞானம் பிரையோசனங் குருசிஷ்யர் தமக்கு, விரித்திடவேண்டி லிவ்விருவர்களும் மிக்கசால் புடையரா யிருப்பின், தரித்திடற்குரிய கைவல்யஞானந் தரும் புருஷார்த்தங்களனைத்தும், பொருத்தமாயடைதற் குரியராகுவர்மேற் புகன்றிடி லொப்பிவர்க் கியாரோ.

இ-ள். பிரத்தியக்ஷமதாமிந்தமாஞானம் - திஷ்டாந்தமாயிருக்கின்ற இந்தப்பரமஞானம், பிரையோசனங்குருசிஷ்யர்தமக்கு-குருவுக்கும் சிஷ்யனுக்கும்பலனுகும், விரித்திடவேண்டில்-இன்னும் விரிவாகக் கூறவேண்டுமானுல், இவ்விருவர்களுமிக்கசால் புடையராயிருப்பின் - இந்தயிருவரும் மிகுந்தசான்றாண்மையுடையவர்களானுல், தரித்திடற்குரிய கைவல்யஞானம் - பெறத்தக்கபிரம்மக்கியானத்தை, தரும்புருஷார்த்தங்களனைத்தும்-கொடுக்கின்ற புருஷார்த்தங்களெல்லாம், பொருத்தமாயடைதற்குரியராகுவர் - பொருந்தும்படி யடையத்தக்கவராவார்கள், மேற்புகன்றிடி லொப்பிவர்க்கியாரோ - பின்னுங் கூறுங்கால் இவர்கட்குச் சமானமற் றியாவருள்ளார்—எ-று. (சஎ)

(அ-கை.) விஸ்வாமித்திரர் இவ்வாறு வசிட்டரைப்புகழ்ந்து பிரகிர்தத்திற் செய்யவேண்டியதைக் கூறுகின்றார்.

தவமிகுவசிட்ட முனிவரோயெம்பாற் றயைபுரிந் தி ராமனைச் சமாதி, இவணகன் றிட நீரொழுப்பிட வேண்டு மேனெனி னிலையானபதத்தில், பவமற நீரோ பரிணமித் துடையீர் பார்த்திடு முலககா ரியத்தில், நவமுற யாங்க ள் பிரவேசமாய் முயன்று நடித் திடுகின்றன மதனால்.

இ-ள். தவமிகுவசிட்டமுனிவரோ - மேலான தபமுடைய வசிட்டமகாருஷியே, எம்பாற்றயைபுரிந்து - எங்கள்பேரில் தய வுவைத்து, இராமனைச்சமாதி இவணகன்றிடநீ ரொழுப்பிடவே ண்டும்-இராமர்சமாதியைவிட்டு இப்போதெழும்படி செய்யவே ண்டியது, ஏனெனில்-ஏனென்றால், நிலையானபதத்தில் பவமற நீரோபரிணமித்துடையீர்-நிலையான சுத்தபதத்தில் நீர் தான் பந்த மின்றியமைதிபெற்றிருக்கின்றீர், பார்த்திடு முலககாரியத்தில்-தி ரிசியமான வுலகவிஷையத்தில், நவமுற்யாங்கள் பிரவேசமாய் முயன்று - பலவாறுபிரவேசித்து முயற்சியோடும், நடித்திடு கின்றன மதனால் - விவகாரஞ் செய்கின்றோமாதலால்—எ-று,

இதுவுமது.

யாதுகாரியத்தை நாடியா னிங்ஙனடைந்தனன் றச ரதவரசன், ஏதமிலென்னுற் பிரார்த்திக்கப்பட்ட தெந்த மாயாகசித்தியதாம், நீதமாமந்தக் காரியந்தன்னை நினைந் துயர்பெருந்தகை முனியே, ஆதரவோடு மிராமனையெ ழுப்பு மவதரித்துள பயனடைய.

இ-ள். யாதுகாரியத்தை நாடியானிங்ஙனடைந்தனன்- எ து விஷையத்தைநோக்கி யானிங்குவந்தேனோ, தசரதவரசன் ஏதமிலென்னுற் பிரார்த்திக்கப்பட்டது - குற்றமற்ற வென்னால் தசரதமகாராஜன்பிரார்த்திக்கப்பட்டது, எந்தமாயாக சித்தியதா

ம் - எந்தமகத்தான யாகசித்தியாகும், நீதமாமந்தக் காரியந்த ன்னை - விதியானவந்த விஷையத்தை, நினைந்துயர்பெருந்தகை முனியே-மேன்மையுடைய முனிவரோ ஆலோசித்து, ஆதரவோ டுமிராமனையெழுப்பும் - அன்போடு இராமனை சமாதியினின்று ம் எழச்செய்யும், அவதரித்துளபயனடைய - அவர் அவதாரஞ் செய்ததற்குப் பயனுண்டாகும்படி—எ-று. (சகூ)

(அ-கை.) மேல் இராமாவதாரத்திற் செய்யுங்காரியங்களைக் கூறுகின்றார்.

தேவர்கடுயரந் தீர்ந்திடுமாறு சித்தவாச்சிரமத்தில் வந்தே, மாவிராமன்று னரக்கரையழிப்பான் மற்றகலி கைசாப மொழிப்பான், ஏவுறுமந்தக் கோதண்டந்தன் னையிறுத்தபின் சனகபுத்திரியாம், மாதுசீதையினை யுல கெலாம்போற்ற மணஞ்செயப் போகின்றான் முனியே.

இ-ள். தேவர்கடுயரந்தீர்ந்திடுமாறு - தேவர்களது துன்பந் தணிங்கும்படி, சித்தவாச்சிரமத்தில்வந்தே - நமதுசித்தாச்சிரம த்துக்குவந்து; மாவிராமன்றனரக்கரையழிப்பான் - மகத்தான விந்தராமரோ இராக்கதரைவென்றுசெயிப்பார், மற்றகலிகைசாப மொழிப்பான் - அகலிகைக்குமுன்புண்டானசாபத்தைநீக்குவா ர், ஏவுறுமந்தக் கோதண்டந்தன்னை - பாணப்பிரயோகஞ்செ ய்யும் கோதண்டத்தை, இறுத்தபின் - ஒடித்தபின்பு, சனகபுத்தி ரியாமாது சீதையினை - சனகமகாராஜன் புத்திரியான சீதாதே வியை, உலகெலாம்போற்ற - உலகங்களிலுள்ளோர்துதிசெய்ய, மணஞ்செயப்போகின்றான் முனியே - ஓ? வசிட்டமுனிவரோ திருக்கலியாணஞ் செய்வார்—எ-று. (ரு0)

இதுவுமது.

மங்கலக் கோலத்துடன் வருநெறியில் வாதுசெய்
பரசிராமன்றன், துங்கமாகதியைத் தடுத்தபின் றனது
தொல்பிதுர்பிதாமக ராச்சியம், தங்கியங் ககன்று சீவன்
முத்தமதாய்த் தளர்பய மாசையும் விடுத்தே, அங்குறு
வன்வா சந்தனிற்றண்ட காரண்ய விருடியர்க் கன்பாய்.

இ-ள். மங்கலச்கோலத்துடன் வருநெறியில் - கலியாண
க்கோலத்தோடும் வருகின்ற மார்க்கத்தில், வாதுசெய்பரசிராம
ன்றன் - வாதாடியபரசிராமரது, துங்கமாகதியைத்தடுத்தபின்-
பரலோககதியை விலக்கியபின்பு, தனதுதொல் பிதுர்பிதாமகரா
ச்சியம் - தனதுதந்தை பாட்டன்மார் பரம்பரையாய்வந்த இராச்
சியத்தில், தங்கியங்ககன்று - சிலகாலமிருந்து அங்஑னம்விட்டு,
சிவன்முத்தமதாய்த் தளர்பயமாசையும்விடுத்து-சீவன்முத்தராக
பயம் ஆசை யிரண்டும்விட்டு, அங்குறுவனவாசந்தனில் - அவ
ண்செய்தவனவாசத்தில், தண்டகாரண்ய விருடியர்க்கன்பாய் -
தண்டகாரண்ய விருஷிகளுக்கு அன்புடையவராக—எ-று.(௫௧)

இதுவுமது.

அரக்கரை வதஞ்செய் தானபின்தீர்த்த மனந்தமு
ண்டாக்குவ னதனால், தரைக்கணோர் சகல பிராணிகடா
மே சத்கதியடைதருஞ் சீதை, பிரிந்திடக் கொடுபோஞ்
சஞ்சலமதனாற் பெரிதிராவணாதியர் வதஞ்செய், திரத்த
ன முலகின் மாதரிச்சையுளோர் செறிந்திடு மெளிமை
யும் விளக்கும்.

இ-ள். அரக்கரை வதஞ்செய்தானபின் - இராக்ஷசாளைவ
தைசெய்தபின்பு, தீர்த்தமனந்தமுண்டாக்குவன் - புண்ணியதீர்

த்தங்கள்பலவுண்டாக்குவார், அதனால் தனாக்கனூர் சகலபிரா ணிகடாமே சத்கதியடைதரும் - உலகத்திலுள்ள சீவர்கள் நற்க தியடைவார்கள், சீதைபிரிந்திடக்கொடுபோஞ்சஞ்சலமதனால் - சீதாதேவியைவிட்டுத் தானீங்கும்படி இராவணன் கொண்டு போன விதனத்தால், பெரிதிராவணாதியர்வதஞ்செய் திரத்தனு ம் - மிகுதியானவவ்விராவணன் முதலானவர்களை வதைசெய் து செயம்பெற்று, உலகின்மாதரிச்சையுளோர் - உலகத்தில்பெ ண்ணாசையுடையோர், செறிந்திடு மெளிமையும்விளக்கும் - அ டைகின்றதாழ்வையும் யாவருமறிந்து நடக்க விளக்கஞ்செய் வார் —எ-று. (கூஉ)

இதுவுமது.

வானரப்படைகள் யுத்தத்தின்மாய வருந்தியிந்திர ன்றரும் வரத்தால், ஆனவ ருயிர்பெற் றிடப்புரிந்திடுவா ரக்கினிப் பிரவேசத்தினாலே, மானவச்சீதை தனைப்பரி சுத்தம் வாய்ந்திட வுலகவர் மதிக்க, மேன்மையார் தம து புகழ்தரு மொழுக்கம் விளங்குற விவகாரம்புரிவார்.

இ-ள். வானரப்படைகள் யுத்தத்தின்மாய - வானரசேனை கள் சண்டையின்மடிந்து போனதால், வருந்தி யிந்திரன்றரும்வ ரத்தால் - துன்புற்று இந்திரன்கொடுத்தவரத்தினால், ஆனவருயி ர்பெற்றிடப் புரிந்திடுவார் - அவ்வானரங்கள் சீவிக்கும்படி செய் வார், அக்கினிப்பிரவேசத்தினாலே - தீயிற்குளித்தெழுதலினால், மானவச்சீதை தனைப்பரிசுத்தம் வாய்ந்திட - மேன்மையான சீ தாதேவி விசுத்தமடைதலினால், உலகவர்மதிக்க - உலகிலுள்ளா ர் துதிக்கத்தக்கதாய், மேன்மையார்தமது புகழ்தருமொழுக்கம்- மேலான தமது கீர்த்திமார்க்கம், விளங்குற விவகாரம்புரிவார் - பிரகாசிக்கும்படி இராச்சியவிவகாரம்செய்யப்போகின்றார்-எ-று.

(அ-கை.) ஸ்ரீராமர் சீவன்முத்தராயிருந் தரசாட்சிபெற்று கர்மவிதி வழுவாது நிக்கிரக அநுக்கிரகஞ் செய்வரென்கின்றார்.

ஆசைதீர் சீவன் முத்தராயிருந் தபிஷேகஞ்செ
ய்துகொண் டரசாய், மாசறுமனத்தா லிராச்சியபார ம
ருவுங்கன் மாதிகாரிகளாம், பேசியவுலகோர் கதிபெறு
மாறு பிறழ்தராக் கருமகாண்டியராம், ஏசறுஞானங் க
ருமமென் றிரண்டு மேன்றவர் கதிபெறத் தரிப்பார்.

இ-ள். ஆசைதீர்சீவன் முத்தராயிருந்தும் - அவாவின்றிய சீவன்முத்தராயிருந்தாலும், அபிஷேகஞ்செய்துகொண்டரசாய்- பட்டாபிஷேகஞ் செய்துக்கொண்டு அரசனாகி, மாசறுமனத்தால் - களங்கமற்றமனதினால், இராச்சியபாரமருவும் - இராச்சியாதிகாரத்தைப் பொருந்துவார், கன்மாதிகாரிகளாம் - கர்மானுஷ்டானிகளான, பேசிய வுலகோர் கதிபெறுமாறு - கூறப்பட்ட சனங்கள் கதியடையும்படி, பிறழ்தராக்கருமகாண்டியராம்-கருமகாண்ட விதியுடையவராவார், ஏசறுஞானங் கருமமென் றிரண்டும் - குற்றமற்ற ஞானம் கருமமென்னு மிரண்டும், ஏன்றவர்கதிபெறத் தரிப்பார் - அவ்வவற்றிற்குரியவர்கள் கதியடையும்படி தாமே யவ்விரண்டையு மனுஷ்டித்துக்காண்பிப்பார்— எ-று. இங்கு ஞானமென்பது ஈஸ்வரவுபாசனே. (ருச)

இதுவுமது.

இவ்வுலகத்திவ் விராமனே யிப்போ தெவர்தரி சன
ஞ்செயப் பெறுவார், செவ்விதிற்றியானம் பின்புசெய்ப
வருஞ் சீர்த்தியைக் கேட்பவர் தாமும், திவ்விய மகிமை
போதிக்கப் படுவார் தெளிதரத் தம்மையெப் போதும்,

அவ்வியமின்றி யடைந்திடப் பெறுவா ரியாவர்க்கு மரு
ள்செய்வர் முத்தி.

இ-ள். இவ்வுலகத்திவ் விராமனை யிப்போது-இந்தவுலகத்தில் இப்போது இந்தராமனை, எவர்தரிசனஞ்செயப்பெறுவார்-யாவர் தரிசனஞ்செய்யக் கிடைக்கின்றவர்களோ, செவ்விதிற்றியானம்பின்பு செய்பவரும்-பிற்காலத்தும் நன்முகத்தியானஞ்செய்பவர்களும், சீர்த்தியைக் கேட்பவர்தாமும் - இவரதுபிரபாவத்தை வினவுகின்றவர்களும், திவ்வியமகிமை போதிக்கப்படுவோர்-இவரது மேலானமகத்துவத்தை பிறராற்றெரிந்துக்கொள்பவர்களும், தெளிதரத் தம்மையெப்போதும் - சதாதம்மைத் தியானத்தாற்கண்டு, அவ்வியமின்றி யடைந்திடப்பெறுவார் - நிற்சலமனதா யடையப்பெற்றவர்களும், யாவர்க்கு மருள்செய்வர்முத்தி - இத்தன்மையரான பக்தசனங்களுக்கெல்லாம் முத்திகொடுப்பார்—எ - று. (ருரு)

(அ-கை.) இராமாவதாரத்தில் நடக்கப்போகின்ற நிக்கிரக அநுக்கிரக கிர்த்தியங்களைக்கூறி சபையிலுள்ளோர் அவரைத் தொழும்படி கூறுகின்றார்.

வான்புகழ் புருஷோத் தமராமச்சந்திர வள்ளலார்
மூன்றுல கவர்க்கும், தான்மகி ழெனக்கு மிட்டமாமி
வையேதயையொடு நிறைவேற்றத்தக்க, பான்மையவெ
ன்னப் புகன்றந்தச் சபையைப் பார்த்திவணிருந்துளோ
ர்யாரும், மேன்மையா ரிவரை நமஸ்காரஞ் செய்மின்
வேண்டுசித் திகளெலாம் வசமாம்.

இ-ள். வான்புகழ்புருஷோத் தமராமச்சந்திர வள்ளலார் - மேலான துதிபெற்ற புருஷோத்தம ராமச்சந்திர தயாளுவான

வர், மூன்றுலகவர்க்கும்-திரிலோகத்துள்ளோருக்கும், தான்மகி ழெனக்கும் - தம்மாலன்பு செய்யப்பட்டவெனக்கும், இட்டமா மிவையே - விருப்பமான விவைகளே, தயையொடு நிறைவேற் றத்தக்க - தயவோடு நிறைவேற்றவேண்டிய, பான்மைய வெ ன்னப்புகன்று-செயல்களிவையென்றுகூறி, அந்தச் சபையைப் பார்த்திவணிருந்துளோர்யாரும் - (விஸ்வாமித்திரர்) அந்தச்சபை யைப்பாராது இங்கிருக்கின்றயாவரும், மேன்மையாரிவனை நம ஸ்காரஞ்செய்மின் - மேலான இவ்விராமனை நமஸ்காரஞ்செய் யுங்கோள், வேண்டு சித்திகளெலாம்வசமாம்-உங்களுக்கு விருப் பமான சகல சித்திகளும் வசப்படுமென்றுகூறி மேலும்—எ-று.

வேறு சாதனமொன் றின்றியே நுமக்கு வேண்டி ய ஜெயமெலா முண்டாம், தேறிய நும்முள் யாதொருபு ருஷன் சிறந்திடு மிந்தராமனைப்போல், ஆறியசீவன் மு த்தனாய் விகற்ப மகன்றிடு சமாதியிலமர்ந்து, கூறும் வி சிராந்தி யடைந்திடப் பெற்றோன் குறைவிலானந்தத்தி ல் வாழ்க.

இ-ள். வேறுசாதனமொன்றின்றியே - மற்றுவேறொருசகாயமுமில்லாமலே, நுமக்கு வேண்டியசெயமெலாமுண்டாம்- விரும்பிய ஜெயமெல்லாமடைவீர்கள், தேறிய நும்முள் யாதொருபுருஷன் - தெளிவுடைய வுங்களுக்குள்ளே யாதொருபுருஷன், சிறந்திடுமிந்த ராமனைப்போல் - சிரேஷ்டமான இந்தராமனைப்போல், ஆறிய சீவன்முத்தனாய் - குளிர்ந்த சீவன்முத்திபெற்றவராய், விகற்பமகன்றிடு சமாதியிலமர்ந்து - நிருவிகற்பசமாதியில் நின்று, கூறும் விசிராந்தி யடைந்திடப்பெற்றோன்-சொல்லப்பட்ட விசிராந்திசுகம்பெற்ற அவன், குறைவிலானந்தத்தில்வாழ்க - பூர்ணானந்தத்தில் வாழக்கடவன்—எ-று. (நள)

(அ-கை.) இவ்வாறு விஸ்வாமித்திரர் சொல்லிக்கொண்டு வந்ததைக்கேட்டபின் அங்கு நடந்ததை வான்மீகமகாருஷி எடுத்துச் சொல்கின்றார்.

இவ்வகைவிஸ்வா மித்திரமுனிவ னிசைத்தவை ய
ன்பொடுங்கேட்டு, செவ்விய சித்தர்யோ கீந்திராகத் தி
கழ்வசிட்டாதியங் கியாரும், எவ்வமி லிராமன் வருஞ்ச
ரிதத்தை யினிதுறக் கேட்டமையாலே, திவ்விய சரணு
ம் புயப்பொடிதன்னிற் சிந்தையுமன்பும்வைத் தனரோ.

இ-ள். இவ்வகை - இந்தப்பிரகாரம், விஸ்வாமித்திரமுனிவனிசைத்தவை-விஸ்வாமித்திரமுனிவர் சொல்லிக்கொண்டுவந்ததை, அன்பொடுங்கேட்டு - அன்புடன்கேட்டு, செவ்விய சித்தர்யோ கீந்திராகத் திகழ்வசிட்டாதியங்கியாரும்-சிறந்தசித்தர்கள் யோகீந்திராகவிளங்கும் வசிட்டர்முதலிய அங்கிருந்தவர்கள்யாவரும், எவ்வமிலிராமன் வருஞ்சரிதத்தை - களங்கமற்ற இராமரது நடக்கப்போகின்ற சரித்திரத்தை, இனிதுறக்கேட்டமையாலே - மிக்கசந்தோஷமாகக் கேட்டபடியால், திவ்வியசாணம்புயப் பொடிதன்னில் - அவரதுஅழகிய சரணாரவிந்ததூளியில், சிந்தையுமன்பும்வைத்தனரோ - நினைப்பும் அன்பும் பொருந்தியிருந்தார்கள்—எ-று. (ருஅ)

இதுவுமது.

சீதாபதியாம் ரகுநாதன் திவ்வியசரிதங் கேட்டதி
னுல், வேதாதியதோர் வசிட்டமுனி மேலுமுள்ள மகாரு
ஷிகள், போதாமையினுற் சந்தோடம் பொருந்தாதின்னு
ம் பிரான்பால், ஓதாநின்ற வதுகேட்டுந் தாமேயுனாத்
தழுவப்புற்றார்.

இ-ள். சீதாபதியாம் ரகுநாதன் - சீதைக்குநாயகரான ஸ்ரீ ராமமூர்த்தியினது, திவ்வியசரிதங் கேட்டதினல் - மேலானசரித்திரத்தைக் கேட்டுவந்ததினலே, வேதாதியதோர்வசிட்டமுனி- வேதாதிய சாஸ்திரமுணர்ந்த வசிட்டமுனிவரும்; மேலுமுள்ள மகாருஷிகள் - இன்னும் அங்கிருந்த மகாருஷிகளும், போதாமையினற்சந்தோடம்பொருந்தாது - திர்ப்தியின்மையாற் சந்தோஷப்படாமல், இன்னும் பிறரன்பால் - இன்னமு மற்றவர்களன்பினலே, ஓதாநின்ற வதுகேட்டும் - கூறுகின்ற அச்சரிதத்தைக் கேட்டுக்கொண்டும், தாமேயுணாத்துமுவப்புற்றார்-தாமேயதை பின்னுமெடுத்துக்கூறிக்கொண்டும் சந்தோஷமடைந்தார்கள்-எ-று.

(அ-கை.) வசிஷ்டமுனிவர் சந்தோஷமடைந்து விஸ்வாமித்திரருஷிக்குச் சொல்லுகின்றார்.

அந்தவசிட்ட பகவாண மமலமுனிவ னகமலர்ந்தே
இந்தவிஸ்வாமித்திர ஞமிணையில்தவத்தோன்முகநோக்கி
பந்தமகன்ற முனிநாதா பத்மதளலோசனராமன் [ஞே.
முந்துசன்மத் தியாவனிவன் முதிர்வானவஞே மானிட

இ-ள். அந்த வசிட்ட பகவாண மமலமுனிவ னகமலர்ந்தே - அந்தவசிட்டபகவானன பரிசுத்தமுனிவர் மனமகிழ்ந்து, இந்தவிஸ்வாமித்திரஞ மிணையில் தவத்தோன் முகநோக்கி-இந்த விஸ்வாமித்திரரான ஒப்பற்ற தபசியினது முகத்தைப்பார்த்து, பந்தமகன்ற முனிநாதா - பாசபந்தமின்றிய முனிசிரேஷ்டரே? பத்மதளலோசனராமன் - செந்தாமரையிதழ்போன்ற கண்களையுடைய ஸ்ரீராமர், முந்துசன்மத்தியாவனிவன் - முற்சனனத்தில் எத்தன்மையர், முதிர்வானவஞே மானிடஞே-தேவஞே அல்லது மானிடஞே கூறக்கடவீர்—எ-று. (சுo)

(அகை.) வசிஷ்டர்விஷ்ணுவுக்கு விஸ்வாமித்திரர் உத்தரங் கூறுகின்றார்.

இச்சபைதன்னில் நிறைந்துளோர்யாரு மினிதுகே ட்டுணர்தரக்கூறும், முச்சகம்போற்று முனிவரோயென் ன மொழிதருஞ் சபையுளீர் கேண்மின், நிச்சயஞ் சா க்ஷாத் வாசுதேவப்பேர் நிகழ்பகவானெனை நினைமின், பொச்சமி லன்பாற் போற்றுமி னிவனே புராணவப் பர மமா புருஷன்.

இ-ள். இச்சபைதன்னில் நிறைந்துளோர்யாரும் - இந்தச் சபையில் நிறைந்திருக்கின்ற யாவரும், இனிதுகேட் டுணர்தரக் கூறும் - விருப்பமாகக்கேட் டுணரும்படி சொல்லுமென்று, முச் சகம்போற்று முனிவரோயென்ன - திரிலோகங்களும் துதிசெய் கின்ற முனிவரோயென்று, (வசிட்டர்கூற) மொழிதருஞ் சபையு ளீர்கேண்மின் - (அவ்விஸ்வாமித்திரர்) சபையிலுள்ளோரைப் பார்த்து நீங்கள் கேட்கக்கடவீரென்று, (சொல்லத்தொடங்குகி ன்றார்) நிச்சயஞ் சாக்ஷாத் வாசுதேவப்பேர் நிகழ்பகவானென நினைமின் - சாக்ஷாத் அந்த வாசுதேவனென்று சொல்லப்பட்ட் பகவானே இவனென்று நிச்சயமாய் எண்ணுங்கோள், பொச்சமி லன்பாற்போற்றுமின் - உண்மையான பக்தியுடன் துதிசெய்யு ங்கோள், புராணவப் பரமமாபுருஷன் - ஆதியாய்நின்ற வந்தப் பரமபுருஷோத்தமரிவரோ—எ-று. (சுக)

இதுவுமது.

நீடுமன் றிவனே வுலகுபகார நிமித்தமப் பாற்கட ல் கடைந்தோன், நாடியசூட மாங்கருத் துடைய நவை யிலா வுபநிடதங்கள், தேடிய வுண்மைப் பொருள்பரி

பூர்ண செவ்விய வானந்த வடிவாய்க், கூடியே நிறைந்
தோன் ஸ்ரீவச்சமென்னுங் குறிமறு மார்புள புருஷன்.

இ-ள். நீமென்றிவனே வுலகுப்கார நிமித்தம் - முன்காலத்திற்கு முன் இவரே லோகோபகார நிமித்தமாக, அப்பாற் கடல் கடைந்தோன் - அந்தத் திருப்பாற்கடலைக் கடைந்தவர், நாடிய கூடமாங்கருத்துடைய - ஆராய்கின்ற இரகசியப்பொருளையுடைய, நவையிலா வுபநிடதங்கள் - குற்றமற்ற வேதங்கள், தேடியவுண்மைப்பொருள் - தேடப்பட்டமெய்ப்பொருள், பரிபூர்ணசெவ்விய வானந்தவடிவாய் - எங்குநிறைந்த பரமானந்தவடிவாக, கூடியேநிறைந்தோன் - வியாபித்துநின்றவர், ஸ்ரீவச்சமென்னுங் குறிமறுமார்புள புருஷன் - ஸ்ரீவச்சமென்று குறிக்கப்பட்ட மறுவையுடைய அந்தப் புருஷோத்தமன்—எ-று.

இதுவுமது.

இத்தகு பெரியோன் சீராமனாக விங்கவ தரித்திருக்கின்றான், பத்தியாற் பிரசன்ன மாக்கிடைத் தவர்க்கு பாலிப்பன் புருஷார்த்தமனைத்தும், சித்தமார்சினத்தாற் சங்கரித்திடுவன் செகவசே தனம்பினும் பஷடப்பன், நித்தமாமிவனே விஸ்வகர்த்தாவாய் நியமாகூஷண வெக்ய மூர்த்தி.

இ-ள். இத்தகுபெரியோன் சீராமனாக விங்கவதரித்திருக்கின்றான் - இங்ஙனங்கூறப்பட்ட பெருந்தகைமை யுடையவரே ஸ்ரீராமராக இவ்விடத்தில் அவதாரஞ்செய்திருக்கிறார், பத்தியாற்பிரசன்னமாக் கிடைத்தவர்க்கு - அன்பினால் பிரசன்னராகத் தரிசித்தவர்களுக்கு, பாலிப்பன்புருஷார்த்தமனைத்தும் - சகலபுருஷார்த்தங்களையுங் கொடுப்பார், சித்தமார் சினத்தாற் சங்

கரித்திடுவன்- மனதிற்கோபங்கொண்டவராக சங்காரஞ்செய்வார், செகவசேதனம்பினும்படைப்பன்-உலகமான சடங்களைப்பின்னுஞ் சிருட்டிப்பார், நித்தமாமிவனே விஸ்வகர்த்தாவாய் - நித்தியமானயிவரோ அகிலேசனாக, நியமரக்ஷண வெக்கியமூர்த்தி - விதிக்கின்ற வருமாய் போஷிக்கின்றவருமாய் யாகாதிகளுக்குத் தலைமையான மூர்த்தியாகவு மிருக்கின்றார்—எ-று. (சுங)

இதுவுமது.

சாரமற்றற்ப மாகுமிச்சமுசா ரத்தினை விசாரித்து நீக்கி, சேர்தரு ஜகத்தைக் கடந்திராகாதி தீர்ந்திடுதெளிஞர்களாலே, சார்தரப்பெற்ற வானந்தக்கடலாந் தற்பரமிராமனே காண்மின், ஓர்தரினொருகால் முத்தனேபோலு முயராத்ம நிஷ்டனுமாமே.

இ-ள். சாரமற்றற்பமாகும்-நிஷ்பலமாய் அற்பமாகவிருச்கிற, இச்சமுசாரத்தினை விசாரித்துநீக்கி-இந்தச்சமுசாரபாரத்தைக்கண்டறிந்துநீக்கி, சேர்தருசகத்தைச்சடந்து - தோற்றுகின்ற சகமோகத்தைக்கடந்து, இராகாதி தீர்ந்திடு தெளிஞர்களாலே - இச்சைமுதலியவற்றை யொழிந்திருக்கின்ற பெரியோர்களாலே, சார்தரப்பெற்ற வானந்தக்கடலாம் - அடையப்படுகின்ற ஆனந்தசமுத்திரமான, தற்பரமிராமனேகாண்மின் - பரப்பிரமம் இந்தஇராமரோ கண்டறியுங்கள், ஓர்தரினொருகால் முத்தனேபோலும் - ஒருசமயம் சீவன்முத்தனைப்போ லிருப்பார், உயராத்மநிஷ்டனுமாமே- மேலான ஆத்மநிஷ்டருமாவார்—எ-று. (சுச)

துரியமா பதமென் றிடப்படு மொருகால் தொன்மாயைப் பிரேரக ரொருகால், புரியு மம்மாயை தனிற்பிணிப்புண்ட புருடனுமாகு மோர்காலே, அரியகால்வேதம்

வடிவமாப்பெற்றே யகன்றிடு முக்குணக்காட்டை, பெரி யவேதாந்தப் பொருளதாய் நிறைந்து பெற்றிடும் விஜ யமுமன்றே.

இ-ள். துரியமாப்தமென்றிடப்படுமொருகால்- ஒருசமயம் மகத்தான துரியபதமாகச்சொல்லப்படுவார், தொன்மாயைப் பி ரேரகரொருகால் - ஒருசமயம் அநாதிமாயையைப் பிரேரிக்கின் றவராவர், புரியுமம்மாயைதனிற் பிணிப்புண்ட-இயங்குமந்த மா யையிற் கட்டுப்பட்ட, புருடனுமாகுமோர்காலே-புருஷனைப்போ லவுமிருப்பார், அரியநால்வேதம் வடிவமாய்ப்பெற்றே- அருமை யான நான்குவேதங்களையும் தமது சுவரூபமாக விருக்கப்பெற்று, அகன்றிடு முக்குணக்காட்டை - முக்குணடவியைக் கடந்துநிற் பார், பெரியவேதாந்தப் பொருளதாய்நிறைந்து-மேலானவேதங் களின் பரமார்த்தப்பொருளாயிருந்து, பெற்றிடும்விஜையமுமன் றே - ஆச்சரியப்படத்தக்க ஜெயம்பெற்றிருக்கின்றார்—எ-று.()

இவர் சதுர்ப்புயமார் பாலன விஷ்ணு விவர் சது முகந்தரும் பிரமன், தவமிகு மிவரே மூன்று நேத்திரஞ் சேர் சங்காரஞ்செய் மகாதேவன், பவமறுமிவரேமாயை யைச் சேர்ந்து பற்றிடும் பிறவியை மகானுய், இவனுறு பகவான் மோக நித்திரைதீர்ந் திச்சகஞ் சதாவிழித் தளி ப்பார்.

இ-ள். இவர் சதுர்ப்புயமார் பாலனவிஷ்ட்ணு - இவர்தா னேந்நாலு புஜங்களுடன் ரக்ஷகத்தொழில்செய்கின்ற விஷ்ட் ணு, இவர்சதுமுகந்தரும்பிரமன் - இவர்தான் நான்முகமுடைய வராய் சிருட்டித்தொழில்செய்கின்ற பிரமதேவன், தவமிகுமிவ ரோ - மகாதபமுடைய இவரோ, மூன்றுநேத்திரஞ்சேர் சங்காரஞ்

செய்மகாதேவன் - திரிநேத்திரங்களுடையவராய் சம்மாரத்தொழில்செய்யும் மகாதேவன், பவமறுமிவரோ மாயையைச்சேர்ந்து பற்றிடும்பிறவியை - பிறப்பற்ற இவரோ மாயையைக்கூடி பிறவியையடைகின்றவரும், மகானுயிவனுறுபகவான் - மகாத்மாவாகயிங்கவதரித்திருக்கின்ற பகவானே, மோகநித்திரைநீர்ந்திச்சகஞ்சதாவிழித்தளிக்கும் - மோகநித்திரையின்மையால் இந்தச்சகத்தை எப்போதுஞ் சாக்ரமுள்ளவராய் இரக்ஷிக்கின்றார் எ-று.

உருவமி லிவரோ சகலமாமுருவ முடையவர் விக்கிரமமதனால், தருமகாவிஜைய மடைவதுபோலுஞ் சார்தேசிற் பிரகாசமாவதுபோல், வருமுயர் சுருதி விசாரணையாலே மருவுஞானோதயம் போலும், அருமையாமிவர் தாங் கெருடனாற் றரிக்கு மற்புதமூர்த்தி யாகின்றார்

இ-ள். உருவமிலிவரோ சகலமாமுருவமுடையவர் - ஒருருவமுமில்லாத விவர்தான் சகலரூபங்களையுமுடையவர், விக்கிரமமதனால் தருமகாவிஜைய மடைவதுபோலும் - பராக்கிரமத்தினால் வரும் ஜயமடைகின்றதுபோலவும், சார்தேசிற்பிரகாசமாவதுபோல் - வருந்தேஜசினாலே பிரகாசமுண்டாவதுபோலவும், வருமுயர்சுருதிவிசாரணையாலே மருவுஞானோதயம்போலும் - உண்டான சுருதிவிசாரணையினால் ஞானோதயமுண்டாதல்போலவும், அருமையா மிவர்தாம் - அருமைப்பொருளா யிருக்கின்ற இவரோ, கெருடனாற்றரிக்குமற்புதமூர்த்தியாகின்றார் - கெருடனாலே தாங்கப்பட்டபரமமங்கள மூர்த்தியாயிருக்கின்றார்—எ-று.

எவர்தமக் கிந்தப்பரமயாபுருஷ னிசைகெழு புத்ரனுமந்தத், தவமிகு மரசாங் தசரதன்றனே தன்னியனும் நானிலந்தன்னில், பவமுறு மியாவன் மனத்தினு லிந்தப்

பார்த்திபன் பகையென நினைக்கும், அவமுறு மந்த வி
ராவணன்றனு மருள்செயப்படும் பாக்கியசாலி.

இ-ள். எவர்தமக்கிந்தப் ப்ரமமாபுருஷன் - யாவருக்கிந்த மகத்தானதர்மபுருஷன், இசைகெழுபுத்ரனுமந்த - கீர்த்திபெற்றபுத்ரனுகப் பிறந்தாரோவந்த, தவமிகுமரசாந் தசரதன்றனே- மிகுந்ததபமுடைய வரசனுனதசரதரோ, தன்னியனும் நானிலந் தன்னில் - உலகத்தில் பாக்கியவந்தனுகும், பவமுறுமியாவன் மனத்தினுல் - பிறவியையடைந்த யாதொருவன் மனதினுல், இந்தப்பார்த்திபன்பகையென நினைக்கும் - இந்தமகாராஜனை பகைவனுக நினைக்கின்றனே, அவமுறுமந்தவிராவணன்றனும்-அபஜெயமடைகின்ற அந்தராவணனும், அருள்செயப்படும் பாக்கியசாலி - இவ்விராமரால் கிர்பைசெய்யப்படுகின்ற பாக்கியவந்தனும்—எ-று. (சுஅ)

இவர் பிரிந்திடலாற் சூன்யமாஞ் சுவர்க்க மிழிதரு
குறைவடைந்துளது, உவமையி லாதிசேடனு மிவரோ
யுறுபிலத்திருந் திலக்குமனுய், இவ னுடன்வரலாற் று
ழ்வடைந் திருந்த திசைக்கு மப்பாதாளலோகம், தவமி
குமிந்த மத்தியலோகஞ்சார்ந்ததுமேன்மையாம்புகழே.

இ-ள். இவர் பிரிந்திடலாற் சூன்யமாஞ்சுவர்க்கம் - இவ்விராமர்நீங்கி யிருப்பதால் வெறிதாயிருக்கின்ற சுவர்க்கலோகமானது, இழிதருகுறைவடைந்துளது - இழிவானகுறைவடைந்திருக்கிறது, உவமையிலாதிசேடனுமிவரோ-ஒப்பில்லாதவாதிசேடனுனவிவரோ, உறுபிலத்திருந் திலக்குமனுய் - அப்பாதளலோகத்திலிருந்து இலட்சுமணவடிவாக, இவனுடன்வரலால் - இங்கு இவருடன்வந்ததினுல், தாழ்வடைந்திருந்த திசைக்குமப் பா

தாளலோகம் -அப்பாதாளலோகம் தாழ்வடைந்திருக்கின்றது, தவமிகுமிந்த மத்தியலோகம்-மிக்கதப்முடைய விந்த பூலோகமானது, சார்ந்தது மேன்மையாம் புகழே - மேலானகீர்த்தியையடைந்திருக்கின்றது—எ-று. (சுகூ)

இராம மாநாமம் பெற்றவதரித்த விவர் திருப்பாற்கடனடுவில், பராவிய தேவர் பணிசெய்து நிற்பப்பள்ளிகோண் மகாபுருஷன்காண்,நிராமய ஞானனந்தவார்கடலாய் நிறைபர மாத்தும சொரூபி, விராவுமிந் திரிய மடக்கி யுள்ளத்தில் விளங்குறக் காண்பர் யோகிகளே.

இ-ள். இராமமாநாமம்பெற்றவதரித்த -இராமனென்னுமகத்தானதிருநாமம்பெற்றிருக்கின்ற, இவர்திருப்பாற்கடனடுவில்-இவர்திருப்பாற்கடலின்மத்தியில், பராவியதேவர் பணிசெய்துநிற்ப - துதிசெய்கின்றதேவர்கள் பணிவிடை செய்துக்கொண்டுநிற்க, பள்ளிகொண் மகாபுருஷன்காண்-அறிதுயிலமர்ந்த மகாபுருஷனுகும், நிராமயஞானனந்த வார்கடலாய் - நிராமயமானஞானனந்தநிறைந்த சமுத்திரமாக, நிறைபரமாத்துமசொரூபி - பரிபூரணமான பரமாத்மாகாரமானவர்,விராவுமிந்திரிய மடக்கியுள்ளத்தில் - பலவிந்திரியங்களையுமடக்கி யிதயத்தில், விளங்குறக்காண்பர் யோகிகளே - இவனியோகிகள்ஞானக்கண்ணுல்விளங்கக்காண்பார்கள்—எ-று. (எ0)

ஆகிய யாமோ விந்தமாராம னவரமாவுருவத்தைச் சொலவும், ஊகமா யன்பிற் றரிசனஞ்செயவு முரிமையேம் பகவனுமிவனே, மாகமா ரகுமாராஜன் செய்பாய

மாய்ந்திட வேருடன் களைந்தான், ஏகமாம் வசிட்டமு
னிவனேயெழுப்பி யிவன் விவகரித்திடப் புரிவாய்.

இ-ள். ஆகியயாமோ விந்தமாராமன் - நாங்களோவென்று
லிந்தஇராமனது, அவரமாவுருவத்தைச்சொலவும்-சகளரூபத்தை
துதிக்கவும், ஊகமாயன்பிற் றரிசனஞ்செயவு முரிமையேம் - அ
ன்பால் யூகித்துக்காணவுந் தகுதியுள்ளவர்களா யிருக்கின்றோம்,
பகவனுமிவனே - கடவுளானவிவரோ, மாகமாரகுமாராஜன்செய்
பாபம் - விண்ணுலகடைந்த ரகுமகாராஜனது பாபங்கள், மாய்ந்
திடவேருடன்களைந்தான் - முற்றுந்தீர்ந்தொழியச் செய்தவர்,
(என்றுகேட்டிருக்கிறோம்)ஏகமாம்வசிட்டமுனிவனே அத்வை
தசொரூபமான வசிட்டமுனிவரே, எழுப்பியிவன் விவகரித்தி
டப்புரிவாய் - இவர்சமாதிவிட்டெழுந்து விவகாரஞ்செய்யும்ப
டிதயைசெய்யக்கடவீர்—எ-று. (எக)

வான்மீகிவாக்கியம்.

இவ்வணம்விஸ்வாமித்திரமுனிவனியம்பியேமௌ
னமாயிருப்பத், திவ்வியதேசார் வசிட்டமாமுனிவன்செ
ப்புவா னிராமனைநோக்கி, செவ்விய பாகு மகாபுருஷனு
மாஞ் சின்மயமாகிய ராமா,எவ்வமில் விசிராந்திக் கற்ற
மன்று லெழுந் துலகவர்க்கின்ப மளிப்பாய்.

இ-ள். இவ்வணம்விஸ்வாமித்திரமுனிவனியம்பியே மௌ
னமாயிருப்ப-இவ்வாறு விஸ்வாமித்திரமுனிவர்கூறி மௌனமா
யிருந்தபோது, திவ்வியதேசார் வசிட்டமாமுனிவன் - பிரமதே
ஜசுடைய வசிட்டமுனிவர், செப்புவானிராமனைநோக்கி - இரா
மனைப்பார்த்துக் கூறுகின்றார், செவ்வியபாகுமகாபுருஷனுமாஞ்
சின்மயமாகியராமா-அழகியபுஜப்லமுடைய மகாபுருஷோத்தம

ஞுகவும் சின்மயமாகவும் நிறைந்த இராமர், எவ்வமில் விசிராந்தி க்கற்றமன்றுல்-தன்ப்மற்றவிசிராந்திக்கு இதுசமயமல்லவாதலா ல், எழுந்துலகவர்க் கின்பமளிப்பாய்-சமாதிவிட்டெழுந்து லோ கத்தாருக்கு சுகந்தரக்கடவாய்—எ-று. இக்கவிமுதல் வசிட்டர் கூறுகின்றது. (எஉ)

யோகிகடமக்குச் சமாதியாதிக்க முதவிசெய் யுல கசிந் தனைதான், ஏகபூரணமா யேற்படுமட்டு மிசைந்தி டா நின்மலசமாதி, ஆகையான் மைந்தா வனித்தியமான வர சிராச்சிய முதல்விஷையம், மாக தேவாதி காரியவ திகாரமுஞ் செய்து மன்னுக சமாதி.

இ-ள். யோகிகடமக்குச் சமாதியாதிக்கம் - யோகிகளுச்குச் சமாதியிற்செல்வாக்கு, உதவிசெய்யுலக சிந்தனைதான் - கொடுக் கின்ற லோகசிந்தனையானது, ஏகபூரணமா யேற்படுமட்டும் - நி றைவாகயேற்படுகிறவரையில், இசைந்திடாநின்மலசமாதி - நிரு விகற்பசமாதி கூடுவதரிது, ஆகையான்மைந்தாவனித்தியமான- ஆனதால் மகனே நிலையின்றிய, அரசிராச்சியமுதல்விஷையம்- அரசுசெய்கின்ற ராச்சியமுதலான விஷையங்களையும், மாகதே வாதிகாரியம்-விண்ணுடரான தேவர்காரியங்களும், அதிகாரமு ஞ்செய்து - இராச்சியாதிகாரங்களும் செய்தனுபவித்துப் பின்பு, மன்னுகசமாதி-நிருவிகற்ப சமாதிபெறக்கடவாய்—எ-று. (எங)

வான்மீகிவாக்கியம்.

குருவினு லிவ்வாறுரைத்திடப்பட்டுங் குறியறு பி ரமத்தி லொன்றி, மருவிய ராமன் மௌனத்தி லிருப்ப மதித்தந்த வசிட்டமா முனிவன், பொருவரு முடலிற் சங்கற்பவடிவாய்ப் புகுந்துளசுழுமுனைநாடி, அருநெறி

யாலே யிதயத்தின் மேவி யவன்றனை வெளிப்படச் செய்தான்.

இ-ள். குருவினாலிவ்வாறுரைத்திட்டப்பட்டும் - தமதாசாரியரா லிவ்வாறு கூறப்பட்டும், குறியறு பிரமத்திலொன்றி - சுட்டற்றபிரம சொரூபத்திற்கலந்து, மருவியராமன் மௌனத்திலிருப்ப - ஏகமாய்விளங்கிய இராமர் மௌனமாயிருக்க, மதித்தந்த வசிட்டமாமுனிவன் - வசிட்டமுனிவர் நிதானித்து; பொருவருமுடலில் - ஒப்பற்றசுந்தரமான தேகத்தில், சங்கற்பவடிவாய்ப்புகுந்து - ஆதிவாகிக சரீரத்தால் நுழைந்து, உளசுழுமுனைநாடியருநெறியாலே .. அங்குள்ள சுழுமுனைநாடி மார்க்கமாக, இதயத்தின்மேவி-இர்தயாகாயத்திற்சென்று, அவன்றனைவெளிப்படச்செய்தான்- அவனைச் சமாதியினின்றுவெளிப்படுத்தினர்— எ-று. (தா-ம்) அவருட்புகுந்து - விலீனமாயுருகி லயித்திருக்கின்ற இராமரது சிவோபாதி லிங்கத்தைத் தடிக்கச்செய்து வித்துக்குள்நுழைந்தகாற்று அதற்குள்ளிருக்கு முனையை வெளிப்படுத்துவதுபோல அவரை வெளிமுகப்படுத்தினரொன்று கருத்து.

(அ-கை.) அவரை வெளிப்படுத்தும்போது வெளிப்பட்ட முறைமையும் சிதாபாசத்தோற்றத்தால் க்ஷேத்திரபிரகாசம் வெளிவிஷயதரிசன முதலான கிரமத்தைக் கூறுகின்றார்.

தோன்று மாதார சத்தியி னினிது துன்னு மப்பிராணனில் மனதில், ஏன்றிடு சிதாபாசாம்சமாய் விளங்கியினயந்தவை பிரகாசிக்கச் செய்யும், ஆன்ற சீவாம்ச மாகியராம னமர்நாடி யனைத்தினுஞ் சென்று; சான்ற விந்திரியங் கரணங்கள் விளக்கித் தண்ணெனக் கண்களை விழித்தான்.

இ-ள். தோன்று மாதாரசத்தியில் - முதல் பிராணுதிகளுக்கு வித்தாகிய ஆதாரசத்தியிலும், இனிது துன்னுமப்பிராணனில்-இனிதாகத்தோன்றும் பிராணனிலும், மனதில்-பின்பு மனதிலும், என்றிடு சிதாப்பாசாம்சமாய்விளங்கி - பொருந்திய சிதாபாச அம்சமாகப் பிரவேசித்தவராய், இயைந்தவை பிரகாசிக்கச் செய்யும்-கூடியதன்று லவற்றைப்பிரகாசிப்பிக்கும், ஆன்றசிவமாம் சமாகிய ராமன்-சிறந்தசிவரூபியான இராமர்,அமர் நாடியனைத்தினுஞ்சென்று - பிராணன் வழியாக சகலநாடித் துவாரங்களிலும் பிரவேசித்து, சான்ற விந்திரியங்கரணங்கள் விளக்கி - சகலவிந்திரியகரணங்களைப் பிரகாசிப்பித்து, தண்ணெனக்கண்களை விழித்தான் - தணிவாகக் கண்களைவிழித்தார்—எ-று.(எரு)

மேன்மையார் வசிட்டர் முதற்பெரியோரா வெளிதருகாட்சியிற் கண்டு, தானுயர்முத்த ஞச்சர்வவிச்சைதனைவிடுத் திருப்பதாற் செய்தல், ஊனமாய்த் தவிர்த லெனுங்குணதோஷ முணர்ந்திட லவற்றினு லுண்டாம்; பான்மையாங் கொள்கை விடுக்கையு மின்றிப் பார்த்தனர் மௌனமா யிருந்தே.

இ-ள். மேன்மையார் வசிட்டர் முதற்பெரியோரா-மேன்மை பொருந்திய வசிட்டர்முதலான பெரியோர்களை, வெளிதருசாட்சியிற்கண்டு-பாலகியகாட்சியிற்கண்டு, தானுயர் முத்தனுச்சர்வவிச்சைதமைவிடுத்திருப்பதால்-தான் சிவன்முத்தனுக சகல இச்சைகளையும் விட்டிருப்பதால், செய்தல் ஊனமாய்த் தவிர்த லெனுங்குணதோஷம் - இதுசெய்யத்தக்கது இது விடத்தக்கதென்னுங் குணகுணமும், உணர்ந்திடல்-அறிதலும், அவற்றினுலுண்டாம் பான்மையாங்கொள்கை விடுக்கையுமின்றி - அவற்றிற்சேற்ற கொள்கையும் விடுகையுமில்லாமல், பார்த்தனர் மௌனமாயிருந்தே - ஒன்றுங்கூறுதுபார்த்துக்கொண்டிருந்தார்-எ-று

வசிட்டர்தாம் பின்னும் விளித்திடு வசனம் மன முறக் கேட்டிது குருவின், விசுத்தவாக்கியமென் றறிந் துமேற்முதை மேலவர் வேண்டுகோ ளுணர்ந்து, நிசத் துள ராமச் சந்திரபகவா னிகழ்சமபாவமா யுரைக்கும், இசைத்தமா முனியே நின்பிரசாதத்தா லிலைவிதிவிலக் கெனக் குணர்ந்தேன்.

இ-ள். வசிட்டர்தாம் பின்னும் விளித்திடுவசனம்-வசிட்ட முனிவர் பின்னும் விளித்தவாக்கியம், மனமுறக்கேட்டிது குரு வின்-மனதிற் பொருந்தக்கேட்டு இதுகுருவினது, விசுத்தவாக்கி யமென்றறிந்து- பரிசுத்தவாக்கென்றறிந்து, மேற்முதைமேலவர் வேண்டுகோளுணர்ந்து - தந்தைமுதலிய பெரியோர்களது வே ண்டுகையுமறிந்து, நிசத்துளராமச் சந்திரபகவா னிகழ்சமபாவமா யுரைக்கும்-உண்மையிற்கலந்திருக்கின்ற இராமச்சந்திரமூர்த்தி ச மபாவனையிலிருந்து கூறுகின்றார், இசைத்தமாமுனியேநின்பிர சாதத்தா லிலைவிதிவிலக்கெனச் குணர்ந்தேன் - இவண்கூறிய முனிஸ்வரரோ நினதருட்பிரசாதத்தால் எனக்கு விதியும்விலக்கு ம் இல்லையென்றறிந்தேனென்றார்—எ-று. (எஎ)

ஆகினு நுமது வாக்கியமென்னு லற்பொடு செயத் தக்க தன்றே, ஊகமா வேத வாகமபுராண முரைத்திடு ம் விதிகுருவாக்கியம், ஏகுறவிடுத்தல் விலக்கெனலாகு மெனச் சருவாத்துமதயாள, சாகரமான விராமனவ்வசி ட்டர் சரணபத்மந்தரித் துரைக்கும்.

இ-ள். ஆகினுநுமது வாக்கியமென்னுல் - ஆனாலும் தமது வாக்கியமென்னுல், அற்பொடுசெயத்தக்க தன்றே - அன்போ டுசெய்யத்தக்கதல்லவா, ஊகமாம்வேத வாகமபுராணம் - உத்தி யானவேதம் ஆகம புராண மிவைகள்,உரைத்திடும் விதிகுரு வா க்கியம் - கூறப்பட்டது குருவாக்கியமே விதியென்றும், ஏகுற

விடுத்தல் விலக்கெனலாகுமென - குருவாக்கியந்தள்ளிவிடுதலே விலக்கென்றும் கூறப்படுமாதலால், சருவாத்துமதயாள சாகரமான விராமன் - சர்வஜீவதயாபர சமுத்திரமாயிருக்கின்ற இராமர், அவ்வசிட்டர் சரணபத்மந்தரித்துரைக்கும் - அந்தவசிட்டமுனிவர் சரணாரவிந்தங்களைவணங்கி யுரைக்கின்றார்—எ-று.(எஅ)

இச்சபையுள்ள மகாசனங் கேண்மி னெதாவுண்மை ஞானசித்தியினால், நிச்சயமாக நன்குற வுணர்ந்த நிகழ்சருவார்த்தமுஞ் சொல்வோம், உச்ச மங்களமுண்டாக நுங்கட்கிங் குயராத்ம ஞானத்தின் மிக்க, சொச்சமா மின்ப மிலையஃ துணர்த்துந் துதிகெழு குருவினுந் துணையில்.

இ-ள். இச்சபையுள்ள மசாசனங்கேண்மின் - இந்தச்சபையிலிருக்கின்ற சகலருங்கேளுங்கோள், எதாவுண்மை ஞானசித்தியினால் - எதார்த்தமான மெஞ்ஞானசித்தியினால், நிச்சயமாக நன்குறவுணர்ந்த - திரமாக நன்றாயறியப்பட்ட, நிகழ்சருவார்த்தமுஞ் சொல்வோம் - விளங்குகின்ற சர்வார்த்தங்களையுங் கூறுவோம், உச்சமங்களமுண் டாகநுங்கட்கிங்கு - உங்களுக்குமேலான மங்களகரமுண்டாகக்கடவது; உயராத்மஞானத்தின் மிக்க - மேலான ஆத்மஞானத்தின்மேற்பட்ட, சொச்சமாமின்பமிலை - சுத்தமானவின்பமில்லை, அஃதுணர்த்துந் துதிகெழுகுருவினுந் துணையில் - அந்தப்பரமஞானமுபதேசிக்குங் கீர்த்தியுள்ள குருவைவிட் டுங்களுக்கு வேறுதுணையாவாருமில்லை—எ-று. (எகூ)

இங்குளார் யார்க்கு மீதுநிச்சயமே யெனச் சித்தர் முதலியோருரைப்பார், துங்கமாராம னின்பிரசாதத்தாற் சொல்லு மிச்சாஸ்த்ர சம்வாதம், சங்கையி லர்த்த முறுதியாயிற்று தடையறு சுகம்பெற நின்றாற், புங்கமா வசி

ட்ட முனிவரா லநுஞை பொருந்தியாம் போதுமுன்வர ல்போல்.

இ-ள். இங்குளார்யார்க்குமீது நிச்சயமேயென - இங்கிருக் கின்றயாவருக்கும் இதுநிச்சயமாயிற்றென்று, சித்தர்முதலியோ ருரைப்பார் - சித்தர்முதலிய பெரியோர்களுரைக்கின்றார், துங்க மாராம நின்பிரசாதத்தால் - மகத்தானஇராமா நினதுகிர்பையினா ல், சொல்லுமிச்சாஸ்த்ர சம்வாதம் - இங்குக்கூறப்பட்ட சாஸ் த்ரசம்பாஷணையினது, சங்கையிலர்த்த முறுதியாயிற்று - சந்தே கமின்றி யதன்பொருள் ஸ்திரமாயிற்று, தடையறு சுகம்பெற- நீர்தடையற்ற பேரானந்தமடைவீராக, நின்னால் புங்கமாவசிட் ட்முனிவரால் - தம்மிடத்திலும் மேன்மையான வசிட்டரிடத் திலும், அநுஞைபொருந்தியாம் போதுமுன்வரல்போல் - உத்தி ரவுபெற்றுக்கொண்டு முன்வந்ததுபோல போய்வருவோம்-எ-று.

வான்மீகவாக்கியம்.

இந்தவா றுரைத்துச் சபையுளோரெல்லா மேகுமு ன் தங்கடம் மிருப்பில், எந்தையாமந்த ராமன்மாமுடியி லிலகுறு மலர்மழை பொழிந்த, அந்தமாரிவையெல் லா நுமக் குரைத்தே னன்புள பரத்வாஜ மைந்த, பந்தமில் சுகத்தில் நெடிதுற வாழி பாரவிக்காவியம் வாழி.

இ-ள். இந்தவாறுரைத்துச் சபையுளோரெல்லாம் - சபை யிலிருந்தயாவரும் இந்தப்பிரகாரஞ் சொல்லிக்கொண்டு, ஏகு முன் தங்கட்ம்மிருப்பில் - தங்கள்தங்களிடத்துக்குச் செல் லுமுன், எந்தையாமந்த ராமன்மாமுடியில் - என்பிதாவாகிய அ ந்த இராமரதுமுடியின்மீது, இலகுறுமலர்மழைபொழிந்த-விள ங்கும் மலர்மாரிபெய்தது,அந்தமாரிவையெல்லாம் நுமக்குரைத் தேன், அன்புளபரத்வாஜமைந்த-பக்தியுள்ள புத்திரனான பரத்வா ஜரே, பந்தமில்சுகத்தில் நெடிதுறவாழி - பந்தமற்றசுகத்தில் எப்

போதும் வாழக்கட்வாய், பாரவிக்காவியம்வாழி - இந்த மகாசா ஸ்திரமும் வாழ்ந்திருக்கக்கடவது—எ-று. (அக)

மேன்மையாம்வசிட்டர் வாக்கியபந்தி மேவுமிச்சா த்திரந்தன்னல், வான்புகழ் வாய்மை ரகுபதிசீவன் முத் தியை மன்னிய துரைத்தேன், பான்மையின் மிக்க வித் துவான்களுக்கும் பரமயோகியர்க்கு மப்பியசிக்கும், மா ன்மியமுளது குருகடாக்ஷத்தால் வழங்குநன்முத்திசே ர் மார்க்கம்.

இ-ள். மேன்மையாம் வசிட்டர் வாக்கியபந்தி - மேலான வசிட்டரது வசனவரிசை, மேவுமிச்சாத்திரந்தன்னல் - பொரு ந்திய விந்தச்சாஸ்திரத்தால், வான்புகழ்வாய்மைரகுபதி-மேலா னகீர்த்தியுடைய இரகுநாதன், சீவன்முத்தியை மன்னியதுரைத் தேன் - சீவன் முத்தியடைந்த சரிதத்தைக்கூறினேன், பான் மையின்மிக்க வித்துவான்களுக்கும் - பெருமையையுடைய வி த்துவசனங்களுக்கும், பரமயோகியர்க்கு மப்பியசிக்கும் - பரம யோகிகளும் அப்பாயாசிக்கத்தக்க, மான்மியமுளது - மகத்து வமுடையது, குருகடாக்ஷத்தால் வழங்குநன்முத்திசேர் மார்க் கம் - ஆசாரியர் திருநோக்கத்தால் முத்தியடைகின்ற வழியுங்கி டைக்கும்—எ-று. (அஉ)

இவ்வணம் வசிட்ட முனிவர்க்கு மிராம விசைகெ ழுதோன்றற்கு நடந்த,செவ்விய சம்பாஷணைவிதி கேட் டோர் தெளியுமப் பொருளினை யுணர்ந்தோர், எவ்வகை யவத்தை யுடையவரோனு மிசைந்துள பாபங்கணீங்கித், திவ்விய வேதாந்தப் பொருண் முறையே தேர்ந் துயர் பிரமத்தை யடைவார்.

இ-ள். இவ்வணம் வசிட்டமுனிவர்க்கு மிராமவிசைகெ ழு தோன்றற்குநடந்த-இவ்வாறுவசிட்டமுனிவருக்கும் கீர்த்தி

மிகுந்த இராமமூர்த்திக்கும்நட்ந்த, செவ்வியசம்பாஷணைவிதிகே ட்டோர் - சிறந்த சல்லாப்மொழியைக் கேட்டவர்கள், தெளியு மப்பொருளினையுணர்ந்தோர் - தெளிவான வப்பொருளையுணர்ந் தவர்கள், எவ்வகையவத்தையுடையவரோனும் - எந்த மோகாவத் தையடைந்தவரானாலும், இசைந்துளபாபங்கணீங்கி-சேர்ந்தபாவ ங்களெல்லாமொழிந்து, திவ்வியவேதாந்தப் பொருண்முறையே தெளிவுள்ள வேதாந்தார்த்தக் கிரமமாய், தேர்ந்துயர் பிரமத்தை யடைவார் - தெளிந்துமேலான பரமசொரூபமாவார்கள் — எ-று.

ஸ்ரீதக்ஷிணாமூர்த்திப்பாதாரவிந்தந்துணை.

இவ்வாறு வான்மீகமகாரிஷியினால் சொல்லப்பட்ட மகா ராமாயனத்தில் தேவதூதப்புரோக்தமான முப்பத்திராயிரங்கிர ந்தத்தில் பாலகாண்டத்தில் மோக்ஷோபாயமான நிர்வாணப்பி ரகரணத்தில் பரத்துவாஜ அநுசாஸனமென்னும் - கஉஎ - வது சருக்கமும், இராமவியுத்தாபனமென்னும் - கஉஅ - வது சருக்க மும், ஸ்ரீமதுபரமஹம்ஸபரிவ் ராஜகாசாரியரான ஸ்ரீ ஸர்வஞ்ஞ ஸரஸ்வதிபூச்சிய பாதர். இவர் சிஷியர் ஸ்ரீ இராமசந்திரஸரஸ் வதிபூச்சிய பாதர். இவர் சிஷியர் ஸ்ரீ கங்காதரேந்திரஸரஸ்வதி என்னும் ஸன்னியாசியினது சிஷியரான ஆனந்தபோதேந்திர சரஸ்வதி என்னும் சன்னியாசியினாலே செய்யப்பட்ட வாசிட் டதாற்பரியப் பிரகாசிகையென்னும் வியாக்கியானத்துக் கிணங் க பு.வெ. பொன்னையாமுதலியாரென்னும் சிவானந்தமூர்த்தியா னபரமவித்துவான் தமிழ்க்கவிதையாகமொழிபெயர்த்துமேல்வி யாக்கியானத்துச்குஒத்தபடிஉரையுஞ்செய்துவிளக்கிவைத்தனர்

திருச்சிற்றம்பலம்.

சம்பூரணம்.

புதுவை—கலியுகவூ சகூஎஎ—யுவவூ ஆனிமீ

செய்யுண் முதற்குறிப்பகராதி.

முற்றிற்று.

பரத்துவாஜ அநுசாஸனம் - கவி - ௫0,

இராமவியுத்தாபனம் - கவி - அ௩, வியாக்கியான - கவி - ௩,

ஆக - கவி - க௩சு.

சிவமயம்.

ஞானவாசிட்ட வமலராமாயணப்

பிழைதிருத்தம்.

பக்க.	வரி.	பிழை.	திருத்தம்.
க	கூ	நாற்பதொன்பான்	நாற்பத்தொன்பான்
ங	க	பொருளை	பொருளைக்
ங	கக	கார்ப்பணயஞ்	கார்ப்பண்யஞ்
,,	ககூ	சாரவர்	சார்வர்
ச	கஎ	தோய்	தோய்வ்
சு	,,	சமஸாதனத்தில்	சமஸ்த்தானத்தில்
கரு	கூ	கொடையிற்	கோடையிற்
உஉ	ங	சார்ந்ததோர்	சார்ந்தோர்
,,	க0	பொட்டு	பொருட்டு
,,	ககூ	உனச்குண்டா	உனக்குண்டா
உங	க0	வியற்றுக	யியற்றுக
உசு	கச	இங்கும்போ	இங்குப்போ
உஎ	கூ	சக்த்தி	சக்தி
,,	கச	கிரகத்தாத்	கிரகத்தாற்
உகூ	உ	மூத்தர்	முத்தர்
ஙஅ	கூ	கெட்டியென்று	கேட்டியென்று
சக	சு	ரிஷித்தரும்ம்	ரிஷித்தகருமம்
சஉ	உரு	அத்தியாதமீக	அத்தியாத்மீக
சச	ங	பராதிய	பாராதிய
,,	கஅ	சுரோத்ரோந்	சுரோத்ரந்
,,	ககூ	இகுவை	ஜிகுவை
,,	உச	சுரோத்ரோம்	சுரோத்ரம்
சரு	உ	இகுவை	ஜிகுவை
சசு	கரு	முடியில்	முடிவில்
ரு0	க	முறயரு	முயறரு
ருக	சு	வீனுக்கு	வினுவுக்கு

பக்க.	வரி.	பிழை.	திருத்தம்.
௫௨	௯	சூக்கமாய்	சூக்கமாய
,,	௧௯	சிதபாசம்	சிதாபாசம்
௫௫	௬	முன்ருடு	மூன்ருடு
,,	௧௩	முன்ருடு	மூன்ருடு
௫௬	௯	வாக்யம்	வாகாயம்
,,	௧௫	சினமாத்திர	சின்மாத்திர
௫௭	௧௫	தவ்வியாசிருத	தவ்வியாகிருத
௫௮	௨	முத்தனுனென	முத்தனுனேன்
௬0	௨0	உம்பளஞ்	உப்பளஞ்
௬௧	௯	போலியான்	போல்யான்
௬௩	௧௯	முழுமுதுங்	முழுதுங்
,,	௨௨	மடையதக்க	மடையத்தக்க
௮௪	௭	பாராது	பார்த்து

பொருள்பேதியாது திருத்திக்கொள்க.